# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம், மழை

சுடர் 30 | கதிர் 161 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 24, வியாழக்கிழமை 07.05.2015


## பிரிட்டன் தேர்தலில் தமிழர் இருவர், சிங்களவர் இருவர்

கொழும்பு, மே 7
பிரிட்டனில் இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர்கள் இருவர், தொழிற்கட்சி மற்றும் தேசிய லிபரல் கட்சி சார்பில் இரு வேறு தொகுதிகளில் போட்டியிடுகின்றனர். இவர்களை விட இலங்கைச் சிங்களவர்கள் இருவரும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.
பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இதனால் பிரிட்டன் தேர்தல் களம் பரபரப்பானநிலையில்உள்ளது. தொழிற்கட்சியின் சார்பில், இலங்கைத் தமிழரான உமா குமரன், ஹரோ கிழக்குத் தொகுதியில் போட்டியிடுகின்றார். இவரை எதிர்த்து பிரிட்டனின் தற்போதைய ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் பக்.02

## "இலங்கைக்கு அழுத்தம் தரவில்லை அமெரிக்கா"
*- மைத்திரிபால*

கொழும்பு, மே 7
இலங்கை எந்த நாடுகளுடன் உறவாடுகின்றது என்பது தொடர்பில் அமெரிக்கா எந்தக் கவலையும் கொள்ளவில்லை. அது தொடர்பில் அமெரிக்க அரசு எந்த அழுத்தத்தையும் இலங்கைக்கு வழங்கவில்லை. – இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு கடந்த வார இறுதியில் இரு நாள் பயணமாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி வந்து சென்றிருந்தார். அதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் சந்தித்துப் பேசியிருந்தார். அதன்பின்னர் நேற்று முன்தினம் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே ஜனாதிபதி மைத்திரிபால இவ்வாறு கூறினார்.
"இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக, அமெரிக்காவிடம் இருந்து எமது அரசு எந்தவொரு அழுத்தத்தையும் எதிர்கொள்ளவில்லை. இலங்கையில் ஜனநாயகமும், மனித பக்.02



## கற்றுக்கொண்ட பாடம்; கைகூப்பினார் மஹிந்த

கொழும்பு, மே 07
ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும், முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பில் இருவரும் ஒருவருக்கு ஒருவர் கைகுலுக்கிக் கொள்ளவில்லை. மாறாக இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கைகூப்பி வணக்கம் தெரிவித்துக் கொண்டனர்.
ஆறு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் வேட்பு மனுத் தாக்கலின் போதே இருவரும் இறுதியாகச் சந்தித்துக் கொண்டனர். அப்போது மஹிந்த ராஜபக்ஷ மைத்திரிக்கு கைலாகு கொடுக்க முயன்றார். அதைத் தவிர்த்த மைத்திரி கை கூப்பி வணக்கம் தெரிவித்தார். பக்.02

# முடிவு ஏதுமின்றி முடிந்தது மைத்திரி–மஹிந்த சந்திப்பு

## மஹிந்த பிரதமர் வேட்பாளர் என்ற கோரிக்கை ஜனாதிபதி மைத்திரிபாலவால் முற்றாக நிராகரிப்பு

கொழும்பு, மே 7
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பு தீர்மானமிக்க எந்த முடிவும் எட்டப்படாது முடிந்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பின் முக்கிய கோரிக்கையாக இருந்த பிரதமர் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பால் உடனடியாகவே நிராகரிக்கப்பட்டுள்ளது.
"நாடாளுமன்றத் தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்."– என்று நேற்றைய சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த, முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.
அதேவேளை, குறித்த சந்திப்பு வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்றும் அமைச்சர் துமிந்த திசாநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் இடையே நேற்று மதியம் 1.45 மணியளவில் சந்திப்பு நடைபெற்றது. நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. அதில் செய்தி பக்.02

## இந்த ஆண்டும் சுடரேற்றுவேன்
### விசாரணையில் கூறியதாக ரவிகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 7
இந்த வருடமும் மாவீரர் நாளன்று ஈகச்சுடர் ஏற்றுவேன். எங்கள் உறவுகளை – பிள்ளைகளை – நினைவுகூர்வதை யாராலும் தடுக்க முடியாது. – இவ்வாறு பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்ததாகத் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்.
கடந்த ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினமன்று ஈகச்சுடரேற்றியமை தொடர்பில், விசாரணைக்கு வருமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரனுக்கு பொலிஸாரால் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அதற்கமைய முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு, வாக்குமூலம் பக்.02


வடக்கின் வரி வருமானம் மாதம் 2 கோடி மத்திக்கு
பக்கம் 03 >>

போலி பற் சிகிச்சை நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை
பக்கம் 04 >>

அமைச்சர்கள் கைது திட்டமிட்ட சதியாம்
பக்கம் 05 >>

கென்யாவில் கொள்ளையர்கள் அட்டூழியம்
பக்கம் 05 >>


## விபூசிகா மீண்டும் சிறுவர் இல்லத்தில்

யாழ்ப்பாணம், மே 7
இருக்கும் வீட்டில் பாதுகாப்பு இல்லை. தங்குவதற்கு வேறு வீடு இல்லை என்று நன்னடத்தை அதிகாரியிடம் ஜெயக்குமாரி தெரிவித்ததை அடுத்து சிறுமி விபூசிகா நீதிமன்ற அனுமதியுடன் சிறுவர் இல்லத்தில் தங்கி கல்வியைத் தொடரவுள்ளார்.
புலிகளின் மீளெழுச்சி முயற்சிக்கு உதவினார் பக்.02

## ஜோன்ஸ்டன் எம்.பிக்கு 11 வரை விளக்கமறியல்

கொழும்பு, மே 7
நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
நிதி மோசடி விசாரணைப் பிரிவு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நேற்று வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் நேற்று குருநாகல் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோதே எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
மஹிந்த அரசின் ஆட்சிக் காலத்தில், பக்.02

## அடாத்தாக முளைத்த விகாரைக்கு அங்கீகாரம் கொடுத்தது அமைச்சு
### சிங்கள மக்கள் குடியேறிய நாவற்குழிப் பகுதியில்

யாழ்ப்பாணம், மே 7
நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள மக்களால், எந்தவொரு அனுமதியும் பெறப்படாது அமைக்கப்பட்ட விகாரை, பௌத்த சாசன அமைச்சின் கீழ் அண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு ஏற்கனவே அத்திபாரம் வெட்டப்பட்ட நிலையிலிருந்த வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில், ஒரு தொகுதி சிங்கள மக்கள் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அத்துமீறிக் குடியேறினர். அவர்கள் எந்தவொரு பக்.02

## கனகாம்பிகை அம்மன் ஆலய வீதிக்கு விரைவில் விடுதலை
### உறுதியளித்தார் மீள்குடியேற்ற அமைச்சர்



யாழ்ப்பாணம், மே 7
இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் கிழக்குப் பகுதியை ஆலய நிர்வாகத்தினரிடம் கையளிப்பதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்துள்ளார் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்.
நேற்று இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகத்தைத் திறந்துவைப்பதற்காக கிளிநொச்சி வந்திருந்த அமைச்சர் குறித்த நிகழ்வு முடிவடைந்ததும் இரணைமடு கனகாம்பிகை அம்மனைத் தரிசிப்பதற்கு ஆலயம் சென்றிருந்தார்.
அதன்போது அவர் இராணுவத்தினரின் வசமுள்ள ஆலயத்தின் கிழக்கு வீதியை அவதானித்தார். அந்த வீதியின் பக்.02

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முடிவு எதுமின்றி முடிந்தது மைத்திரி-மஹிந்த சந்திப்பு

சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்குஅனுமதிவழங்கப்படவில்லை. சந்திப்பின் முடிவில், ஜனாதிபதி மைத்திரிபால ஊடகங்களைச் சந்திக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஊடகங்கள் கேள்வி எழுப்பிய போதும் அவர் பதிலளிக்காது சென்றுள்ளார்.

இந்தச் சந்திப்பில் மஹிந்த ராஜபக்ஷ தரப்பில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் குமார வெல்கம ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

"சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. குறித்த கோரிக்கை மைத்திரி தரப்பால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஐந்து கோரிக்கைகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்வைக்கப்பட்டன. அவற்றில் இரண்டு கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு விட்டன."– என்று அவர் கூறினார்.

"முதலாவதாக உள்விளூராட்சி சபைகளை கலைக்காமல் நீடித்தல்; இல்லை என்றால் அனைவரும் ஒன்றிணைந்து உள்ளூராட்சித் தேர்தலுக்குச் செல்வோம் என்று கோரினோம். ஆனால் இதற்குப் பதில் வழங்கப்படவில்லை. இரண்டாவதாக இந்த நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்த்துள்ள பிரதமர் வேட்பாளர் விடயம். இந்தக் கேள்விக்கும் எமக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. ஆனால் எதிர்காலத்தில் இது கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

அண்மையில் ஊழல் மோசடி குறித்து வர்த்தமானி அறிவித்தல் விடுத்துள்ளனர். அதில் அரசியல் தலையீடு உள்ளதாகவும், அந்த அரசியல் தலையீட்டை நீக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தோம். அதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

தொடர்ந்து இத்தகைய பேச்சில் ஈடுபடுவது என்ற முடிவுக்கு வந்துள்ளோம். ஆனாலும் திகதி குறித்து தீர்மானிக்கவில்லை. பிரதான பிரச்சினையான பிரதமர் வேட்பாளர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைத்துவிடும். – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை இந்தச் சந்திப்புத் தொடர்பில் அமைச்சர் துமிந்த திசாநாயக்கா கருத்துத் தெரிவிக்கும் போது,

"சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருக்கும், கட்சியின் ஆலோசகருக்கும் இடையேயான ஒரு சந்திப்பாகவே இது அமைந்தது. இதை ஒரு கட்சி சார்பான கூட்டமாகவே நாம் நோக்குகின்றோம். அந்த வகையில் இந்தக் கூட்டம் வெற்றியளித்துள்ளது. கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் கட்சியின் அபிவிருத்தி போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன."– என்று கூறினார்.

"கட்சியின் பிரதமர் வேட்பாளர் நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதா?" – என்று ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த அமைச்சர், "இன்றைய (நேற்றைய) கூட்டம் கட்சிக் கூட்டமாகவே அமைந்தது. இந்த விடயங்கள் தொடர்பில் நிறைவேற்றுச் சபையில் தீர்மானிக்கப்படும்."– என்றார்.

அதேவேளை, இந்தச் சந்திப்புக்கு முன்னதாக வெளியாகியிருந்த தகவல்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து அகற்றி அந்தப் பதவியை மஹிந்த ராஜபக்ஷவுக்கு மைத்திரிபால வழங்கவுள்ளார் என்ற சாரப்பட வெளியாகியிருந்தன. இந்தப் பின்னணியில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு (சந்திப்புக்கு முன்னர்) ஓர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கையில் அரசால் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற எந்தவொரு நடவடிக்கை தொடர்பிலும் இந்தப் பேச்சில் கலந்துரையாடப்பட மாட்டாது. இந்த பேச்சு சிறிலங்கா சுதந்திரக்கட்சி செயற்பாடுகளை மட்டுப்படுத்தியதாக அமைந்திருக்கும் என்று குறிப் பிடப்பட்டிருந்தது.

"ஜனாதிபதி என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திப்பதற்கு எந்தவொரு நபரும் அல்லது அமைப்பும் கோரிக்கை விடுத்தால் அதற்கு சந்தர்ப்பம் அளிப்பது சாதாரணமாகும். இது தொடர்பில் சிற்சில நபர்களினால் கூறப்படுகின்ற கருத்துக்களை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முழுமையாக நிராகரிக்கின்றார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படும் போது இவ்வாறான சந்திப்பு, விசேடமானதாக கருதப்படாது.

அத்துடன் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடத்தப்பட்ட ஜனாதிபதி தேர்தலின் போது தன்மீது நம்பிக்கை வைத்த 63 இலட்சத்துக்கு அண்மித்த வாக்காளர்களின் கௌரவம் மற்றும் நம்பிக்கைக்கு எவ்விதமான இழுக்கும் ஏற்படாத வகையில் ஜனாதிபதியினால் இந்த பேச்சு முன்னெடுக்கப்படும்."– என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(ந–5)

கரின் இல்லத்தில் இடம்பெறும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர், நாடாளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

பி.ப. 1.30 மணிக்கு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 45 நிமிடங்களுக்கு முன்னதாகவே, மைத்திரிபால சிறிசேன சந்திப்புக்காக வந்துவிட்டார். மஹிந்த ராஜபக்ஷவோ 10 நிமிடங்கள் தாமதமாக 1.40 மணியளவில் சந்திப்புக்காக, நாடாளுமன்ற வளாகத்துக்கு வந்தார்.

பி.ப 2.50 மணியளவில் ஜனாதிபதி மைத்திரிபால நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினார். அதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினார்.

இந்தச் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன், முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, பந்துல குணவர்த்தன, ஜி.எல். பீரிஸ், குமார வெல்கம ஆகியோரும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, துமிந்த திசாநாயக்கா, ஹர்ஷ டீ சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர். இவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோரும் பங்குபற்றினர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இடம்பெற்றது. அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, வேட்புமனுத் தாக்கல் செய்ய வந்திருந்த சகல ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் வரிசையாக கைலாகு கொடுத்துக்கு கொண்டு வந்தார். இதன் போது மைத்திரிபால சிறிசேனவுக்கும் அவர் கைலாகு கொடுக்க முயன்றார்.

ஆனால் மைத்திரிபால சிறிசேன கைலாகு கொடுக்கவில்லை. மாறாக கை கூப்பி வணக்கம் தெரிவித்தார். அதன் பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த மைத்திரிபால, மஹிந்தவுக்கு கை கொடுத்து எனது கரத்தை கறைபடியச்செய்ய விரும்பவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். (ந–5)

## பிரிட்டன்

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பொப் பிளக்மன் போட்டியிடுகின்றார்.

மற்றொரு தொகுதியான ஈூசிலிப்பில், இலங்கைத் தமிழரான சொக்கலிங்கம் யோகலிங்கம் தேசிய லிபரல் கட்சி சார்பில் போட்டியிடுகின்றார்.

மேலும், ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில், வடகிழக்கு ஹம்ப்செயர் தொகுதியில், ரணில் ஜெயவர்த்தன, கேம்பிரிஜ் தொகுதி யில் சமில பெர்னான்டோ என்ற இரு சிங்களவர்கள் போட்டியிடு கின்றனர். (ந–5)

## இலங்கைக்கு

உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையே அமெரிக்கா விரும்புகிறது.

இலங்கை எந்த நாட்டுடன் உறவு வைத்திருக்கிறது என்பது குறித்தெல்லாம் ஜோன் கெரி கரிசனையோ கவலையோ வெளியிடவில்லை."– என்று ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்தார். (ந–5)

## கற்றுக்கொண்ட

அந்த அனுபவத்தாலோ என்னவோ நேற்றைய சந்திப்பில் மஹிந்த கைலாகு கொடுக்க எத்தனிக்கவில்லை. இருவரும் கைகூப்பிக் கொண்டனர்.

ஜனாதிபதி மைத்திரிக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் இடையிலான சந்திப்பு பெரும் இழுபறியின் பின்னர் நேற்று ஒருவாறு நடந்தேறியது. சந்திப்பு சபாநாய

## ஜோன்ஸ்டன்

நுகர்வோர் விவகார அமைச்சராக இருந்தவர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ. அவர் அமைச்சராக இருந்த காலத்தில், அவரது அமைச்சின் கீழ் இயங்கிய 'லங்கா சதொச' நிறுவனத்தில் 5.2 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்து அதற்கான கொடுப்பனவுகளைச் செலுத்தவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் நிதி மோசடி விசாரணைப் பிரிவு பொலிஸா ரால், அவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். காலை 10.15 மணியிலிருந்து பி.ப. 3.15 மணிவரையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது. விசாரணையின் பின்னர், அவரைப் பொலிஸார் கைது செய்தனர். கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் உடனடியாகவே முற்படுத்தப்பட்டார்.

இதன் போது நாளை வரை (நேற்று) விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன் நாளை (நேற்று) குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை 10.45 மணியளவில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முற்படுத்தப்பட்டார். இதன் போது நீதிவான், அவரது விளக்கமறியலை எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில் நீடித்தார். (ந–5)

## வீதியோரம் நின்ற டிராக்டரை மோதித் தள்ளியது அரச பஸ்





யாழ்ப்பாணம், மே 7

பழுதடைந்த அரிவுவெட்டும் இயந்திரத்தை ஏற்றியவாறு முல்லைத்தீவு பழைய முறிகண்டி பகுதியில் நின்ற டிராக்டரை அரச பஸ் மோதியதில் இரு வாகனங்களும் சேதங்களுக்குள்ளாகின. இந்த சம்பவம் நேற்று அதிகாலை ஏ – 9 வீதியில் நடந்துள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த அரச பஸ் வீதி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிராக்டரை மோதித் தள்ளியது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந–21)

## அடாத்தாக

அனுமதியும் பெற்றுக் கொள்ளாது, அடாத்தாகப் பிடித்த காணிகளில் வீடுகளைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அத்துடன் அவர்கள் தங்கியுள்ள பகுதியில் விகாரை ஒன்றையும் அமைத்தனர். இந்த விகாரை அமைப்பதற்கும் எந்தவொரு முறைப்படியான அனுமதியும் பெற்றுக் கொள்ளப்படவில்லை. குறித்த விகாரையைப் பதிவு செய்வதற்காக, தென்மராட்சி பிரதேச செயலகத்தை, விகாரையின் பிக்கு அணுகியுள்ளார். இதன் போது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இதற்கான அனுமதி வழங்குவதற்கான அதிகாரம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதன் பின்னர், பௌத்தசாசன அமைச்சின் கீழ், குறித்த விகாரை பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது அங்கு 5 குடும்பங்கள் வரையிலேயே நிரந்தரமாகத் தங்கியுள்ளன. ஆனாலும் 72 குடும்பங்கள் வரையில் பதிவுகளை மேற்கொண்டுள்ளன. இதனை விட, ஏற்கனவே அத்திபாரம் வெட்டப்பட்ட நிலையிலிருந்த வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளில் அங்கு தங்கியுள்ள சிங்கள மக்கள் ஈடுபட்டுள்ளனர். (ந–5)

## இந்த

வழங்குவதற்கு மாகாணசபை உறுப்பினர் சென்றிருந்தார். சுமார் 2 மணி நேரம் விசாரணை இடம் பெற்றது.

விசாரணையின் போது, மாவீரர் நாளன்று ஈகச்சுடர் ஏற்றினீர்களா? ஊடகங்களில் நீங்கள் ஈகச்சுடர் ஏற்றியதாக வெளிவந்த ஒளிப்படங்கள் உண்மையானதா? இவ்வாறு செய்யுமாறு யாராவது தூண்டினார்களா? நீங்கள் யாரையாவது தூண்டினீர்களா? ஊடகங்களுக்கு ஒளிப்படங்கள் யார் வழங்கினார்கள்? ஈகச்சுடரேற்றும் போது ஒளிப்படம் எடுத்தது யார் ? தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாளை அனுஷ்டிக்கக் கூடாது என்பது உங்களுக்குத் தெரியாதா? என்றவாறான பல கேள்விகளை பொலிஸார் எழுப்பியதாக மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

மாவீரர் நாளன்று ஈகச் சுடரேற்றியது நான்தான் என்று குறிப்பிட்டேன். ஊடகங்களில் வெளிவந்த ஒளிப்படங்கள் உண்மையானவை என்றும், ஒளிப்படங்களை எனது மனைவிதான் எடுத்தார் என்றும் இவ்வாறு ஈகச்சுடர் ஏற்றுமாறு யாரும் தூண்டவில்லை என்றும் பதிலளித்தேன்.

எங்கள் பிள்ளைகளை – உறவுகளை நினைவு கூர்வதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. அதனை யாரும் மறுக்க முடியாது என்றும் பொலிஸாருக்குத் தெரிவித்தேன். இதன் போது பொலிஸார், உங்கள் குடும்பத்தினரும் யாராவது மாவீரர்களா? என்று கேள்வி எழுப்பினர். அதற்கு நான், எங்கள் குடும்பத்தில் மாத்திரமல்ல இங்குள்ள எல்லாக் குடும்பங்களிலும் மாவீரர்கள் இருக்கின்றனர். இந்த வருடமும் எங்கள் உறவுகள் நினைவாக மாவீரர் நாளன்று ஈகச்சுடரேற்றுவேன் என்று பொலிஸாரிடம் தெரிவித்ததாக ரவிகரன் 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார். (ந–5)

## கனகாம்பிகை

பயன்பாடுகள், முக்கியத்துவம் குறித்து ஆலய நிர்வாகத்தினரால் அமைச்சருக்கு எடுத்துச் கூறப்பட்டது.

ஆலயத்தைப் பார்வையிட்ட அமைச்சர் குறித்த பகுதி ஆலயத்துக்கு மிக முக்கியம் வாய்ந்ததாகும் என்று குறிப்பிட்டதுடன், அதை ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன் ஆகியோரும் சென்றிருந்தனர். (ந–21)

## விபூசிகா

என்று குற்றஞ்சாட்டப்பட்டு பா.ஜெயக்குமாரி கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பூசா சிறையில் அடைக்கப்பட, அவரது மகளான விபூசிகா சிறுவர் இல்லத்தில் நீதிமன்ற உத்தரவின்படி தங்க வைக்கப்பட்டார். இது நடந்து ஒரு ஆண்டுக்குப் பின்னர் கடந்த மார்ச் மாதம் ஜெயக்குமாரி பிணையில் விடுவிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் நீதிமன்றை நாடி தனது மகளைத் தன்னுடன் அழைத்துச் சென்றார்.

இந்தநிலையில் தற்போது அவர் தனது மகளை மீளவும் சிறுவர் இல்லத்திலேயே தங்க வைக்குமாறு கண்டாவளை சிறுவர் நன்னடத்தை அதிகாரியிடம் கோரினார். தர்மபுரத்தில் உள்ள தமது வீட்டில் அனைத்துப் பொருள்களும் திருடப்பட்டுள்ளன என்றும், மகளை அங்கு தங்க வைத்திருப்பது பாதுகாப்பில்லை என்றும் அவர் நன்னடத்தை அதிகாரியிடம் தெரிவித்துள்ளார். நன்னடத்தை அதிகாரி இதனை சட்டத்தரணி எஸ்.சிலபாலசுப்பிரமணியம் ஊடாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். ஜெயக்குமாரியின் கோரிக்கை ஏற்றுக்கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் விபூசிகா மீண்டும் சிறுவர் இல்லத்தில் தங்கிக் கல்வியைத் தொடர நேற்று அனுமதியளித்தார். (ந–21)

# வடக்கின் வரி வருமானம் மாதம் 2 கோடி மத்திக்கு

## வடக்கு மாகாணத்தின் வருமான வரித் திணைக்களம் இயங்காதுள்ளதால் இந்தநிலை

**வலி.வடக்கு, மே 7**

**வடக்கு மாகாண சபையின் வருமான வரித் திணைக் களம் இயங்காத நிலையில் வட மாகாண சபைக்குச் சேர வேண்டிய வருமானமான சுமார் 2 கோடி ரூபா மாதாந்தம் மத்திய அரசுக்குச் செல்கின்றது என்று வட மாகாண சபையின் உறுப்பினர்கள் குற்றம் சாட்டுகின் றார்கள்.**

வட மாகாண சபையால் வருமான வரித் திணைக்களம் தொடர்பான நியதி சட்டம் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் உருவாக்கப்பட்டது. வட மாகாண ஆளுநரின் அனுமதி பெறப் பட்டது. கடந்த ஆண்டு நவம்பவர் மாதம் குறித்த நியதிச்சட்டம் வர்த் தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

குறித்த நியதிச் சட்டத்துக்குரிய வரு மான வரித் திணைக்களத்தை ஆரம் பிப்பதற்குரிய ஏற்பாடுகள் அப் போதைய வடக்கு மாகாண சபை யின் பிரதம செயலாளரால் மேற் கொள்ளப்பட்டிருந்தது. குறித்த திணைக்களத்துக்குரிய ஆணையா ளர் மற்றும் ஊழியர்கள் ஆகியோரை நியமிக்குமாறு முகாமைத்துவ சேவை கள் திணைக்களத்துக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டி ருந்தது.

புதிய பிரதம செயலாளர் பதவியேற்ற பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு நேரடியாகச் சென்று ஆணையாளர் மற்றும் ஊழியர்களை நியமிக்குமாறு கோரி யிருந்தார். இருப்பினும் இதுவரை ஆணையாளர், ஊழியர்கள் நிய மிக்கப்படாமையால் வருமான வரித் திணைக்களம் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இது சம்பந்தமாக வட மாகாண அவைத் தலைவரிடம் கேட்ட போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதுடன் வட மாகாண சபையின் பிரதம செயலாளர் உட் பட அனைவருக்கும் இது சம்பந் தமான கடிதங்கள் அனுப்பப்பட்டுள் ளன என்று தெரிவித்தார். (ந-5,86)

## யானைகள் அட்டகாசம்

வவுனியா, மே 7

வவுனியா, வடக்கு கொல்லபுளியங் குளம் கிராமத்துக்குள் நேற்றுமுன் தினம் இரவு புகுந்த யானைகள் பயன் தரு மரங்களை அழித்துள்ளன.

ஊர்மனைக்குள் புகுந்த யானைகள் மிக நீண்ட நேரமாக நின்று தென்னை பலா, மா போன்ற பல பயன்தரு மரங் களை அழித்துள்ளன என்று தெரி விக்கப்படுகின்றது. (ந)

## கூட்டுறவு பெரியாருக்கு சிலை அமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 7

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத் தின் திருவுருவச் சிலை ஒன்றை வீரசிங்கம் மண்டப வளாகத்தில் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவாளர் கள் நடத்திய மே தினப் பொதுக் கூட் டத்தில் இந்தக் கோரிக்கை விடுக் கப்பட்டது.

வடமாகாணக் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் தலைவர் எஸ். சிவகுமார் கூட்டத்தில் உரையாற்றும் போது "கூட்டுறவின் தந்தை பெரி யார் வீரசிங்கம் அவர்களின் திருவு ருவச் சிலையை மண்டபத்துக்கு முன்பாக அமைத்து திரைநீக்கம் செய்ய வேண்டும். பெரியாரின் நினை வாக இந்தச் சிலையை அமைப்ப தற்கு மாவட்ட கூட்டுறவுச் சபையினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்."– என்று கோரிக்கை விடுத்தார். (ந-17)

## வளலாய் மேற்கில் ப.நோ.கூ. சங்க கிளை அமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே.7

வளலாய் மேற்கில் மீளக்குடிய மர்ந்த மக்களின் அத்தியாவசியத் தேவைகள் கருதி அங்கு கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையம் ஒன்றை திறக்குமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அந்தப் பிரதேசத்தில் ஏற்கனவே அச்சுவேலி பலநோக்குக் கூட்டுற வுச் சங்கத்தின் விற்பனை நிலையம் செயற்பட்டு வந்தது. தற்போது இந்த விற்பனைநிலையக்கட்டடம்தரைமட் டம் ஆக்கப்பட்டுள்ளது. இந்த விற் பனை நிலையக் கட்டடத்தை அதே இடத்தில் அமைத்துச் சங்கக்கிளையை மீண்டும் ஆரம்பித்து வைப்பதற் கான சூழல் தற்போது இல்லை என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது இந்தப் பகுதியில் குறைந் தளவு மக்களே மீளக்குடியமர்ந்துள் ளனர். அவர்கள் வளலாய் கிழக்கில் உள்ள கூட்டுறவுக் கிளை நிலையம் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர் என்றும் தெரி விக்கப்பட்டது. (ந-17)

## இலங்கை மத்திய வங்கியின் பிராந்தியக் கிளை கிளிநொச்சியில்

நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது



யாழ்ப்பாணம், மே 7

இலங்கை மத்திய வங்கியின் 6 ஆவது பிராந்திய காரியாலயம் நேற்றுக் கிளி நொச்சி, அறிவியல் நகரில் மீள்குடி யேற்ற அமைச்சர் டி.என். சுவாமி நாதனால் திறந்து வைக்கப்பட்டது.

விவசாயம், கால் நடைவேளாண்மை கடல்தொழில், மைக்ரொ தொழில் முயற்சி என்பவற்றுக்கு ஊக்கமளித்து மக்களின் பொருளாதார அனுகூலங் களுக்குச் சந்தர்ப்பங்களைப் பெற் றுக் கொடுப்பதையும், மக்களுக் கான சிறு மற்றும் நடுத்தர சேவை களை வழங்குவதையும் நோக்கா கக் கொண்டே இந்தக் காரியாலம் திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் தெரிவுசெய்யப்பட குடும்பங்களுக் கான சிறிய மற்றும் நடுத்தர உதவி கள் வழங்கப்பட்டதோடு புதிய கணக் குகளும் ஆரம்பிக்கபட்டன.

நிகழ்வுக்கு மீள்குடியெற்ற அமைச் சர் டி.என் சுவாமிநாதன்,நிதி விவ காரங்கள் மற்றும் கொள்கை செயற் படுத்தல் பிரதி அமைச்சர் ஹர்ச டி செல்வா, மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன், வடக்குமாகாண ஆளுநர் பளிகக்கார, நாடாளுமன்ற உறுப்பி னர் சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அரு மைநாயகம், மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் களான பி.டி. டபிள்யூ. சில்வா, சமர சிறி, பி.என். வீரசிங்க மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அதேவேளை மாத்தறை, மாத் தளை, அனுராதபுரம், திருகோண மலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட் டங்களில் மத்திய வங்கியின் பிராந் தியக் காரியாலயங்கள் இயங்கி வரு கின்றன. (ந-21)

## மீள்குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், மே 07

இரு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர் பிலான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர் பில், மீள்குடியேற்ற அமைச்சு மற் றும் மீள்குடியேற்ற அதிகார சபை என்பன இணைந்து, யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் களை நடத்தி வந்தன. கடந்த மார்ச் மாதம் இறுதி வாரத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இரண்டு தடவைகள் கலந்துரையாடல் இடம் பெற திகதி குறிப்பிடப்பட்டு ஒத்தி வைக் கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நாளை காலை 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத் தில் மீள்குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெறவுள் ளது. இந்தக் கலந்துரையாடலி லேயே, வலி.வடக்கில் அடுத்த கட்ட மாக மீள்குடியமர்வு எந்தப் பகுதி களை விடுவிப்பது என்பது தொடர் பில் ஆராயப்படவுள்ளது. அத்துடன் ஏற்கனவே மீள்குடியமர்வுக்கு அனு மதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எவ் வாறான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது என்பது தொடர்பிலும் நாளைய கூட்டத்தில் கலந்துரை யாடப்படவுள்ளது என்றும் தெரி விக்கப்படுகின்றது.

அதேவேளை, மீள்குடியேற்ற அதி கார சபையின் அலுவலம் யாழ். மாவட்ட செயலகத்தில் உத்தி யோகபூர்வமற்ற நிலையில் தற் போது செயற்பட்டு வருகின்றது. நாளைய தினம் குறித்த அலுவலகம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக் கப்படும் எனத் தெரிகின்றது.(ந-5)

## பாண் விற்ற இளைஞன் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

கைதடி, மே 7

முகத்தைத் துணியால் மறைத்தவாறு இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் ஓட்டோவில் பாண் வியாபாரம் செய்த இளைஞரைத் தாக்கியுள்ளனர். இந்தச் சம் பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை அதிகாலை 5.30 மணிக்கு கைதடி தெற்கு பொது நூலகத்துக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் யாழ்.கொட்ட டியைச் சேர்ந்த பாண் வியாபாரி யான இளைஞன் தலையில் படு காயமடைந்த நிலையில் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப் பட்டது. அவரது ஓட்டோக் கண்ணா டிகள் அடித்து நொருக்கப்பட்டி ருந்தன என்றும் தெரிவிக்கப்படு கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலி ஸார் விசாரைணகளை மேற் கொண்டனர் என்றும் கூறப்பட் டது. (ந-288)

## யாழ். மாநகர சபை முறைகேடுகள் தொடர்பில் பொருத்தமான பதில்கள் தேவை

வடக்கு மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி முதலமைச்சருக்கு கவனவீர்ப்புக் கடிதம்

அச்சுவேலி, மே 7

யாழ்.மாநகர சபையில் இடம் பெற்ற விதிமுறைகளுக்குப் புறம் பான முறைகேடான சம்பவங்கள் தொடர்பில் என்னால் கேட்கப்பட்ட 13 கேள்விகளுக்கும் உள்ளூராட் சிக்குப் பொறுப்பான முதலமைச்ச ரிடம் இருந்து பொருத்தமான பதில் களோ அல்லது உரிய நடவடிக் கையோ கிடைக்கவில்லை. சபை யின் கேட்கப்படும் கேள்விகளும் பொருத்தமான பதில் மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு அவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.– இவ் வாறு வடக்கு மாகாண சபை உறுப் பினர் அ.பரஞ்சோதி வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ. கே. சிவஞானத்திடம் கவனவீர்ப்பு கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

"அவையில் கேட்கப்பட்ட கேள்வி களுக்குச்சரியானபதில்கள்அளிக்கப் படாமை சம்பந்தமான கவனவீர்ப்பு" என்ற தலைப்புடன் அ.பரஞ்சோதி அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத் தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

முதலாவது பேரவையின் 2 ஆவது கூட்டத்தொடரில் (2014ஆம் ஆண் டுக்கான வரவு – செலவுத்திட்டம்) பிரஸ்தாபித்ததுக்கு அமைவாக யாழ்.மாநகர சபையின் நடைபெற் றது எனக் கருதப்படும் முறைகேடு கள் சம்பந்தமாக எந்தவித நட வடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில் நான் தொடராகக் கடந்த மூன்று அமர்வுகளில் முதலமைச் சரை நோக்கி யாழ். மாநகர சபை சம்பந்தமாக 13 கேள்விகளையும் கட்டட மணல் விநியோகம் சம்பந்த மாக ஒரு கேள்வியையும் கேட்டி ருந்தேன். அப்போது பொது மக் களிடம் இருந்து சாட்சியங்களைப் பெறும் நோக்கமாகப் பகிரங்க விசா ரணை ஒன்றை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டிருந்தேன்.

இதுவரை சில நடவடிக்கைகள் எடுக் கப்பட்டதாகச் சபையில் கூறப்பட் டாலும் அந்த விசாரணைகளின் அறிக்கை வாசிக்கப்பட்டபோது தெளி வற்ற நிலையிலேயே இருந்துள் ளது. அத்துடன்ஒவ்வொரு விடயங் களிலும் தனித்தனியாக ஒவ்வொரு விடயமாக எடுத்து பதில் கூறப் பட்டமை அவதானிக்கப்பட்டுள் ளது. இந்த நிலைமையானது விட யங்கள் வேண்டுமென்றே தவிர்க் கப்படுவதாக எண்ணத்தோன்று கிறது. ஆகவே எதிர்காலத்தில் இதற் கான பதில்களை அளிக்கும்போது ஒவ்வொரு விடயங்களுக்கும் தனித் தனியாக தெளிவான பதில் களை அளிக்க வகைசெய்யுமாறு வேண்டுகின்றேன்."– என்றுள்ளது.

அத்துடன் யாழ்.மாநகர சபையின் முறைகேடுகள் தொடர்பான 13 முறைகேடுகள் கொண்ட அட்ட வணைப் பட்டியலும் இணைக்கப் பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப் பட்டது. (ந-11)

cmyk

## மரம் தறித்து கடத்தியவர் பொலிஸாரிடம் சிக்கினார்

வவுனியா, மே 7

பயன்தரு மரங்களைத் தறித்து டிராக்டரில் கடந்த முற்பட்ட ஒருவர் வவுனியா, பூவரசங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை வவுனியா பம்பைமடுக் காட்டுப் பகுதியில் வீட்டுக் கட்டுமானத்துக்குப் பயன்படுத்தக்கூடிய 61 மரங்களைத் தறித்துக் கடத்த முயன்றபோதே பொலிஸார் அங்கு சென்று குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரை கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-421)



வவுனியா ஏ-9 வீதியில் அமைக்கப்பட்டுள்ள தனியார் பஸ் நிலையம் திறந்து வைப்பதற்காகக் காத்திருக்கின்றது. (ற)

## ஆலய உண்டியல் திருட்டு

வவுனியா, மே 7

வவுனியா நெளுக்குளம் முருகன் ஆலயத்தின் முன்றிலில் இருந்த உண்டியல் திருடர்களால் திருடப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. வாளால் அறுக்கப்பட்டு குறித்த உண்டியல் திருடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

அதேவேளை, வவுனியாவில் பண்டாரிக்குளம் அம்மன் ஆலயம், தவசிக்குளம் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றிலும் அண்மையில் திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-402)

## முல்லைத்தீவு சந்தைக்கு மீன் கொண்டுவர கோரிக்கை

முல்லைத்தீவு, மே 7

முல்லைத்தீவுக் கடலில் பிடிக்கப்படும் மீன்களைக் கடற்கரையில் விற்பனை செய்யாது முல்லைத்தீவு நகர சந்தையில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென முல்லைத்தீவு நகர அபிவிருத்திக் குழு, முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்படும் மீன்கள் கடற்கரையிலேயே விற்பனை செய்யப்படுகின்றன. மீள் குடியேற்றத்தின் பின்னர் இந்நிலைமை கூடுதலாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக நகர வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன், பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமல் போகின்றது. முல்லைத்தீவு சந்தையில் நல்ல மீன்கள் இல்லாமையால், மக்கள் நல்ல மீன்களைப் பெறமுடியாதுள்ளது.

இதனால் முல்லைத்தீவுச் சந்தைக்கு வருகை தரும் மக்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. அனைத்து மீன்களையும் முல்லைத்தீவுச் சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் முல்லைத்தீவு நகரத்தின் வளர்ச்சி கூடுமெனவும் நகர அபிவிருத்திக் குழு தனது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளது. (ற)

# போலி பற் சிகிச்சை நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை

### விரைவாக எடுக்குமாறு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாகவுள்ள, போலி பல் வைத்திய நிலையங்களைக் கட்டுப்படுத்தத் தவறிய யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பாலசூரியவை, குறித்த விடயத்தை கையாள வேண்டாம் என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க பணித்தார். அத்துடன் இந்த விடயத்தை கையாண்டு உடனடியாக தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு, யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு பணிப்புரை விடுத்தார்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகப் போலி பல் வைத்திய நிலையங்கள் இயங்கி வருகின்றன. எந்தவொரு பல் வைத்திய நிபுணரும் இன்றி, இவை செயற்பட்டு வருகின்றன. இவர்கள் சட்டவிரோதமாக இதனைச் செய்து வருகின்றனர். எனவே இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பொலிஸ் நிலையத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் முறைப்பாடு செய்தோம். நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று வைத்தியர்கள், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குச் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து, யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பரிசோதகரிடம் என்ன நடந்தது என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கேட்டார். அதற்கு அவர், அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது – என்றார். உடனே, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், உண்மையில் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதா? என்று வைத்தியரிடம் கேள்வி எழுப்ப, அவர் இல்லை எனப் பதிலளித்தார்.

அதனையடுத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், குறித்த விடயத்தை யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகரைக் கையாள வேண்டாம் என்று பணித்ததுடன், அந்த விடயத்தை யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் அத்தியட்சகரைக் கையாளுமாறு தெரிவித்தார். அத்துடன் இது தொடர்பில் தனக்கு உடனடியாகவே அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் பணிப்புரை விடுத்தார்.

பிராந்திய சுகாதாரப் பணிமனையுடன் இணைந்து, போலி பற்சிகிச்சை நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் பணித்தார். (ற-5)

## விபத்தில் இரு இராணுவத்தினர் படுகாயம்



யாழ்ப்பாணம், மே 7

கிளிநொச்சி, தொண்டமான் நகர் ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இராணுவத்தினர் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி பொலிஸார் கூறினர். இரணைமடுப் பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரண்டு இராணுவத்தினர், வீதியின் குறுக்காகச் சென்ற மாட்டுடன் மோதியதுடன் எதிரே வந்த டிப்பர் ரக வாகனத்துடனும் மோதியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயங்களுக்குள்ளான இருவரும் முதலில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## சிவனேசன் நேற்றுப் பதவியேற்றார்



யாழ்ப்பாணம், மே 7

வடக்கு மாகாண சபையின் உயிரிழந்த உறுப்பினர் வீ.கனகசுந்தரசுவாமியின் வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்ட க.சிவனேசன் நேற்றுச் சத்தியப்பிரமாணம்செய்து, மாகாண சபை உறுப்பினராக பதவியேற்றார்.

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினராக இருந்த வீ.கனகசுந்தரசுவாமி இரு மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்திருந்தார். இவரது வெற்றிடத்துக்கு, யாரை நியமிப்பது என்பது தொடர்பில் கூட்டமைப்பில் இழுபறி நிலை நிலவியது.

உயிரிழந்த உறுப்பினர் வீ.கனகசுந்தரசுவாமி ரெலோ அமைப்பைச் சேர்ந்தவர் என்பதால், அந்தக் கட்சியைச் சேர்ந்தவருக்கே உறுப்பினர் பதவி வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த இடத்தில் இருப்பவருக்கு மாகாண சபை உறுப்பினர் பதவி வழங்கப்படவேண்டும் என்று புளொட் அமைப்பு வலியுறுத்தியிருந்தது.

இறுதியில் விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த இடத்திலிருந்த புளொட் அமைப்பின் சுந்தையார் சிவனேசன் (பவன்) நியமிக்கப்பட்டார். இது தொடர்பில் கடந்த மாத இறுதியில் தேர்தல்கள் ஆணையாளரால் வர்த்தமானி பிரசுரமும் வெளியிடப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபை உறுப்பினராக நியமிக்கப்பட்ட க.சிவனேசன், நேற்றுக் காலை 10.35 மணியளவில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் முன்னிலையில் பதவி யேற்றார்.

இந்த நிகழ்வில் புளொட் தலைவரும், வட மாகாணசபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வை.பாலச்சந்திரன் மற்றும் ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர். நேற்று வெளியான செய்தியில் க.சிவனேசன் இன்று பதவியேற்பார் எனத் தவறுதலாக வெளியாகியிருந்தது. (ற-5,86)

## மடுவில் சதொச கிளை திறப்பு



மன்னார், மே 7

மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலர் பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 'சதொச' விற்பனை நிலையத்தை கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

பிரசித்தி பெற்ற மடு மாதா ஆலயத்திற்கு வருகை தரும் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்களது நலன் கருதியும் பிரதேச மக்களின் நன்மை கருதியும் இந்த விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசின் கீழ் கைத்தொழில், வணிகத் துறை அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களில் 'சதொச' நிறுவனமும் ஒன்றாகும். 100 நாள் வேலைத்திட்டத்துக்கு அமைவாக இந்த 'சதொச' நிறுவனக்கிளைகள் பதுளை, ஹாலிஎல ஆகிய பல பிரதேசங்களில் திறந்து வைக்கப்பட்டன. (ற-56)

## கிழக்கு முதல்வரின் சேவைக்குப் பாராட்டு

அம்பாறை, மே.07
இனமத பேதங்களுக்கப்பால் மக்கள் சேவையையே முதன்மையாகக் கொண்டு சேவை செய்யும் செம்மலாகக் கிழக்கு முதலமைச்சர் திகழ்கின்றார்.
இவ்வாறு, கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன் புகழாரம் சூட்டினார்.
கூட்டமைப்பு உறுப்பினர் இராஜேஸ்வரன் உரையாற்றுகையில்,
கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட் இனமத பேதங்களுக்கு அப்பால் மூவின மக்களுக்கும் நீதி, நேர்மையுடன் சேவையாற்றும் சேவையின் செம்மலாகத் திகழ்ந்து வருகின்றார்.
இன்று முதலமைச்சராகப் பதவி வகிக்கும் அவர் எமது தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கெனப் பல மில்லியன்களுக் கான வேலைத்திட்டங்களை எம்மிடம் கோரியுள்ளார்.
நிச்சயம் முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் இத்தகைய சேவைகளை வழங்குவாரென்ற நம்பிக்கை எமக்குண்டு. அவரிடம் மக்களுக்கான எத்தகைய உதவிகளைக் கேட்டுப் போனாலும், மனப் பூரிப்புடன் அவற்றை நிறைவேற்றத் தயங்காது செயற்படும் ஒருவராகத் திகழ்கின்றார்–என்றார். (த-30)

# பஸில், ஜோன்ஸ்டன் கைது திட்டமிட்ட அரசியல் சூழ்ச்சி

## குற்றம் சாட்டுகிறார் மஹிந்த



கொழும்பு, மே 07
எனக்கும் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனவுக்கும் இடையில் ஏற்கனவே ஒரு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டபோது எனது சகோதரர் கைது செய்யப்பட்டார். இந் நிலையில் மீண்டும் ஒரு சந்திப்பு இடம் பெற ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ள போது பாதுகாப்பு உத்தியோகத்தரான இராணுவக் கோப்ரல் குமார கைது செய்யப்பட்டார். தற்போது முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டனும் கைது செய்யப்பட்டுள்ளார். இவையனைத்தும் அரசியல் சூழ்ச்சியொன்றூடாக இயக்கப்படுவதாகவே தெளிவாகின்றது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
ஊடகங்களுக்கு விடுத்த விசேட அறிக்கையொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
அரசியல் மற்றும் தனிப்பட்ட ஒப்பந்தங்களுக்கு இராணுவத்தைத் தொடர்புபடுத்தக் கூடாது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட கூட்டத்தில் துப்பாக்கியுடன் வந்ததாக எனது பாதுகாப்புக்குக் கடமையில் இருந்த இராணுவக் கோப்ரல் சேனக குமாரகே கைது செய்யப்பட்டுள்ளார். என்னுடைய கோரிக்கையின்படியே அவர் நாமல் ராஜபக்ஷவுடன் அம்பாந்தோட்டைக் கூட்டத்துக்குச் சென்றார்.
பொலிஸ் சோதனையின்போது வி.ஐ.பி வாயிலால் நாமல் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அதனையடுத்தே அவர்கள் சாதாரண வாயிலால் சென்றுள்ளனர். இதன் போது இராணுவக் கோப்ரல் அங்கு வாயிலில் நின்றுள்ளார்.
அங்கு வந்துள்ள பொலிஸ் அதிரடிப் படை அதிகாரி அவரை விசாரித்துள்ளார். தான் இராணுவச் சிப்பாய் என்பதை அப்போதே அவர் கூறியுள்ளார்.
கூட்டம் முடிந்ததும் நாமலுடன் அவர் வீடு திரும்பினார். அவர் கூட்டத்தினுள் துப்பாக்கியை எடுத்துச் செல்லவில்லை. அப்படி சென்றிருந்தால் உடன் கைது செய்திருக்கலாம் அல்லவா? ஏன் சில நாள்கள் கழித்துக் கைது செய்யவேண்டும். பாதுகாப்பு உத்தியோகத்தர் தனது ஆயுதத்தை சாரதியான மற்றைய இராணுவச் சிப்பாயிடம் கொடுத்துவிட்டே சென்றுள்ளார். இதனைச் சாரதியும் வாக்குமூலத்தில் உறுதி செய்துள்ளார்.
தவறு செய்யாத இராணுவக் கோப்ரலை ஜனாதிபதிக்கு எதிராகச் சூழ்ச்சி செய்ததாகக் கூறி நாமலின் பெயரையும் இணைத்து தற்போது கதை கட்டுகின்றனர்.
இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டமை எனது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பழிவாங்கலின் அங்கம். பஸில், ஜோன்ஸ்டனின் கைதுகளும் சூழ்ச்சி நிரம்பியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# ஆள்கடத்தலைத் தடுக்க இலங்கை–ஆஸி. பேச்சு

## கொழும்பு வந்தார் குடிவரவு அமைச்சர்



கொழும்பு, மே 07
புதிய அரசுடன், ஆட்கடத்தல்களைத் தடுத்தல் தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்காக, ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பீற்றர் டட்டன் கொழும்பு வந்துள்ளார்.
படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு அகதிகள் வருவதை தடுப்பது தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தவே அவர் கொழும்பு வந்துள்ளார்.
நேற்று அவர், பாதுகாப்பு அமைச்சில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
படகுகள் மூலம் அகதிகள் ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதை தடுப்பது குறித்தே பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.
இந்தப் பேச்சுக்களில் ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சருடன், ஆஸ் திரேலியக் கடற்படை உயர் அதிகாரிகள் இருவரும் கலந்து கொண்டனர்.
இலங்கையின் முன்னைய அரசுடன், அகதிகளைத் தடுப்பது தொடர்பாக ஆஸ்திரேலியா நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியிருந்தது. அதற்காக இலங்கைக் கடற்படைக்கு ரோந்துக் கப்பல்களையும் ஆஸ்திரேலியா வழங்கியிருந்தது.
அத்துடன், இலங்கையின் ஒத்துழைப்புக்குப் பிரதி உபகாரமாக, அனைத்துலக அரங்கில் மனித உரிமை விவகாரங்களில் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுக்காத நழுவல் கொள்கையையும் ஆஸ்திரேலியா கடைப்பிடித்து வந்தது.
கடந்த ஜனவரி மாதம், இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்ட போது, அதிர்ச்சியடைந்த நாடுகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்றாகும்.
இந்த நிலையிலேயே புதிய அரசுடன், இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கொழும்பு வந்துள்ளார். (த)

## ரணிலை விரட்டும் முயற்சி பலிக்காது

### மைத்திரி – மஹிந்த சந்திப்புக் குறித்து மனோ கணேசன்



கொழும்பு, மே 07
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆகிய இருவரும் சந்தித்து நடத்தும் பேச்சை, ரணிலை விரட்டியடிக்கும் ஒரு முயற்சி என்று சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் டிலன் பெரேரா சொல்லியுள்ளார். இந்தச் சந்திப்பின் நோக்கம் இதுவென்றால் இதற்கு நாம் ஒரு போதும் உடன்பட முடியாது. மகிந்தவின் காலம் முடிந்து விட்டது. அவர் இனி ஓய்வு பெற்று வீடு போக வேண்டும். மஹிந்த இல்லாத சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயல்பட நாம் தயார். ஆனால், மஹிந்த ராஜபக்ச உள்வாங்கப்படும் எந்த ஒரு ஏற்பாட்டுக்கும் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் உடன்பட மாட்டார்கள். எனவே இந்த பேச்சின் நோக்கம் ஒருமுறை பிரதமராகவும், இரு முறை ஜனாதிபதியாகவும் பதவி வகித்த மஹிந்த ராஜபக்சவை வீட்டுக்கு அனுப்பும் பேச்சாகவே இருக்க வேண்டும் என தேசிய நிறைவேற்று சபை உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.
அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது:–
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தங்களது கட்சித் தலைவர் என்று உரிமை கொண்டாடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசியல்வாதிகளுக்கு ஒன்றைக் கூறி வைக்க விரும்புகிறேன். அவரை உங்கள் கட்சித் தலைவராக நீங்கள் ஆக்க முன், நாங்கள் அவரை இந்த நாட்டின் ஜனாதிபதியாக ஆக்கிவிட்டோம். நாம் அவரை ஜனாதிபதியாக ஆக்கிய பின்னரே நீங்கள் வேறு வழியில்லாமல் அவரை உங்கள் கட்சித் தலைவர் ஆக்கியுள்ளீர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்.
நாங்கள் பல்லாண்டுகளாக போராடி மகிந்தவை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றினோம். அவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் குறுக்கு வழியில் உள்ளே கொண்டு வர நாம் இடந்தர முடியாது. நாங்கள் இந்த அரசில் இடை நடுவில் வந்து குடி புகுந்தவர்கள் அல்ல. துப்பாக்கிக் குண்டுகளுக்கு மத்தியில், வெள்ளை வான்களுக்கு மத்தியில், கல்லடிகளுக்கு மத்தியில், சொல்லடிகளுக்கு மத்தியில், பதவி, வரப்பிரசாதங்களை நிராகரித்துவிட்டு பல்லாண்டுகளாக போராடி வெற்றி கண்டவன் நான். பதவிகளுக்காகச் சோரம் போன கழிசடையல்ல நான். எனவே இதைச் சொல்வதற்கு எங்களுக்கு முழுமையான உரிமை இருக்கிறது. இந்த நாட்டிலே வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மஹிந்த ராஜபக்ச இழைத்த சொல்லொணா கொடுமைகளை நாம் மறக்கவில்லை. மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்க நாம் கடுமையாக உழைத்தோம். இது ஜனாதிபதிக்குத் தெரியும்.
எனவே மைத்திரி–மகிந்த பேச்சை வெறுமனே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற கட்சி மட்ட பேச்சு என நாம் கருதிவிட முடியாது. இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்விவகாரம் என்றும் நாம் சும்மா இருக்க முடியாது. வாக்களித்த எங்கள் மக்களுக்கு நாம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். இதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புரிந்து கொண்டுள்ளார் என நாம் நம்புகிறோம்–என்றார். (த)

## கொழும்பில் சீன நீர்மூழ்கிகள்; அமெரிக்கா மௌனம்

கொழும்பு, மே 07
கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கிகள் தரித்துச் சென்ற விவகாரம் தொடர்பாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர், ஜெப் ரத்கே, கருத்து எதையும் வெளியிட மறுத்துள்ளார்.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில், ஜோன் கெரியின் பயணத்தின் போது, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கியமான பிராந்திய விவகாரங்கள் குறித்துப் பேசப்பட்டதைச் சுட்டிக்காட்டி, அதுகுறித்தும், பேசப்பட்ட விடயங்கள் குறித்தும், செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.
அதற்குப் பதிலளித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர், ஜெப் ரத்கே, கடல்சார் பாதுகாப்புக்கு இலங்கை பங்களிக்க மேற்கொள்ளும் முயற்சிக்கும், இந்தோ– பசுபிக் பிராந்தியத்தில் முன்னணி கடல்சார் நாடான இலங்கை அதன் முக்கிய பங்கை நிறைவேற்றுவதற்கும் நாம் ஆதரவளிக்கிறோம் என்று குறிப்பிட்டார்.
இதையடுத்து, ஜோன் கெரி, குறிப்பாக இந்தியப் பெருங்கடல் விவகாரம் குறித்துகலந்துரையாடினாரா அல்லது, தென் சீனக் கடல் அல்லது ஏனைய பெருங்கடல் விவகாரங்கள் குறித்துப் பேசினாரா என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.
அதற்கு, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் ஜெப் ரத்கே பதிலளிக்கையில், ஜோன் கெரியின் கருத்துக்களின் அடிப்படையில், அவர் இந்தியப் பெருங்கடலில், எமது நண்பர்கள் மற்றும் பிராந்தியத்தில் உள்ள கூட்டாளிகளுடனான அமெரிக்காவின் தலைமையிலான கடல்சார் பாதுகாப்புக் குறித்தே பேசியிருக்கிறார்.
இலங்கையும் அமெரிக்காவும், அச்சுறுத்தலுக்கு எதிராகவும், பிராந்திய அல்லது கடல்சார் பகுதிகளைப் பலாத்காரமாகப் பயன்படுத்துவதற்கு எதிராகவும், இணைந்து பணியாற்றுகின்றன. பெரிய நாடுகள் சிறிய நாடுகள் என்றில்லாமல் எல்லா நாடுகளுக்கும், சட்டரீதியாகக் கடல் மற்றும் வானத்தைப் பயன்படுத்தும் உரிமையைக் கொண்டுள்ளன என்ற அடிப்படையில், நாம் இணைந்து பணியாற்றுகிறோம் என்று குறிப்பிட்டார்.
இதையடுத்து, கொழும்புத் துறைமுகத்தில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம், சீன நீர்மூழ்கிகள் தரித்து நின்றதைச் சுட்டிக்காட்டி, சீனாவின் இத்தகைய முயற்சிகள், குறித்து கவலை கொள்கிறீர்களா என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப்பதிலளித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பதில் பிரதிப்பேச்சாளர், அது குறித்து எந்த குறிப்பிட்ட கருத்தும் தன்னிடம் இல்லை என்று கூறி நழுவிவிட்டார். (த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எந்த ஒரு காரியமும் மந்தமாக நடக்கும். எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு லாபம் வராவிட்டாலும், சுமாராக வரும். தொழில் தொடர்பான செலவு கூடும்.

**இடபம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறிய வேலைக்கும் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. அவர்களின் நலனுக்காகச் செலவு செய்ய வேண்டி இருக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத செலவுகள் உண்டாகும். காரியதாமதம் ஏற்படும். வீண்கவலை இருக்கும். பணவரத்து அதிகப்படும் அதே நேரத்தில் வீண்செலவு உண்டாகும்.

**கடகம்:** எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கிச் சென்றாலும் மற்றவர்கள் விடாமல் வம்புக்கு இழுப்பார்கள். எனவே கவனமாக இருப்பது நல்லது. நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் நடந்து முடியும்.

**சிங்கம்:** தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும். வாக்கு வன்மையால் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாள்களாக தள்ளிப்போன பதவி உயர்வு கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் எதிர்பார்த்த சுமுகமான சூழ்நிலை காணப்படும். பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும். பணவரத்து திருப்தி தரும் விதத்தில் இருக்கும். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும்.

**துலாம்:** எடுத்த காரியத்தைச் செய்துமுடிப்பதில் இழுபறியான நிலை காணப்படும். சாதாரணமாகப் பேசினாலும் மற்றவர்கள் அதில் குறை காண்பார்கள்.

**விருச்சிகம்:** எண்ணியதை செய்து முடிக்க முடியாமல் தடங்கலை உண்டாக்கும். தொழில், வியாபாரத்தில் சிக்கல்கள் தீர பாடுபடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும்.

**தனுசு:** குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உங்களது செயல்களில் மற்றவர்குறை காண நேரலாம். தெய்வ பக்தி அதிகரிக்கும். பயணம் செல்ல நேரலாம்.

**மகரம்:** பணவரத்து திருப்திதரும். எதிர்பாராத திருப்பம் உண்டாகும். சிந்தித்துச் செயற்படுவது காரிய வெற்றிக்கு உதவும். பயணங்களின் போதும் வாகனங்களை ஓட்டி செல்லும் போதும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**கும்பம்:** புதியநபர்களின் அறிமுகம் கிடைக்கும். அவர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது. தொழில் வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும் வருமானம் வழக்கம் போல் இருக்கும்.

**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டுச் செய்யும் காரியங்கள் நல்ல பலன் தரும். உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வதும், வாக்குவாதத்தைத் தவிர்ப்பதும் நல்லது.



## குட்டி டயனா அரண்மனை வாரிசு இல்லையா ?

இங்கிலாந்தின் குட்டி இளவரசிக்கு சார்லோட் எலிசபெத் டயானா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அவர் கேம்பிரிட்ஜின் மதிப்புக்குரிய இளவரசி சார்லோட் என்று அவர் அழைக்கப்படுவார் எனவும் கென்சிங்டன் அரண்மனை உத்தியோபூர்வமாக அறிவித்துள்ளது.

இளவரசர் வில்லியம், கேத் மிடில்டன் இருவருக்கும் பிறந்த இரண்டாவது குழந்தைக்கே, சார்லோட் எலிசபெத் டயானா என்று பெயர் சூட்டியுள்ளனர்.

தற்போது இந்தக் குழந்தை தொடர்பில் ரஷ்யர்கள் புதிய சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளனர்.

இங்கிலாந்து இளவரசர் வில்லியமின் மனைவி, குட்டி இளவரசியைப் பெற்றெடுக்கவில்லை. மாறாக வாடகைத் தாயைப் பயன்படுத்தியே குழந்தையைப் பெற்றதாக ரஷ்ய நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

லண்டனில் உள்ள புனித மேரி மருத்துவமனையில் குழந்தையைப் பெற்றெடுத்த கேத், மாலை 6 மணியளவிலேயே அவர் குழந்தையுடன் அரண்மனைக்குத் திரும்பியுள்ளார். இந்த நிலையில் ரஷ்ய செய்தித்தாளும் அந்நாட்டு மக்களும் வேறு விதமாக பேசுகிறார்கள்.

பெண் குழந்தையைப் பெற்றெடுத்தது கேத் மிடில்டன் இல்லை. வாடகைத் தாய் மூலம் பெற்ற குழந்தையுடன் தான் புகைப்படங்களுக்குப் போஸ் கொடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலும் குட்டி இளவரசி கடந்த சனிக்கிழமை பிறக்கவில்லை.

சில நாள்களுக்கு முன்பு பிறந்த குழந்தையை கடந்த சனிக்கிழமை பிறந்ததாகப் பொய் சொல்லி உலகுக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளனர் என்றும் ரஷ்ய மக்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தை பிறந்த சில மணிநேரத்தில் கேத் அவ்வளவு தெம்பாகத் தெரிய வாய்ப்பே இல்லை. அப்படியே அவர் அந்த குழந்தையை பெற்றிருந்தால் அதை கடந்த சில நாள்களுக்கு முன்பு பெற்றிருக்க வேண்டும் என்கிறார்கள் ரஷ்யப் பெண்கள்.

குழந்தையைப் பார்த்தால் அன்று பிறந்தது போன்று இல்லை. அது நிச்சயம் பிறந்து குறைந்தது மூன்று நாள்களாவது ஆகியிருக்க வேண்டும். என்னதான் உலகின் சிறந்த மருத்துவர்கள் கேத் மிடில்டனுக்குப் பிரசவம் பார்த்தாலும் குழந்தையை பெற்றெடுத்த சில மணிநேரத்தில் இவ்வளவு தெம்பாக நடக்க முடியாது என்று மேலும் சிலர் கூறியுள்ளனர். வாடகைத் தாய் மூலம் பெண் குழந்தை பிறந்துள்ளது.

கேத் மிடில்டன் கர்ப்பமாக இருந்ததாக நடித்துள்ளார். பக்கிங்காம் அரண்மனை தியேட்டரில் இருந்து வந்துள்ள நல்ல நடிகை அவர். அவர் குழந்தையைப் பெற்றெடுக்கவில்லை என்று ரஷ்யர்கள் குமுறுகிறார்களாம்.

## தடம் பதிக்கின்றது கூகுள்

அடுத்த தலைமுறை தொழில் நுட்பங்களைக் கொண்டு வருவதில் கூகுள் எப்போதும் முன்னோடியாகத் திகழ்கிறது. அந்தவகையில் தற்போது தொலைத்தொடர்பு சேவையிலும் தொழில் நுட்பத்தோடு இறங்கியுள்ளது.

ஸ்மார்ட்போன் இருந்தால் போதும், வை-பை இணைப்பைப் போல இணைய தொடர்பை பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக இரண்டு தொலைத்தொடர்பு நிறுவனங்களோடு கூகுள் சேர்ந்துள்ளது.

இந்த நிறுவனங்களின் இணைய சேவையை, எந்த இணைப்புகளும் இல்லாமல் கூகுள் கொடுக்கும். தற்போது அமெரிக்காவில் மட்டும் இதை அறிமுகப் படுத்தியுள்ளது.

இதன் மூலம் போனுக்கு செலவிடும் தொகை குறையும் என்று கூறியுள்ளது.

வயர்கள் வழி எந்த இணைப்பு செலவுகளும் இல்லை என்பதால் தொலைத் தொடர்பு நிறுவனங்களின் செலவுகள் பெருமளவு குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இதனால் அந்த நிறுவனங்கள் கட்டமைப்புக்குச் செலவிடும் தொகை குறையும் என்பதால் வாடிக்கையாளர்களுக்கு விலை குறையும் என்று கூறியுள்ளது.

தற்போது இந்த இணைப்புக்கு 20 டொலரும், 1 ஜிகா பைட் டேட்டா பயன்படுத்த 10 டொலரை கட்டணமாகவும் நிர்ணயித்துள்ளது.



## கொஞ்சம் சிரிங்க பாஸ்....



'அப்பா! நான் ஒரு தொழிலில் முதலீடு செய்யப் போகிறேன். இரண்டாயிரம் ரூபா கடன் கொடுங்கள். ஒரே ஆண்டில் ஐந்நூறு ரூபா லாபம் கிடைக்கும்' என்றான் மகன்.

'இந்தா ஐந்நூறு ரூபா. உன் முதலீட்டுக்குக் கிடைத்த லாபமாக நினைத்துக் கொள். எனக்கும் ஆயிரத்து ஐநூறு ரூபா மிச்சம்' என்றார் தந்தை.

## திரிஷா மீண்டும் இணைவாரா ?

மயக்கமா கலக்கமா பாடல் வரிகள் குறித்து திரிஷாவின் முன்னாள் மாப்பிள்ளை வருண் மணியன் ருவீட் செய்துள்ளார். தெலுங்கு நடிகர் ராணாவை, திரிஷா பிரிந்த வேகத்தில் சென்னையைச் சேர்ந்த தொழில் அதிபரும், சினிமா தயாரிப்பாளருமான வருண் மணியனை காதலித்தார். காதல் மலர்ந்த வேகத்தில் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. நிச்சயதார்த்தம் நடந்த சூட்டோடு திரிஷாவும், வருண் மணியனும் பிரிந்துவிட்டனர்.

திருமண நிச்சயதார்த்தத்துக்கு பிறகு திரிஷாவுக்கு பட வாய்ப்புகள் வந்து குவிந்தன. இதனால் உடனே திருமணத்தை நடத்த வேண்டும் என்ற வருண் மணியன் வீட்டாரின் கோரிக்கை அவர் ஏற்கவில்லை. இது தொடர்பாகப் பிரச்சினை ஏற்பட்டு இருவரும் பிரிந்துவிட்டனர்.

திருமணம் நிச்சயம் செய்த பின்னர் திரிஷாவின் ருவீட்களை வருணும், வருணின் ருவீட்களைத் திரிஷாவும் டுவீட் செய்து வந்தனர். தற்போது அது எல்லாம் நின்றுவிட்டது.

தற்போது வருண் மணியன் மயக்கமா கலக்கமா பாடல் வரிகள் குறித்த ருவீட் செய்துள்ளார். திரிஷாவை நினைத்தே அவர் இதனை ருவீட் செய்துள்ளார். இருவரும் மீள இணைவார்களா, இந்த ருவீட்டால் ?

# புனர்வாழ்வுச் சங்கப் பெயரில் சிறு மாற்றம் செய்து மோசடி

## மக்களை ஏமாறவேண்டாம் என்று அறிவுறுத்துகிறார் வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் குணபாலசிங்கம்

யாழ்ப்பாணம், மே. 7

வலி.வடக்கு மீள்குடியேற்ற – புனர்வாழ்வுச் சங்கத்தின் பெயரைச் சிறு மாற்றம் செய்து, இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதாகக் கூறி புலம் பெயர் தமிழர்களிடம் பணத்தைப் பெற்று சிலர் ஏமாற்றி வருகின்றனர். எனவே எமது சங்கத்தின் பெயரைப் பயன்படுத்தி மோசடி செய்வோர் தொடர்பில் புலம் பெயர் தமிழர்கள் மற்றும் இங்குள்ளவர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். இவ்வாறு வலி.வடக்கு மீள்குடியேற்ற – புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் வலி.வடக்கு மீள்குடியேற்ற – புனர்வாழ்வுச் சங்கத்தினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலி.வடக்கு – வலி.கிழக்கு இடம்பெயர்ந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு அமைப்பு, வலி.வடக்கு மீள் குடியேற்ற – புனர்வாழ்வுச் சங்கம் மாத்திரமே. இந்த அமைப்பே, இலங்கை அரசால் இடம்பெயர வைக்கப்பட்ட மக்கள் 25 வருடங்களாகியும் மீளக்குடியமர்த்தப்படவில்லை என்பதைச் சர்வதேச சமூகத்துக்கு தெரியப்படுத்தியது. அத்துடன், அந்த மக்க ளின் மீள்குடியமர்வுக்காக, பல போராட்டங்களை மேற்கொண்டதுடன், அரசியல் தலைவர்கள் – இராஜதந்திரிகள் எனப் பலரையும் சந்தித்தது.

நிலைமை இவ்வாறு இருக்க, ஒரு சிலர் எமது அமைப்பின் பெயரில் சிறு மாற்றங்களைச் செய்து, அந்தப் பெயரைப் பயன்படுத்தி அறிக்கைகள் விடுவதுடன், வெளிநாடுகளிலுள்ள மக்களிடம் இடம்பெயர்ந்த மக்களுக்காக உதவி செய்வதாகச் சொல்லி நிதி உதவி பெற்று வருகின்றனர். அந்தப் பணத்தை அவர்கள் என்ன செய்கின்றனர் என்பது தெரியவில்லை. ஆனால் எமது அமைப்புக்கே பணம் கொடுத்தாக நம்பி, அந்த மக்கள் எங்களிடம் கேள்வி கேட்கின்றனர்.

எமது அமைப்பு இதுவரையில், எந்தவொரு வெளிநாட்டு அமைப்புக்களிடமிருந்தோ, தனிப்பட்ட புலம் பெயர் தமிழ் மக்களிடமிருந்தோ பணமோ – எந்தவொருபொருள்உதவியுமோ பெற்றுக் கொள்ளவில்லை.

வடக்கு மாகாண முதலமைச்சரின் உதவியுடன் நலன்புரி நிலையங்களிலுள்ள குடும்பங்களுக்கு சுழற்சி முறையில் நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த விநியோகம் கூட நேரடியாகவே மேற் கொள்ளப்படுகின்றது. பயனாளிகளை அடையாளப்படுத்தி தெரிவு செய்தமை மாத்திரம்தான் எமது பணி. அதே போன்று வடக்கு கல்வி அமைச்சால் நலன்புரி நிலைய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கிய செயற் பாட்டிலும், பயனாளி களை மாத்திரமே நாம் தெரிவு செய்தோம்.

எனவே உதவி செய்ய யார் விரும்பினாலும், அவர்களை நேரடியாகவே உதவி வழங்க வைத்திருக்கின்றோம். இவ் வாறான நிலைமையில், எமது அமைப்பின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் எவரும் செயற்பட வேண்டாம்.

அத்துடன் எமது அமைப்பின் பெயரைப் பயன்படுத்தி மோசடி யில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் சகலரும் விழிப்பாகஇருக்கவேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# கிழக்கு மாகாண ஆசிரியர்களை அந்த மாகாணத்தில் நியமிக்குக

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவாசம் பணிப்புரை

அம்பாறை, மே 7

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய ஆசிரியர்களுக்கு அந்த மாகாணத்தில் ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறையுள்ள பாடசாலைகளில் நியமனங்களை வழங்கவேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.



கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய ஆசிரியர்களுக்கு வெளி மாகாணங்களில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழு வினர் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவாசத்தை அவரது அமைச்சில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் போதே, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவாசம் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. இந்தநிலையில், கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்ட ஆசிரியர்களை வெளி மாகாணங்களுக்கு நியமிப்பது தொடர்பில் அதிருப்தி வெளியிடப்பட்டது. எந்தக்காரணம் கொண்டும் பயிற்சியை முடித்துக் கொண்ட கிழக்கு மாகாண ஆசிரியர்களை வெளி மாகாணங்களுக்கு அனுப்பும் முயற் சியை உடனடியாகக் கைவிட்டு, ஆசிரியர் வெற்றிடங்களுள்ள கிழக்கு மாகாண பாட சாலைகளில் அவர்களை நியமிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சரிடம் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் கிழக்கு மாகாண முதல மைச்சர் தலைமையிலான குழுவினர் கேட்டுக் கொண் டனர். இதன்போது, கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழி மூல மான பாடசாலைகளில் ஆசிரியர்களின் தேவையேதும் இல்லை என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிக்கை சமர்ப்பித்த தன் காரணமாகவே, மேற்படி ஆசி ரியர்களை வெளி மாகாணங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய் யப்பட்ட தாக கல்வி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்ஹ தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், சுகாதார இராஜாங்க அமைச்சர் எம்.ரி.ஹஸன் அலி, போக்குவரத்து பிரதி அமைச் சர் எம்.எஸ்.தௌபீக் உள்ளிட்ட பலர்கலந்து கொண்ட னர். (வ)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**ஓய்வு பெற்றுவிட்டீர்களா?**

65 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு

குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ பணியாற்றலாம்.

- 2 வாரப் பயிற்சிக் காலமுடையது
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்:

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி,

**அடிப்படைத் தகைமைகள்:**

- G.C.E. (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 15.05.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்ப இல. 5057,
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(41444) (45.3)



உ
சிவமயம்

**அறிவித்தல்**

**தெல்லிப்பழை வர்த்தலைவிளான் ஆலய திருப்பணிகளுக்கான ஆலோசனைக்கூட்டம்**

வர்த்தலைவிளான் வித்துவசிரோமணி சி.கணேசையர் அவர்களின் மருதடிவிநாயகர் ஆலயம் மற்றும் வர்த்தலைவிளான் மயிலிட்டிதெற்கு பிடாரத்தனை கண்ணகி அம்பாள் வழிவந்த ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் ஆகியவற்றின் திருப்பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் 24.05.2015 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10 மணிக்கு விநாயகர் ஆலயத்தில் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. திருப்பணிவேலைகளுக்கு முன் ஆயத்தமாகச் சிரமதானப் பணிகளும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாலயங்களில் காலத்துக்குக் காலம் இடம்பெற்ற திருப்பணிச்சபையினர், திருப்பணிகள் செய்வித்தோர், மற்றும் மகோற்சவம், சதுர்த்தி, திருவெம்பாவை, பெருங்கதை, நவராத்திரி, கந்தசஷ்டி போன்ற விசேட விழாக்களின் உபயகாரர்கள், அவர்களின் பிரதிநிதிகள், உறவினர்கள் ஆகியோர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றி ஆலோசிப்பதற்கு உரிய நேரத்தில் சமுகம்தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவும்,
சுப்பிரமணிய ஐயர்
இராஜேஸ்வரசர்மா.

வர்த்தலைவிளான்,
தெல்லிப்பழை.
(59520)(4.3.7)



**மூல்லை மாவட்டத்திலுள்ள சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் புனரமைப்புக்கான அழைப்பு**

சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களை மீளப் புனரமைப்பதற்கு விடுக்கப்படும். அழைப்பு முல்லை மாவட்டத்திலுள்ள கிராமங்களில் பலம் பொருந்திய அமைப்பாக செயற்பட்ட சி.க.கூ. சங்கங்கள் இன்று பலமிழந்து காணப்படுகின்றன. சங்கங்களை கிராமங்கள் தோறும் சென்று புனரமைத்து அவற்றுக்கான ஆலோசனை வழங்கி வளர்ப்பதற்கு எம்மிடம் போதிய பணித் தொகுதி இன்மையாலும் அச்சங்கங்களின் அபிவிருத்திக்கு வேண்டிய நிதியை வழங்க முடியாமையாலும் பதிவு செய்து இயங்காதுள்ள சங்கங்களைப் புனரமைப்பதற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கிராமசேவையாளர்கள் மூலம் மேற்கொண்ட வேண்டுகை கூட பயனற்றுப்போய்விட்டது. தயவு செய்து தங்கள் கிராமத்திலுள்ள சி.க.கூ. சங்கங்களை புனரமைப்பதற்கு ஆர்வமுள்ளவர்கள் எமது 024 324 8603 எனும் தொலைபேசி அழைப்பு மூலம் ஒத்துழைப்பைப் பெற்று சங்கத்தைப் புனரமைக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

தலைவர்,
முல்லைத்தீவு மாவட்ட சி.க.கூ. சமாசம், ஒட்டுசுட்டான்.
(சி/15760)(4.3.7)



**B A, B com, B Sc.**

காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

மேற்படி பல்கலைக்கழகத்தினால் வைகாசி 2016 பரீட்சை எடுப்பதற்கான புதிய பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

- A/L கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் முழுமைச்சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- BA இல் வரலாறு, பொருளியல், சமூகவிஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் பொதுநிர்வாகம், Journalism + mass communication, அரசியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.
- BSc இல் உளவியல், கணிதம், Computer Science ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.
- இப்பட்ட நெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழகங்களின் பட்டங்களுக்கு நிகரான பட்டநெறிகளாக இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- மேற்குறிப்பிட்ட பட்ட நெறிகளுக்குரிய பல்கலைக்கழக பதிவுகளும் விரிவுரைகளும் 02.05.2015 இல் இருந்து ஆரம்பமாகிவிட்டன.
- பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் யாழ் இணைப்பாளராகிய புதிய உயர்கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.

யாழ் இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை),
தொடர்பு: 021 222 8148

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



மண்ணுலகம் 10.11.1930

விண்ணுலகம் 07.04.2015

### திருமதி. மீனாட்சி செல்லத்துரை

கடந்த 07.04.2015 சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடிவந்து எமக்குப் பல்வேறு வகைகளில் உதவிகளை இன்று வரை மேற்கொள்ளும் அன்பு உள்ளங்களுக்கும் நேரடியாகவும் தொலைபேசிமூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த உள்நாட்டு,வெளிநாட்டு உறவுகளுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலம் தமது அஞ்சலியைச் செலுத்திய அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.05.2015) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

589, கே.கே.எஸ் வீதி,
இணுவில் மத்தியகல்லூரி ஆரம்ப பாடசாலை அருகில்,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.
தகவல் :
செ.குபேரநாதன். (மகன்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மாவை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் பலாலி கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது சுன்னாகம் கிழக்கில் வசித்து வந்தவருமாகிய

### அமரர் காசிப்பிள்ளை யோகேஸ்வரன்

(ஈசன்)



தோற்றம் 03.10.1949

மறைவு 18.04.2014

திதி: சங்கடஹரசதுர்த்தி (07.05.2015)

பாசமாய் கூடி வாழ்ந்த கூட்டை விட்டு
எங்கு தான் பறந்து சென்றீர்களோ அப்பா!
உங்கள் சிரிப்பும் உயர்வான பேச்சும்
என்றும் எங்களை விட்டு நீங்காது அப்பா!
உங்கள் நினைவால் தினம் கலங்கி நிற்கின்றோம்
மீண்டும் எங்களிடம் வருவீர்களா என்று
ஏங்கித் தவித்து நிற்கின்றோமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29.12.1949

மறைவு 19.04.2014

திதி: சங்கடஹரசதுர்த்தி (07.05.2015)

### கதிர்காமு உமாமகேஷ்வரன்

(சாவகச்சேரி)

உலகத்து உயிர்களிலே உன்னதமாய் பணியாற்றி
மாற்றத்தை மறுவின்றி மாண்புடனே பண்படுத்தி
மக்கள் அனைவரையும் மன்றத்தில் வாழவைத்து
நேத்திரமாய் இவ்வுலகில் வாழ்ந்திட்ட பெருமகனே
ஸ்திரமாய் நாம் வாழ உம் வாழ்வை எமதாக்கி
வழிவகை செய்திங்கு - எம் வாழ்வை உயர்வாக்கி
நம்பியமாய் எங்களைப் பூவுலகில் வாழவைத்து
இன்பமுடன் எமை விட்டு சென்றீரே தனியாக......

2ஆம் குறுக்குத் தெரு,சங்கத்தானை.

பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.



முல்லைத்தீவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அருள்மிகு மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த பௌர்ணமி திருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை வெகு சிறப்பாக இடம் பெற்றுள்ளது.
மூன்று முறிப்பு பிரதம குருக்கள், நாதன் குருக்களால் பூசைகள் நடத்தப்பட்டு எம்பெருமான் முத்துச்சப்பரத் தேரில் உள் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தார்.
காவடி, பாற் செம்பு, அங்கப் பிரதட்டை ஆகிய நேர்த்திக் கடன்களில் பெரும் திரளான அடியார்கள் ஈடுபட்டனர்.
என்றுமில்லாத வகையில் திருவிழாவன்று இந்த ஆலயத்தில் ஒரு சிறுவன் தூக்குக்காவடி எடுத்து வந்தமை அனைத்து மக்கள் மத்தியிலும் ஒரு வியப்பைத் தந்துள்ளது. (வ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கணேசலிங்கம் தர்சன்

தோற்றம் 06.11.1992

மறைவு 18.04.2014




ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது எம் துயரம்
மாறாது எம் மனதில் – தர்சன்
மதிப்பான உன் உருவம்
பேறாகப்பெற்ற பெருமகனே!
பிரிந்திருக்க மாட்டோம் யாம்
நினைத்திருப்போம் எந்நாளும்
உனது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உடுவில் கிழக்கு.
கற்பகப்பிள்ளையார் கோயிலடி.

(59495)(4.3.7)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி

### கண்ணகைப்பிள்ளை மயில்வாகனம்

தேற்றம் 1924.10.13

மறைவு 2014.04.19

திதி: சித்திரை மாத சங்கடஹரசதுர்த்தி (07.05.2015)

ஆண்டு ஒன்று போனது அம்மா ஆறவில்லை எம் துயரம்
ஆண்டுகள் ஆயிரம் போனாலும் அகலுமா
அம்மா உங்கள் நினைவுகள்
மெழுகுவர்த்தி போல் உருகி எம்வாழ்வுக்கு ஒளி கொடுத்த
அன்புத் தெய்வமே!
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
எமக்கு அம்மாவாக நீங்கள் வரவேண்டும்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.140,பரமேஸ்வராச்சந்தி,திருநெல்வேலி

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

கடந்த 19.04.2014 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் தங்கச்சியம்மா நல்லதம்பி



தோற்றம் 12.08.1924

மறைவு 19.04.2014

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07.05.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

துவாரகை றோட், உரும்பிராய் மேற்கு.
கோண்டாவில்.

(59493)(4.3.6)

குடும்பத்தினர்.

## முறைசாரா பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 7

வடமாகாண கல்வி வலயங்களில் வெற்றிடமாகக் காணப்படும் முறைசாராக் கல்விப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு பாடத்துறையுடன் தொடர்புடைய தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப பாடத்துறையில் குறைந்தபட்சம் 5 வருட கற்பித்தல் அனுபவமுடைய, பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அல்லது சம்பந்தப்பட்ட பாடத் துறையில் 3 வருட கற்பித்தல் அனுபவமுடைய பட்டதாரி ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் அறிவித்துள்ளார். (வ–9)

## தமிழ்த்தின விழா

கொழும்புத்துறை, மே 7

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தின் தமிழ்த்தின விழா இன்று வியாழக் கிழமை மாலை 6 மணிக்கு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற வுள்ளது.

பிரதம விருந்தினராக இலக்கிய வித்தகர் திருமதி கோகிலா மகேந்திரனும், சிறப்பு விருந்தினராக இரணைப்பாலை பங்குத் தந்தை அருட்திரு எஸ்.ஏ.அருட்செல்வன் அடிகளாரும் கலந்து கொள்வர்.

சிறப்பு நிகழ்வாக 'விலங்குகள்' சமூக நாடக ஆற்றுகையும் இடம் பெறும். (வ–135)

## 4 நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்.இலக்கியக் குவியத்தின் ஏற்பாட்டில் கவிஞர் கருணாகரனின் 4 நூல்களுக்கான அறிமுகமும் விமர்சன அரங்கும்எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல–128, டேவிற் வீதி, யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியற்கல்லூரியின் திருமறைக்கலாமன்றத்தில் நடைபெறவுள்ளது.

வேட்டைத்தோப்பு (சிறுகதைத் தொகுதி) பற்றி தாயகம் இதழின் ஆசிரியரும், படைப்பாளியுமான க. தணிகாசலமும், ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள் (கவிதைகள்) பற்றி சி.ரமேஸும் நெருப்பின் உதிரம் (கவிதைகள்) பற்றி சித்தாந்தனும் இப்படி ஒரு காலம் (கட்டுரைகள்) பற்றி அன்ரன் அன்பழகனும் விமர்சன உரைகளை ஆற்றவுள்ளனர். தொடர்ந்து சிறந்த உரையாடலும் இடம்பெறவுள்ளது. (வ)

# கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாழ்வாதாரம் உயர்தல் அவசியம்

## மத்திய வங்கியின் காரியாலய திறப்பு விழாவில் நிதி விவகாரங்கள் மற்றும் கொள்கை செயற்பாட்டு பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 7

இலங்கை மின்சாரசபை. போக்குவரத்து சபை, ரயில்வே, பெற்றோலியம் கூட்டுத் தாபனம், போன்றன ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய துறைகள். அவை நஷ்டத்திலேயே இயங்குகின்றன. எனவே கிளிநொச்சியில் உள்ள தொழில் துறை, விவசாயம், வியாபாரம், முன்னேறும் போது அவற்றின் மூலம் கிடைக்கும் வரிகளினால் குறித்த துறைகள் இலாபம் பெற முடியும். அதற்கு இங்குள்ள மக்களது வாழ்வாதாரம், கொள்ளளவு சக்தி அதிகரிக்க வேண்டும் என்று நிதி விவகாரங்கள் மற்றும் கொள்கை செயற்பாட்டு பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.



கிளிநொச்சி அறிவியல் நகரில் நேற்று இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் காரியாலய திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறுகையில்;

"நெற்பயிர் செய்கையாளர்கள், கைத்தொழில் முயற்சியாளர்கள் மத்தியிலே முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை கிளிநொச்சி மாவட்டத்திலே அதிகமாகக் காணப்படுகின்றது. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கு பல குறைபாடுகள் இருப்பதாக மக்கள் உணர்கின்றார்கள். மின்சாரம், சமத்துவமின்மை, சேவைகள் கிடைப்பதில் குறைபாடு, கல்வி, மருத்துவம் போன்ற பல குறைபாடுகள் இருப்பதாக மக்கள் உணர்கின்றார்கள்,

கொள்கை வகுப்பாளர்கள் அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் திட்டமிடுகின்றார்கள். வளங்கள் சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். கிளிநொச்சி மாவட்டம் பல மக்களை இழந்த மாவட்டம். எனவே இங்கு மனித வளக் குறைபாடுகளும் ஏற்பட இடமுண்டு. இங்கு வியாபார முன்னேற்றமும் குறிப்பிடக் கூடிய அளவில் காணப்படவில்லை. குடும்ப தேவைகளும் பூரணமாக நிறைவேற்றப்பட்டதாகக் கூற முடியாது. வியாபார முன்னேற்றத்துக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களும் முதலீடும் அவசியமாகின்றது.

அப்படியிருந்தும் புதிய அரசு 100 நாள் திட்டத்தின் மூலம் இயலுமான வற்றை செய்துள்ளது. இதற்கமைய சுகாதாரம், கல்வி, போக்குவரத்து என்பவற்றுக்கு பல மில்லியன் ரூபா பணத்தை செலவிட்டு வருகின்றது. தரமான கல்வி, போதியளவு சுகாதார வசதி, பொது மக்களது வாழ்வா தாரம் என்பன கவனிக்கப் பட்டுள்ளன.

போக்குவரத்துச் செலவு அத்தியாவசியப்பொருள்களின் விலைகுறைப்பு சம்பள உயர்வு, என்பன கவனத்தில் எடுக்கப் பட்டுள்ளதைக் காணலாம். தனியார் துறைக்கும் இவை எதிர்காலத்தில் வலியுறுத்தப்படும். முன்னைய காலத்தைவிட வரி அறவீடு திறைசேரிக்கு குறைந்துள்ளது என்பதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

எனவே மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு,இது போன்று மத்திய வங்கியின் செயற்பாடுகளை பரவலாக்கி அதன் மூலம் மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வருகின்றது"– என்றார். (வ–21)

# வாழ்வெழுச்சி சமுதாய முன்னேற்ற வங்கிகளுக்கான புதுவருட நிகழ்வு

வவுனியா, மே 7

வவுனியா பிரதேசத்துக்கு உட்பட்ட வாழ்வின் எழுச்சி சமுதாய முன்னேற்ற வங்கி களுக்கு இடையிலாக இடம்பெற்ற தமிழ், சிங்கள புது வருட விழாவும் நினைவுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின்போது வாழ்வின் எழுச்சி திட்டத்தின் மூலம் வவுனியா மாவட்டத்துக்கு உட்பட்ட ஒவ்வொரு கிராமம் தோறும் உள்ள மக்களுக்கு அதிகமான வங்கிக்கணக்குகளை ஆரம்பித்து சேமிப்பில் ஈடுபட்ட வைத்த வாழ்வு எழுச்சி திட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நினைவுச் சின்னங்களையும் அண்மையில் வெளியான க.பொ.த. சாதரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு புலமை பரிசில் சான்றிதழ்களையும் வவுனியா பிரதேச செயலாளர் க.உதயராசா வழங்கினார்.

நிகழ்வுக்கு வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர் உதயராசா, விளையாட்டு உத்தியோகத்தர் கே.லலித், வவுனியா மாவட்ட சிறுவர் அபிவிருத்தி உத்தி யோகத்தர் யே.கனடி, மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(வ–421–21)

# ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, மே 7

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'உள்ளம் பெருங்கோயில்' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும்.

இந்தச் சொற்பொழிவை மூத்த எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் நிகழ்த்துவார். (வ–173)


**வேலை ஆள்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள திருமண மண்டபத்துக்கு வேலை ஆள்கள் தேவை. ஆண்கள்-25 வயதுக்குட்பட்டவர்கள், மூன்று வேளை உணவு, தங்குமிட வசதிகளுடன் 20,000/= ரூபா சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 9234176

**தவறிவிட்டது**

பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த காசிலிங்கம் ஸ்ரீகந்தகுமார் என்பவருடைய தே.அ. அட்டை (502493531v), உடன் பேர்ஸ் என்பன யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலி சென்ற பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(சி/15781)(4.3.7) தொடர்பு: 077 609 7433

**ஆள் தேவை**

யாழ்ப்பாணம், ராஜா தியேட்டர் முன்பக்கம் உள்ள "ராஜாரெஸ்ட்" தங்கு விடுதிக்கு பணிபுரியக் கூடிய ஆங்கிலம், சிங்களம் பேசத்தெரிந்த ஒருவர் தேவை. நேரில் வரவும்.

சந்திக்கும் நேரம்:
காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை.
சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

(59521)(4.3.7) முகாமையாளர், ராஜா தியேட்டர்.

**மீண்டும் மீண்டும் யாழ் மண்ணில்**
**VIMB (Rgd -No-VI/IN33)**

எமது VIMB திருமண சேவையில் பழைய வாடிக்கையாளர்கள் மீள பதிவு செய்து கொள்ளலாம். இவர்களுக்கான பதிவுகள் இலவசமாக செய்து கொள்ளப்படும்.

மேலும் எம்மிடம் சகல இன, மத, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்களும் உள்ளன.

தொடர்பு: 077 181 9056, 077 848 3973
Web: www.keethannet.com (59460)(4.3.7)

**வீடு வாடகைக்கு**

"சரவணன் வீடு" புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தி பலாலி பிரதான வீதியில் (சேவிஸ்ரேசனுக்கு அருகில்) அமைந்துள்ள தோட்டக் காணியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தோட்டம் செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 10 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

(59314)(4.3.7) தொடர்பு: 077 678 6312

**சீரடி சாயிபாபா ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
சாயிராம் சாஸ்திரிகள்

ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச் சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச் சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

காலை 9.00 மணி– மாலை 6.00 மணி வரை

076 809 7406

Land Mark Yaal inn Hotel
இல.46/1, கஸ்தூரியார் வீதி, (யாழ்-இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(59429)(4.3.7)


# 100 நாள் வேலைத்திட்டத்தை பாராட்டி வர்ண சுவரொட்டிகள்




கரணவாய், மே 7

அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தைப் பாராட்டி வடமராட்சிப் பகுதி எங்கும் வர்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன் ஆகியோரின் வர்ணப் புகைப்படங்களைத் தாங்கிய சுவரொட்டிகளே இவ்வாறு ஒட்டப் பட்டுள்ளன.

நல்லாட்சி அரசின் 100 நாள் வேலைத்திட்டம் என்று தலைப்பிட்டு ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகளில் வெள்ளை வான் கலாசாரம், கழிவு ஓயில் கலாசாரம், இலஞ்ச ஊழல் கலாசாரம் ஆகியவற்றை ஒழித்து, தமிழ் மக்களுக்கு அச்சமின்றி, அடக்குமுறையின்றி, அடாவடித்தனமின்றி கௌரவமாக வாழ வழிசமைத்த நல்லாட்சி அரசை வாழ்த்துகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வடபகுதித் தமிழ் மக்கள் என்று உரிமைகோரப்பட்டுள்ளது. (வ–108)

# ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை கொடுப்பனவு வழங்கவில்லை

## யாழ்.பல்கலைக்கழக வாகனச் சாரதிகள் ஊழியர் சங்கத்திடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 7

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக அலரி மாளிகையில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டமைக்கான போக்குவரத்து மற்றும் இதர கொடுப்பனவுகள் 5 மாதங்கள் கடந்தும் இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை என்று யாழ்.பல்கலைக்கழக வாகனச் சாரதிகள் தமது ஊழியர் சங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் பரப்புரைக்காக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களும் ஊழியர்களும் பல்கலைக்கழக வாகனங்களில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். அது தொடர்பான கொடுப்பனவே இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் முன்னணி தொழிற்சங்க செயற்பாட்டாளருமாகிய கலாநிதி நிர்மால் றஞ்சித் தேவசிறி, தொழிலாளர் தினத்தன்று கொழும்பில் தாக்கப்பட்டுள்ளமை. பொதுமக்களையும், அரசியல் வேறுபாடு கொண்டவர்களையும் அச்சுறுத்தி பணியவைக்கும் குழுக்கள் இன்னமும் செயற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன என்பதைத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.

இவ்வாறானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு அனைத்து முற்போக்கு சமூக அமைப்புக்களும் ஒன்றிணைந்து அதில் செயற்படுவது மிகவும் அவசியமாகும் என்று சங்கம் தெரிவித்துள்ளது. (வ–4)



2014–2015 இல் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக நெற்செய்கையைப் பாதித்துள்ள களைகளின் (கோரை) ஆதிக்கம். (வ–500)

# மோ. சைக்கிள் தடம்புரண்டதில் கிராம அலுவலகர் காயம்

முல்லைத்தீவு மே 7

கொக்குத் தொடுவாயில் இருந்து கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த கிராம அலுவலர், தாம் பயணித்த மோட்டார் சைக்கிள் தடம் புரண்டதில் காயமடைந்து சுய நினைவு இழந்த நிலையில் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு மாங்குளம் பிரதான வீதியில் 3 ஆம் கட்டை வளைவில் அண்மையில் இடம் பெற்றுள்ளது. இதன்போது தியாகராஜா யோகராஜா (வயது–47) என்பவரே காயமடைந்தவராவார். (வ–102)


**இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்த்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்**

வசிகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இடமாற்ற பதவி உயர்வு தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம், கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றுக்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

இல. 175, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்விருந்தினர் விடுதி, G.G.Hotel,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 595 0463

# தாண்டிக்குளம் சித்தி விநாயகர் ஆலய நிர்வாக தெரிவில் இழுபறி

## வவுனியா அரச அதிபர், மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

வவுனியா, மே 7

வவுனியா தாண்டிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை பிரதேச செயலரால் கலைக்கப் பட்டுள்ளது. அதனால் அந்தப் பகுதி மக்களிடையே குழப்பம் ஏற்பட்டுள் ளது என்று தெரிவிக் கப்படுகின்றது.

இது தொடர்பில் வவுனியா அரச அதிபர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஆலயத்தில் கும்பாபிசேகத்தை நடத்தும் நோக்குடன் செயற்பாடற்றிருக்கும் பழைய நிர்வாகத்தை கலைத்து புதிய நிர்வாகத்தை தெரிவு செய்துதருமாறு கடநத 19 ஆம் திகதி கிராம சேவகர் மூலம் பிரதேச செயலாளருக்கு ஆலத்தின் உபயகாரர்கள் மற்றும் கிராம மக் கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதையடுத்து தாண்டிக்குளம் கிராம சேவகரால் கடந்த மாதம் 20ஆம் திகதி நிர்வாகத் தெரிவு குறித்து அறிவிக்கப்பட்டது. கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமைமாலை 4மணிக்கு ஆலய முன்றலில் நிர்வாகத் தெரிவு இடம்பெறும் என்று அவர் அறிவித் திருந்தார். இருந்தபோதும் 26 ஆம் திகதி கலாசார உத்தியோகத்தர் முன்னிலையில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 30ஆம் திகதி கிராம சேவையாளரால் ஆலயத் தின் நிர்வாகத்துக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. அதில் புதி தாகத் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையை கலைப்பதாகப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது என்று தெரி விக்கப்பட்டது.

ஆலயத்தின் நடைமுறைகளை சீராக செயற்படுத்துவதற்கும் கிராம சேவகர் மற்றும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் முன்னிலையில் தெரிவு செய்யப்பட்ட நிர் வாகத்தைக் காரணமின்றி தடுத்து நிறுத்தி கிராம மக்களின் கருத்துக்கு மாறாகப் பிரதேச செயலாளர் செயற் பட்டுள்ளார் என்று ஆலயத்தின் புதிய நிர்வாகம் குற்றஞ்சாட்டி யுள்ளது. இதுதொர்பாக வவுனியா அரச அதிபர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவிடமும் முறை யிடப் பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

இது தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது வவுனியா பிரதேச செயலாளர் கலாசார உத்தியோகத் தரிடம் தொடர்பு கொள்ளுமாறு கூறினார். கலாசார உத்தியோகத் தரி டம் இதுகுறித்துக் கேட்டபோது, நிர்வாகத்தின் நிதி நடவடிக்கை தொடர்பாக விசாரணைகள் இடம் பெற்றுள்ளன என்றும் அதற்கான பதிலை அக்கிராமத்தின் கிராம சேவகரின் ஊடாக எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் உண் மையான விடயம் விரைவில் வெளிவரும் என்றும்தெரிவித்தார். (ற-402)

# பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும்


மாங்குளம், மே 7

கிளிநொச்சி முக்கொம்பன் பாட சாலையின் வித்தியா ஒளி எனும் முதல் நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடை பெற வுள்ளது.

குறித்த பாடசாலை 2002 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிலையில் 13வருடங்கள் கடந்த நிலையில் தமது சாதனைகள் மற் றும் அவர்கள் எதிர் கொண்ட சவால் களை அடங்கி யதான கட்டுரைகளு டன் இதன் முதல் 'வித்தியா ஒளி' எனும் நூல் வெளியீடும் பரிசளிப்பு விழா வும் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தி.திலீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வுக்கு பிரதம விருந்தினராக கிளி நொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம், சிறப்பு விருந்தினர் களாக பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோ.தர்மரத் தினம், கோப்பாய் ஆசிரிய கலா சாலையின் பிரதி அதிபர் அ.லலீசன், கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் செ.விஜ ய நாதன், பூநகரி நல்லூர் முன்னாள் கிராம அலுவலகர் த.ஞானேஸ் வரன் ஆகியோரும் கலந்து கொள்ள வுள்ளனர். (வ-422)

# மாகாணசபை உறுப்பினருக்கு மக்களால் வரவேற்பு நிகழ்வு



யாழ்ப்பாணம், மே 7

புதிதாக பதவியேற்றுள்ள வட மாகாண சபை உறுப்பினர் எம்.பி. நடராஜாவுக்கு வீரபுரம் கிராம மக் கள் வரவேற்புபசாரம் அளித்தனர்.

றொனால்ட் றீகனின் ஒழுங்கமைப் பில், வீரபுரம் கிராம அபிவிருத் திச்சங்கத்தலைவர் ஜெயக்குமார் தலைமையில் அண்மையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசா, செட்டிக்குளம் பிரதேசசபை உப தவிசாளர் எஸ். சந்திரமோகன், உறுப்பினர் சிவகேதீசன் (கண் ணன்) மற்றும் யாழ். இராஜேஸ் வரன், கிராம பொது அமைப்பு களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண் டனர்.

இதன்போது கிராம மக்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (வ-402)

# அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 7

புங்குடுதீவு வீராமலை வயலூர் ஶ்ரீ முருகமூர்த்தி ஆலய அலங் காரத் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற வுள்ளது. 108 சங்காபிஷேகம் நடை பெற்று அன்னதானம் நடை பெறும் என்றும் பிற்பகல் முத்துச் சப்பறத்தில் சுவாமி திருவீதி யுலா வருவார் என்றும் அடியார்களை உற்சவத்தில் கலந்து கொள்ளுமாறும் உபயகாரர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (வ-10)

# சிக்கியது கசிப்பு பெண் கைது

கரணவாய், மே 7

துன்னாலை தக்குச்சம்பாதி பகுதி யில் நெல்லியடிப் பொலி ஸாரால் 5 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள் ளதுடன் சந்தே கத்தின் பெயரில் 33 வயதுடைய பெண்மணி ஒரு வரையும் கைது செய்துள்ளனர்.

துன்னாலை தக்குச்சம்பாதிப் பகுதி வீடொன்றை திங்கட்கிழமை சுற்றி வளைத்த பொலிஸார் அங்கு தேடு தலை மேற்கொண்டபோது விற்ப னைக்குத் தயார் நிலையில் வைக் கப்பட்டிருந்த சுமார் 5 லீற்றர் கசிப் பைக் கைப்பற்றியதுடன் வீட்டில் இருந்த பெண்ணொருவரையும் சந் தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ள னர். (வ-108)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கண்மணியம்மா (சின்னத்தங்கச்சி) பொன்னுத்துரை



வண்ணார்பண்ணை, கலட்டியைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணியம்மா பொன்னுத்துரை 05.05.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சிவக்கொழுந்து தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருள் அம்மா, மற்றும் சோதி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் நாகராசா, ராசமலர், பாலச்சந்திரன், இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2015) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பத்தமேனி தீத்தாங்கேணி உள்ளிவிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூசையப்பர் வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல்: கண்ணன் (பேரன்)
077 999 8254 , 077 736 1870

(59525) (4.3.7)

### கனகசபை சண்முகநாதன்

(இளைப்பாறிய பட வரைஞர்- நீர்ப்பாசனத் திணைக்களம்)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோயில் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பை (வெள்ளவத்தை) வதிவிடமாகவும் கொண்ட கனகசபை சண்முகநாதன் 05.05.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-பாக்கியலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவராமலிங்கம் மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும், உமாப்பிரிய வானதியின் (உமா) அன்புக் கணவரும், கார்த்திகா, தனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்மிளன், சுதாஸ் ஆகியோரின் மாமனாரும், விதுன், ரேவிதா ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி குகப்பிரியை சிவானந்தன், காலஞ்சென்ற ரஞ்சன் ஆகியோரின் மைத்துனரும், சந்திர மௌளீசன், காலஞ்சென்ற மகிழ்மலர் மற்றும் செல்வராணி, இராமச்சந்திரன், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரி, மாணிக்கவாசர், குலேந்திரசிங்கம், அம்பிகாதேவி , கங்காதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.05.2015) வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, கிரியைகள் நடைபெற்று தகனத்துக்காக 2.30 மணிக்கு கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

93, 5/9 PETASAN COURT,
PETASAN LANE, COLOMBO-6.
011 236 5160

தகவல்: குடும்பத்தினர்.

(59523) (4.3.7)


# குடும்பநல சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்கள் தின நிகழ்வு



மன்னார், மே 7

உலக குடும்பநல சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்கள் தின நிகழ்வு மன்னார் நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடை பெற்றது.

குடும்பநல சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்திருந்த குறித்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தின ராக வட மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், சிறப்பு விருந்தின ராக வடமாகாண கடற்றொழில் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ் வரன்.கௌரவ விருந்தினர்களாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஆர்.எஸ். யூட் ரதினி. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் திருமதி ரஜனி அன்ரன் சிசில், வட மாகாணத்தின் மாவட்டங்களை சேர்ந்த சுகாதாரப் பணிப்பாளர்கள், மருத்துவர்கள், சுகாதார உயர் அதி காரிகள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். வட மாகாணத்தைப் பிரதிநிதித் துவப் படுத்தும் குடும்ப நல மருத்துவ மாது கள் இந் நிகழ்வில் கலந்து கொண் டது டன்கலைநிகழ்ச்சிகளில்பங்குபற்றினர்.

அதனைத் தொடர்ந்து அதிதிகள் உரை இடம்பெற்றது. தொடர்ந்து குடும்பநல சுகாதார சேவைகள் உத்தியோகத் தர்களாகப் பணி புரிந்து ஓய்வு பெற்ற 4 பெண்களுக்கு நினைவுச் சின்னங் கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர்.

இதன்போது உரையாற்றிய சுகாதார அமைச்சர் பா.சத்திய லிங்கம்:

"ஆசியாவிலேயே ஒரு சிறந்த சுகா தார சேவையைக் கொண்ட முன் னேற்றகரமான நாடாக எமது நாடு உள்ளது. ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது சுகாதார குறிகாட்டி கள் மிக சிறப்பாகக் காணப்படுவதாக உள்ளன. அதனை உலக சுகாதார நிறுவனங்களும் ஏனைய நிறுவனங் களும் அறிக்கைகளில் தொவித்துள் ளன" – என்றார். (வ)

# மகாதேவா ஆச்சிரமத்தில் தியான வகுப்புகள்

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி மகாதேவா ஆச்சி ரமத்தால் சிறுவர்கள், இளை ஞர்கள், யுவதிகளுக்கான பால விகார் வகுப்புக்கள், தியான வகுப்புக்கள் என்பன எதிர் வரும் ஞாயிற்று கிழமை முதல் மகாதேவ ஆச்சிரமத்தில் இலவ சமாக நடத்தபட உள்ளன.

இலவசமாக நடத்தப்படும் வகுப்புக்கள் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தில் பிரதிஞாயிற்றுகிழமைதோறும் காலை 7 மணியில் இருந்து 8 மணி வரை இளைஞர்கள், யுவதிகளுக்கான தியான வகுப்புக்களும், 8மணியில் இருந்து 9.15 மணிவரை சிறுவர்களுக்கான பாலவி கார் வகுப்புக்களும் இடம் பெற உள்ளன எனவும் சின் மயா மிசனை சேர்ந்த சுவாமி பிரமச் சாரி சிவேந்திர சைதன்யாவால் நடத்தப்பட உள்ளதாகவும் இவ்வகுப்புக் களில் பங்குபற்ற ஆர்வமாக உள்ளோர் அனை வரையும் கலந்து கொள்ளுமாறும் மகா தேவா ஆச்சிரமத்தின் தலை வர் ஶ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் கேட்டு கொண்டுள்ளார். (வ-21)

# இலங்கையர் கொலை: அமெ.வில் ஒருவர் கைது

நியூயோர்க், மே 07
அமெரிக்காவில், இலங்கையர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை டெக்ஸாஸ் பியூமாண்ட் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
19 வயதான சன்ட்லர் கெய்ல் வென்டீஸ் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.
வீட்டு உபயோகப்பொருள் கடை உரிமையாளராக இருந்த மேதானந்த குருப்பு (வயது 52) என்ற இலங்கையர் கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி-சுட்டுக் கொல்லப்பட்டார்.
முகமூடி அணிந்த நபர்கள், கடைக்குள் சென்று அவரைத் தாக்கியதுடன் துப்பாக்கிச் சூடும் நடத்தியுள்ளனர்.
சந்தேக நபர்கள் இருவரின் முகங்களும் சீ.சீ.ரீ.வி. கமராவில் பதிவாகியுள்ளன. அதில் ஒரு சந்தேக நபரே இலங்கையர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பியூமொன்ட் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
மேதானந்த குருப்பின் மார்பில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் காணப்படுவதாகத் தெரிவித்த பொலிஸார், கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான சன்ட்லர் கெய்ல் வென்டீஸ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். (த)

# இலங்கையரை மிரட்டிய பிரிட்டனின் வேட்பாளர்

லண்டன், மே 07
பிரிட்டனின் நாடாளுமன்ற வேட்பாளரான ரொபட் பிலே இலங்கையர் ஒருவர் மீது அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.
பிரிட்டனின் வடகிழக்கு ஹம்செயார் பகுதியின் கொன்சவேட்டிவ் கட்சியின் வேட்பாளரான ரணில் ஜெயவர்த்தனவையே அவர் அச்சுறுத்தியுள்ளார். அச்சுறுத்தல் விடுத்ததாகக் கூறப்படும் ரொபட் பிலே, அக்கட்சியிலிருந்து உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
ரணில் ஜெயவர்த்தன, பிரிட்டனில் முதல் ஆசிய நாடாளுமன்ற உறுப்பினராக வர வாய்ப்பிருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இந்நிலையில், பிரசாரக் கூட்டம் ஒன்றின்போது ரொபட்பிலே, ரணில் ஜெயவர்த்தன மீது துப்பாக்கியால் சுடுவேன் என்று எச்சரித்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# தண்டவாளத்தில் வானை செலுத்திய சாரதி கைது

கொழும்பு, மே 07
பேருவளை, மாகல்கந்த பிரதேசத்தில் காலி வீதிக்கு சமாந்தரமாக இருக்கின்ற தண்டவாளத்தில் சுமார் 50 மீற்றர் தூரத்துக்கு வானொன்றைச் செலுத்திய சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
அளுத்கம தர்கா நகரிலிருந்து வெசாக் பார்ப்பதற்காக வந்தவர்களின் வானே இவ்வாறு தண்டவாளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பயணித்துள்ளது.
சாரதி தூங்கியதையடுத்தே வான், தண்டவாளத்தில் பயணித்துள்ளது என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.
அந்த வான், தண்டவாளத்தில் பயணிக்கும்போது அதில், சிறுவர்கள் உட்பட 15பேர் பயணித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.
அந்தத் தருணத்தில் ரயில்கள் பயணிக்காமையினால் இடர் தவிர்க்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
வான், தண்டவாளத்தில் பயணித்தமையால் அந்த தண்டவாளத்தின் ஊடான ரயில் சேவைகள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை சுமார் ஒருமணி நேரம் தாமதம் ஆனது என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.
வானின் சாரதியை கைது செய்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தனர். (த)

# மனைவியுடன் உணவருந்தியவர் உணவகத்தில் வெட்டிக் கொலை

கொழும்பு, மே 07
நவகமுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரணகல சந்தியில் உள்ள உணவகத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவரை இனந்தெரியாத நபர்கள் வெட்டிக் கொலை செய்துள்ளனர் என்று நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை காலை 9.35 மணியளவில்இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவத்தில் கடும் காயமடைந்த 27வயதான தினேஷ் ருவான் ஷாமர என்பவர், நவகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் என்று நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.
அவர், தனது மனைவியுடன் அந்த உணவகத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோதே இனந்தெரியாத நபர்கள் அவரை வெட்டியுள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர்களை இனங்காணவில்லை என்றும், இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (த)

## பிஜிக்கு இலங்கையின் மற்றுமொரு நீதிபதி

பிஜி தீவின் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக இலங்கை நீதிபதியொருவர்நியமிக்கப்பட்டுள்ளார்.
இவர் பிஜி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இலங்கையைச் சேர்ந்த 10ஆவது நீதிபதியாவார்.
வனகுவத்தவதுகே ஜூட் ஷவின்ர பெர்ணான்டோ என்பவரே இலங்கையைச் சேர்ந்த 10ஆவது நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
இவர் பிஜி ஜனாதிபதி ராட்டி எபலி நெய்லாட்டிகோ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார். 1987ஆம் ஆண்டு, இலங்கைச் சட்டதரணிகள் சங்கத்தின் அங்கத்தவரர்க இருந்த இவர், 1998 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்படையிலும் கடமையாற்றியுள்ளார். (த)

# கோத்தாவுக்கு எதிராக ஜே.வி.பி முறைப்பாடு

தேசத்துக்கு மகுடம் (தெயட்ட கிருள) கண்காட்சியின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக் ஷவுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினால் (ஜே.வி.பி) இலஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கோத்தபாய ராஜபக் ஷவுடன் அம்பாறை மாவட்ட முன்னாள் செயலாளர் நீல் டி அல்விஸ்( தற்போது மாத்தளை மாவட்ட செயலாளர்), அம்பாறை நகர சபையின் தலைவர் இந்திக நலின் ஜயவிக்ரம மற்றும் அம்பாறை, இலக்கம் 13, முதலாவது ஒழுங்கையில் வசிக்கும் எஸ்.ஏ. தினுஸ் பிரபாத் ரங்கஜீவ ஆகியோருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த)




# மின்கலத்தில் இயங்கும் நாஸாவின் விமானம்

மின்கலத்தில் கிடைக்கும் சக்தியில் இயங்கும் 10 என்ஜின் கொண்ட நாஸாவின் புதிய விமானத்தின் சோதனை வெற்றிகரமாக முடிந்தது.
ஒரு ஹெலிக்கொப்டரை போலவே டேக்–ஒப் ஆகி தரை இறங்கும் இது ஒரு விமானத்தின் சக்தியைக் கொண்டது.
கிரீஸ்டு லைட்னிங் அல்லது GL-10 என்று அழைக்கப்படும் இந்த விமானம் பல்வேறு சோதனைகளில் வெற்றி பெற்றுள்ளதாக ஹாம்டனில் உள்ள நாஸா மையத்தின் விண்வெளி பொறியியலாளர் பில் அறிவித்துள்ளார்.
இந்த விமானம் குறித்து பில் கூறுகையில்; சிறிய பொருள்களை விநியோகம் செய்ய இந்த விமானம் உதவும். விவசாயத்தை நீண்ட நேரம் கண்காணிப்பது, மப்பிங், தனி நபர் உபயோகம் என்று பல வகையில் இந்த விமானம் பயன்படும்–என்றார்.

# உள்ளத்தை வெட்ட வெளிச்சமாக்கும் கண்ணாடி

கணினி மென்பொருள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள மைக்ரோசொப்ட் நிறுவனம், ஒருவர் நினைப்பதை தெளிவாக காட்டும் மூக்கு கண்ணாடியை உருவாக்கியுள்ளது.
இந்தக் கண்ணாடியில் பல நுண்ணுர்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் கண்ணாடி மூலம் காணப்படுபவரின் உடல் வெப்பத்தைக் கூட எளிதாக அறிய முடியும்.
மேலும், எதிரில் உள்ள ஒரு நபரின் செய்கைகள், குரல் ஆகியவற்றை மைக்ரோசொப்டின் இணையத் தகவல் சேமிப்பகத்துக்கு அனுப்பி, உடனுக்குடன் ஆய்வு செய்து, அவரது எண்ணங்கள் குறித்த தகவல்கள் மூக்குக் கண்ணாடி அணிந்தவருக்கு அளிக்கப்படுகிறது. இதில் உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள், வெவ்வேறு வகையான எண்ணங்களையும் சரியாக வேறுபடுத்தி, தகவல் அளிக்கக் கூடியதாக உள்ளது.
இந்த கண்ணாடிக்கு காப்புரிமை பெற, 2012ஆம் ஆண்டு அமெரிக்க காப்புரிமை அலுவலகத்தில் மைக்ரோசொப்ட் விண்ணப்பித்தது.
இருப்பினும் இந்த மூக்குக் கண்ணாடி விற்பனைக்கு வருமா என்பது குறித்த தகவல்களை அந்த நிறுவனம் வெளியிடவில்லை.



# ஸ்மார்ட் கைபேசிகளுக்கான விண்டோஸ் 10

சில வகையான ஸ்மார்ட் கைபேசிகளில் தற்போது மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் போன் இயங்குதளம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.
இதேவேளை கணினிகளில் Windows 10 Technical Preview பதிப்பு இயங்குதளம் பயன்பாட்டுக்காக விடப்பட்டுள்ளது.
விரைவில் இதன் முழுமையான பதிப்பு வெளியிடப்படவுள்ள நிலையில், அதன் பின்னர் ஸ்மார்ட் கைபேசிகளுக்கான விண்டோஸ் 10 இயங்குதளம் அறிமுகம் செய்யப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.
மேலும் ரப்லெட் சாதனங்களிலும் இவ் இயங்குதளத்தை பயன்படுத்த முடியும் என மைக்ரோசொப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.



# கென்யாவில் கொள்ளையர்கள் அட்டூழியம் 45 பேர் கொலை



கென்யா,மே 07

கென்யாவில் துர்கானா மற்றும் போகோட் கவுண்டிகளின் எல்லைப் பகுதியில் உள்ள நடோமே என்ற கிராமத்துக்குள் புகுந்த கொள்ளையர்கள் திடீரென அங்கிருந்த அப்பாவிப் பொதுமக்களைத் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

அதில் 45 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். உடனே அங்கு இருந்த நூற்றுக் கணக்கான கால்நடைகளைக் கடத்திச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு பொலிஸாரும், இராணுவ வீரர்களும் சென்று காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் கால்நடை திருட்டு மற்றும் குழு மோதல் சம்பவங்கள் நடைபெறுவது தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது.

இது போன்று இந்தச் சம்பவமும் நடந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (14)

## நடிகர் சல்மான்கானுக்கு 5 வருடங்கள் சிறை

### நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



டில்லி,மே 07

இந்தி நடிகர் சல்மான்கான் மீதான கார் விபத்து வழக்கில், 5 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி, நடிகர் சல்மான்கான், மும்பை பாந்திராவில் தன்து நண்பர்களுடன், மதுபோதையில் வேகமாக கார் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது.

அந்த விபத்தில் சாலையோரம் படுத்துத் தூங்கி கொண்டிருந்த நூருல்லா மெகபூப் செரீப் என்பவர் உயிரிழந்தார். மேலும், 4 பேர் பலத்த காயம் அடைந்தனர். பின் னர் அந்த விபத்துத் தொடர்பாக பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

இது பற்றி சல்மான்கானிடம் நீதிபதி தேஷ்பாண்டே விசாரித்தபோது, "சம்பவத்தின் போது நான் கார் ஓட்டவும் இல்லை, மது அருந்தவும் இல்லை என்றும் என்னுடைய சாரதி அசோக் சிங் தான் காரை ஓட்டினார்' எனவும் பரபரப்பு வாக்குமூலம் அளித்தார். ஆனால் சாரதி அசோக் சிங், "நடிகர் சல்மான்கான் தனது வாக்குமூலத்துக்கு வலுசேர்க்கும் வகையில், விபத்துக்குள்ளான காரை நான் தான் ஓட்டினேன் எனக் குறிப்பிட்டுள்ளார்" என்று தெரிவித்தார்.

கடந்த மாதம் 21ஆம் திகதியுடன் இருதரப்பு வாதமும் முடிவுக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து நீதிபதி தீர்ப்பை நேற்று வழங்குவதாக கூறினார். அதன் படி நேற்று தீர்ப்புக் கூறப்பட்டது. இந்த நிலையில் நேற்று பிற்பகல் ஒரு மணி அளவில் தண்டனைத் தீர்ப்பை அளித்த நீதிபதி, சல்மான் கான் மீதான 8 குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப் பட்டுள்ளதாகக் கூறி, அவருக்கு 5 வருடங்கள்சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டார். (14)

## மீண்டும் நில அதிர்வு



காத்மண்டு,மே 07

நேபாளத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி பயங் கர நிலநடுக்கம் ஏற்பட் டதைத் தொடர்ந்து, நூற்றுக்கும் மேற்பட்ட நில அதிர்வுகள் தொடர்ந்தும் ஏற்பட்டுள்ளன. இது வரை 143 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் நேற்றுமுன்தினமும் தாடிங்–நுவாகோட் மாவட்டங்களின் எல்லையில் 4.0 ரிக்டர் அளவு கொண்ட நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (14)

## எச்.ஐ.வி. இரத்தத்தில் அச்சிடப்பட்ட பத்திரிகை




பெர்லின்,மே 07

உயிர்க்கொல்லி நோயான எய்ட்ஸ், உலகம் முழுவதும் மிகவும் வேகமாகப் பரவி வருகிறது. இந்த நோய்க்கு எதிரான விழிப்புணர்வு பல நாடுகளிலும் மிக மிக குறைவாக உள்ளது. மக்களிடையே இந்த நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பல நிறுவனங்கள் முயன்று வருகின்றன.

அந்த வகையில் ஆண்களுக்கான ஜேர்மனி மாதப்பத்திரிகை ஒன்று வித்தியாசமான முறையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது. 'வங்கார்டிஸ்ட்' என பெயரிடப்பட்டு உள்ள அந்தப் பத்திரிகை, எச்.ஐ.வி. வைரஸ் மற்றும் எய்ட்ஸ் நோய் குறித்த சிறப்பு பதிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த இதழ் முழுவதும் எய்ட்ஸ் நோயாளிகளுடனான பேட்டிகள், அவர்களது அனுபவங்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் இடம் பெற்றுள்ளன. அதில் முக்கிய அம்சமாக, எச்.ஐ.வி. வைரஸ் தாக்கிய இரத்தம் கலந்த மையினால் பத்திரிகையின் அட்டைப் படம் அச்சிடப்பட்டுள்ளது. அதற்காக எச்.ஐ.வி. பாதித்த 3 பேர் இரத்தம் கொடுத்துள்ளனர்.

எய்ட்ஸ் பாதித்த நபரை தொடுவதனால் அந்த வைரஸ் பரவாது என்பதை மக்களிடம் உணர்த்துவது, இதற்கான நோக்கங்களில் ஒன்றாகும் என்று அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (14)



## கல்லறையின் அதிசயம்

உலகிலிருந்து பிரிந்தவர்களில் பலர் இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருப்பதாக ஒரு சிலரால் மட்டுமே நம்பப்படுகிறது. அந்த வகையில், கடந்த 1857 ஆம் ஆண்டு இறந்து போன பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி ஒருவரை ஒரு கிராமமே கடவுளாக வழிபட்டு வருகிறது. அவர் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வைப்பதாக அவர்கள் ஆணித்தரமாக நம்புகின்றனர். மேலும், அவருக்கு சிகரெட், பீடி மற்றும் பியர்போத்தல்களைவைத்து வினோத வழிபாடுகளையும் நடத்துகின்றனர். பிரிட்டன் இராணுவ வீரரான அவர் கடந்த 1857 ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்த ஒரு போரின்போது கொல்லப்பட்டார். அதன் பின்னர், லக்னோவில் அவருக்கு ஒரு கல்லறை எழுப்பப்பட்டது. அந்தக் கல்லறையை அந்த ஊரில் உள்ள மக்களும், வெளியூரில் இருந்து வரும் மக்களும் கடவுளாக வழிபடுகின்றனர். அது மட்டுமல்லாது சிகரெட், மதுவையும் அவர் குடிப்பதாகவும் கூறப்படுகிறது. இது எந்த அளவு உண்மை என்பது பற்றி தெரியவில்லை. (14)

## நிலநடுக்க மீட்புக்குழுவினர் நாடுகளுக்குத் திரும்பினர்



காத்மண்டு,மே 07

நேபாளத்தில் பயங்கர நிலநடுக்கத்தை தொடர்ந்து, மீட்பு பணிகளை மேற்கொள்ளச் சென்ற இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு மீட்பு குழுவினர் 11 நாள்களின் பின்னர் தங்களது நாடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 611 ஆக உயர்ந்துள்ளது. நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்ட சில மணி நேரத்திலேயே, மீட்புப் பணிகள் மேற்கொள்ள இந்தியாவிலிருந்து தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் அனுப்பிவைக்கப்பட்டனர்.தொடர்ந்து பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மொத்தம் 4 ஆயிரத்து 500 மீட்புக் குழுவினர் தலைநகர் காத்மண்டு உள்ளிட்ட பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்பு பணிகளை மேற்கொண்டனர்.

மேலும், நிவாரண உதவிகளும், மருத்துவ உதவிகளும் சர்வதேச நாடுகள் சார்பில் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது, மீட்புப் பணிகள் பெருமளவில் முடிந்து விட்டன. இனியும் யாரையும் உயிருடன் மீட்க வாய்ப்புகள் இல்லை என்பதால், முதலில் வந்த வெளிநாட்டு மீட்பு குழுவினர் சொந்த நாடுகளுக்கு திரும்புமாறு நேபாள அரசு கேட்டுக் கொண்டது. அதனைத் தொடர்ந்து, இந்தியா உள்ளிட்ட 34 நாடுகளைச் சேர்ந்த 11 மீட்பு குழுக்களைச் சேர்ந்த 500 பேர் நேற்று முன்தினம் தங்களது நாடுகளுக்குத் திரும்பியுள்ளனர். மீட்பு குழுவினரைத் தவிர நிவாரண உதவிகள் மேற்கொள்ளும் குழுவினரும், மருத்துவக் குழுவினரும் தொடர்ந்து 2 வாரங்களுக்கு நேபாளத்தில் தங்கி பணிகள் மேற்கொள்வார்கள் என நேபாள வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (14)


## பப்புவா நியூ கினியாவில் சுனாமி எச்சரிக்கை

சிட்னி,மே 07

பப்புவா நியூ கினியாவில் உள்ள ராபவுல் நகரில் இருந்து 150 கிலோ மீற்றர் தெற்கே நேற்று முன்தினம் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலில் அந்த நிலநடுக்கம் 7.4 புள்ளிகளாக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பூமிக்கு அடியில் 63 கிலோ மீற்றர் ஆழத்தில் அந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நிலநடுக்கம் ஏற்பட்ட இடத்தை சுற்றிலும் 300 கிலோ மீற்றர் தூரத்தில் சுனாமி ஏற்பட வாய்ப்பு இருப்பதாக பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் அறிவித்தது. அதனால் மக்கள் பீதி அடைந்துள்ளனர். உடனே அந்தப்பகுதியில் இருந்தவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். ஆனால் நிலநடுக்கத்தால் பெரியஅளவில் உயிர்சேதமோ, பொருள் சேதமோ ஏற்படவில்லை. (14)

## அமெரிக்காவில் மர்ம நபர்கள் தாக்குதல்



வொஷிங்டன்,மே 07

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள கார்லாண்ட் நகரின் புறநகர் பகுதியில் 'கர்திஸ் கால்வெல் சென்டர்' என்னும் அரங்கம் உள்ளது. அங்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் இஸ்லாமியர்களுக்கு எதிரான கேலிச்சித்திரம் மற்றும் ஓவியக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இந்தக் கண்காட்சி நிறைவு பெற இருந்த நிலையில் ஓவியக் கண்காட்சி நடந்த அரங்குக்கு காரில் வேகமாக வந்த 2 பேர் அரங்கின் நுழைவு வாயிலில் பாதுகாப்புக்கு நின்றிருந்த அதிகாரியை நோக்கி திடீரென துப்பாக்கியால் சுட்டனர். இதனையடுத்து அதிர்ச்சி அடைந்த பொலிஸார், பதில் தாக்குதல் நடத்தினர். அதன் போது காரில் இருந்த மர்மநபர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்த நிலையில், அந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். (14)

## கனடா உல்லாசப் பயணிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை

றொறான்றோ,மே 07

கனடா மற்றும் அமெரிக்காவில் இருந்து மெக்சிக்கோ செல்லும் உல்லாசப்பயணிகளுக்குபொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மெக்சிக்கோவின் பிரபல பகுதிகளில் போதைப் பொருள் கும்பல்களுக்கும், பொலிஸாருக்கும் இடையிலான வன்முறை தீவிரமடைந்து வருவதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் நடைபெற்ற வன்முறையில் குறைந்தது 9 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். இதையடுத்து அங்குள்ள வங்கிகள் மற்றும் எரிவாயு நிலையங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாமல் போதை பொருள் கடத்தும் கும்பல் ஓர் ஏவுகணையை உபயோகித்து இராணுவ ஹெலிஹொப்டர் ஒன்றை வீழ்த்தியுள்ளனர். மெக்சிக்கோவில் உள்ள கனடாத் தூதரகம் வெளியிட்டுள்ள எச்சரிக்கையில், மெக்சிக்கோவின் ஜலிஸ்கோ மாநிலத்தில் தங்கியிருக்கும் கனடாப் பயணிகள் அவர்களது நடமாட்டங்களை குறைத்துக்கொள்ள வேண்டும்.மேலும்,பயணிகள் விழிப்புடன் இருக்கும் படியும் கனடாவில் உள்ள அவர்களது அவசர தொடர்பாளர்களுடன் தொடர்பில் இருக்கும் படியும் அறிவித்துள்ளது. (14)

## செயற்கை இதயம் பொருத்தப்பட்ட இரண்டாவது நபர் உயிரிழப்பு

### அதிர்ச்சியில் மருத்துவ[illegible]கள்

பாரிஸ்,மே 07
பிரான்ஸ் நாட்டில் செயற்கை இதயம் பொருத்தப்பட்ட இரண்டாவது நபரும் உயிரிழந்துள்ளமை மருத்துவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 69 வயதான நபர் ஒருவரின் இதயம் பலவீனமாக இருந்ததால், அவருக்கு செயற்கை இதயத்தை மருத்துவர்கள் பொருத்தினர். 8 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற அந்தச் சிகிச்சையின் முடிவில் மருத்துவர்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் அவர் மிகவும் ஆரோக்கியமாகக் காணப்பட்டார்.
மேலும், உடல்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டதால் சராசரி மனிதர்களைப் போன்று தன்னால் செயல்பட முடிகிறது என்றும் இனி இரண்டு சக்கர வாகனத்தில் கூட பயணிப்பேன்எனவும்உற்சாகமாகத் தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில் அவருக்குத் திடீரென ஏற்பட்ட இரத்த ஓட்ட சரிவு பிரச்சினை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 8 மாதங்களுக்கு முன்னர் பொருத்திய செயற்கை இதயம் சரிவர இயங்காமல் இருப்பதை வைத்தியர்கள் கண்டுபிடித்தனர். பின்னர், அ[illegible]நக்குத் தேவையான மாற்று சிகிச்சைகள் அளித்தும் பயனில்லாமல் கடந்த சனிக்கிழமை அன்று அவர் உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
பின்னர், செயற்கை இதயத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தி இரண்டாவது நபருக்கு பொருத்தியதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. 5 மாதங்களைக் கடந்தும் அவர் ஆரோக்கியமாக இருந்ததால், இ[illegible] செயற்கை இதயம் நல்ல [illegible]த் தருகிறது என்ற நம்பிக்[illegible] மருத்துவர்கள் இருந்த[illegible]
ஆனால், இரண்டாவதாக செயற்கை இதயம் பொருத்தப்பட்ட நபரும் தற்போது இறந்துள்ளமை மருத்துவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (14)

# சிரியாவில் தொடரும் போர்க்குற்றங்கள்

## சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு


டமாஸ்கஸ்,மே 07
சிரியாவின் இரண்டாவது நகரான அலிப்போவில் பொதுமக்கள் 'சிந்திக்க முடியாத அட்டூழியங்களில்' சிக்கி சித்திரவதைப்படுகின்றனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.
அலிப்போவில் ஒவ்வொரு நாளும் அரசபடைகள் மற்றும் கிளர்ச்சிப் படைகள் தொடர்ந்து போர் குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த சிலவாரங்களாக கிளர்ச்சியாளர்களுக்குப் பதிலடி கொடுக்க அலிப்போவில் குண்டு வீச்சை சிரிய இராணுவம் அதிகரித்துள்ளது. சுஸ்ரீரியாவில் கடந்த வாரம் நடத்தப்பட்ட தாக்குதலின் போது அல்–தாவ்லா மாவட்டத்தில் ஆரம்பப் பாடசாலை மீது பீப்பாக் குண்டு தாக்கியதில் 4 சிறுவர்கள், ஆசிரியர்கள் என மொத்தம் 10 பேர் உயிரிழந்தனர். அங்கு நடைபெற்ற 8 தாக்குதல் சம்பவங்களில் பெரும்பாலும் பொதுமக்களே உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.
பொதுமக்கள் அதிகமாக வாழும் பகுதியில் இவ்வாறு திட்டமிட்டு



தாக்குதல் நடத்தப்படுவது, மனிதத் தன்மைக்கு எதிரானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
அலிபோவில் கிளர்ச்சியாளர்கள் படையும் போர் குற்றங்களில் ஈடுபட்டு வருகிறது. கொடூரமான ஆயுதங்களைக் கொண்டுகிளர்ச்சிப் படையும் அங்கு தாக்குதல்களை நடத்தி வருகிறது. மேலும் இராணுவம் மற்றும் கிளர்ச்சிபடையினராலும் கடத்தப்படும் பொதுமக்கள் பெரிதும் துன்புறுத்தப்படுகின்றனர் என்றும் சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்து உள்ளது. மிகவும் கொடூரமான நிலையில் அலிப்போ நகரம் உள்ளது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.
பீப்பாய்க் குண்டுகள் வீச்சு மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பல வருடங்களுக்கு முன்னதாகவே ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானம் கொண்டு வந் துள்ளது. இதனை மீறினால் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் குறிப்பிடப்பட்டு இருந் ததை சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது. (14)

## சுற்றுலாப் பயணிகளுக்காக சீனாவின் ஐடியா

பீஜிங்,மே 07
சீனாவுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக நூதனமான வேடிக்கை நிகழ்ச்சிகளை சுற்றுலா துறை நடத்தி வருகிறது.
மத்திய சீனாவில் உள்ள ஏரி ஒன்றில் மிக உயரமான மரப்பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நன்கு பயிற்சி பெற்ற வெள்ளைப் பன்றிகளின் மீது சிவப்பு நிறத்தில் எண்களைப் பதித்து, அவற்றை பாலத்தின் மீது கொண்டு செல்கின்றனர். பின்னர், பன்றிகளை பாலத்தின் மீது வரிசையாக நிற்க வைத்து நீண்ட ஒரு பிரம்பின் உதவியுடன் ஒவ்வொரு பன்றியாக தள்ளி விடுகின்றனர்.



உயரத்திலிருந்து விழும் பன்றிகள் பறந்து வருவதுபோல், தண்ணீரில் விழுந்து, அங்கிருந்து நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம் வரை சென்று கரையேறுகின்றன.இந்தவிநோத நிகழ்ச்சியை உற்சாகமாக கண்டுகளிக்கும்சுற்றுலாப் பயணிகள்,பன்றிகள்கீழே விழும் போது மகிழ்ச்சியாக கோஷங்கள் எழுப்புவதுடன், பன்றிகள் நீந்தும் போது உற்சாகமாக கை தட்டி மகிழ்கின்றனர். இந்த நிகழ்ச்சி சுற்றுலா பயணிகளிடையே வரவேற்பை பெற்றிருந்தாலும், விலங்குகளை அரசே சித்திரவதைசெய்யத்தூண்டிவருவதாகக்குற்றச்சாட்டுகளும்எழுந்துள்ளன.(14)

## பயங்கரவாதத்தைத் தூண்டுகிறது இந்தியா

இஸ்லாமாபாத்,மே 07
இந்தியா பயங்கரவாதத்தை தூண்டுகிறது என்று பாகிஸ்தான் இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.
பாகிஸ்தானில் பயங்கரவாதத்தை இந்தியா தூண்டுகிறது என்பது தொடர்பான குற்றச்சாட்டில் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் கவலையை வெளிப்படுத்தியுள்ளனர். ராவல்பிண்டியில் பாகிஸ்தான் இராணுவ ஜெனரல் ராஹீல் செரீப் தலைமையில் நடைபெற்ற இராணுவ அதிகாரிகள் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை ஆலோசிக்கப்பட்டுள்ளது.
பாகிஸ்தானின் கராச்சி நகரில் முத்தாகிதா குவாமி இயக்கத்துடன் தொடர்பு உடைய தொழிலாளர்கள் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வன்முறையை தூண்டிவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பான செய்திகள் பாகிஸ்தான் இணையதளங்களில் வெளியாகின. (14)

## திருமணமாகாத ஜோடிகள் பைக்கில் பயணிக்கத் தடை

திருமணமாகாத ஜோடிகள் இரு சக்கர வாகனங்களில் ஒன்றாக பயணம் செய்வதற்கு தடைவிதிப் பதற்கு, இந்தோனேசியாவின் அச்சே மாகாணத்திலுள்ள ஒரு மாவட்டத்தின் அரசியல்வாதிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.
வடக்கு அச்சே பகுதியில் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தப் புதிய சட்டம், உள்ளூர் பாடசாலைகளில் மாணவ மாணவிகளுக்குத் தனித் தனியாக கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. இந்தச் சட்டம் அடுத்த வருடம் நடைமுறைக்கு வருகிறது. இந்தோனேசியாவில் உள்ள அச்சே மாகணம் ஒன்று தான் இஸ்லாமிய ஷரியா சட்டத்தின் விளக்கத்தை கடுமையான வகையில் நடைமுறைப்படுத்தியுள்ளது.
இரு சக்கர வாகனத்தில் செல்லும் பெண்கள் இரண்டு பக்கமும் கால்களை போட்டபடி பயணிக்கூடாது என்றும் இரண்டு கால்களையும் ஒரே பக்கமாக வைத்தபடி பின் இருக்கையில் அமர்ந்து செல்ல வேண்டும் என்றும் உத்தரவு பிறப் பித்திருந்தது. ஆனால் அந்தச்சட்டம் பரவலாக நடைமுறையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (14)

## சிரியாவில் தாக்குதல் நடத்துவோம் ஹிஸ்புல்லா இயக்கம் சபதம்



டமாஸ்கஸ்,மே 07
சிரியாவில் அல்–நுஸ்ரா தீவிரவாத இயக்கத்துக்கு எதிராக தாக்குதல் நடத்துவோம் என்று, ஹிஸ்புல்லா இயக்கம் சபதமிட்டுள்ளது.
சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல்–அசாத்தை பதவியில் இருந்து அகற்றுவதில் அல்–நுஸ்ரா தீவிரவாத இயக்கம் முக்கிய பங்காற்றியது. மிகவும் பலம்வாய்ந்த தீவிரவாத அமைப்பு என்றும் அது தெரிவிக்கப்பட்டுள்ளது. தீவிரவாத இயக்கம் அலிபோவில் உள்ள விமானப்படைத் தலைமையகத்தில் தாக்குதல் நடத்தியதில் தொடர்பு கொண்டது. இந்தத் தீவிரவாத இயக்கம் அல்குவைதாவுடன் [illegible]ங்களை இணைத்துக் கொண்டது. தற்போது தீவிரவாத இயக்கம் அல்குவைதாவுடனான தொடர்[illegible] துண்டித்துக் கொள்ள முயற்[illegible]கிறது என்றும் தகவல்கள் வெ[illegible]ரியாகியது.
அமெரிக்கா, அல்–நுஸ்ரா இ[illegible]க்கத்தைத் தடை செய்யப்பட்ட தீ[illegible]ர வாத இயக்கமாக அறிவித்துள்ள[illegible]. சிரியாவின் 2 ஆவது நகரம[illegible] அலிபோவை சுற்றிய பகுதி[illegible] அல்–நுஸ்ரா தீவிரவாத இயக்[illegible] பலம் வாய்ந்ததாகவுள்ளது. (1[illegible])

# படகு மூழ்கியதில் 10 பேர் சாவு

மத்திய தரைக்கடல் பகுதியில் சிசிலிக்குத் தெற்கில் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிவந்த படகு ஒன்று மூழ்கியதில் பத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக சேவ் த சில்ரன் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.
மத்திய தரைக்கடல் பகுதியைக் கடக்க முயன்று இந்த வருடம் ஆயிரத்து 750 பேர் உயிரிழந்துள்ளனர். உதவிக்கு வந்த கப்பலைப் பார்த்ததும் பலர் கடலில் குதித்ததாக, தப்பிப்பிழைத்த ஒருவர் தெரிவித்துள்ளார்.
இந்தச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று நடந்திருக்க வேண்டுமென்றும் எத்தனை பேர் உயிரிழந்திருக்கிறார்கள் என்பது சரியாகத் தெரியவில்லை யென்றும் கேடனியாவில் உள்ள சேவ் த சில்ரன் அமைப்பின் பிரதிநிதி தெரிவித்துள்ளனர்.



ஒரு மிதவையில் 137 பேர் பயணம் செய்ததாகவும் அது வெடித்தாலோ, காற்று இறங்கியதாலோ இந்த விபத்து நேரிட்டிருப்பதாக உயிர் பிழைத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.
புகலிடக் கோரிக்கையுடன் அபாயகரமாக கடலைக் கடக்கும் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக 26 ஐரோப்பிய நாடுகளின் கப்பற்படை தலைவர்கள் இத்தாலியின் நேப்பிள்ஸ் நகரில் கூடியிருக்கும் தருணத்தில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. (14)

ராஜராஜன்



# இயற்கையே காரணம்

நேபாள நாட்டில் நிகழ்ந்த மோசமான நில நடுக்கம் அந்தச் சிறிய மலைநாட்டை சின்னாபின்னமாக்கிவிட்டது. பல ஆயிரக்கணக்கானவர்கள் சாவைத் தழுவுவதற்கும், ஏராளமானவர்கள் காயங்களுக்கு உள்ளாவதற்கும், பலர் காணாமல் போவதற்கும் இந்த நிலநடுக்கம் காரணமாகிவிட்டது.

உலகிலேயே ஒரேயொரு இந்துமத நாடான நேபாளம் இமயமலைச் சாரலில் காண்போரைக் கவரும் வனப்புடன் அமைந்துள்ளது. இமயமலையின் மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரம் நேபாள நாட்டின் பகுதியில் அமைந்துள்ளதால் இந்த நாடு மேலும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. ஆண்டுதோறும் ஏராளமான மலையேறிகள் நேபாளத் தைச் சூழ்ந்துகொண்டே இருப்பார்கள். மலையேறிகளுக்கு வழிகாட்டிகளாகப் பணிபுரிவதன் மூலமாக சுதேசிகள் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைத்து வருகின்றது.

இந்த நிலையில் இயற்கையின் கோரத் தாண்டவம் அந்த நாட்டின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிவிட்டது. கட்டடங்கள் பலவும் இடிந்து அழிந்துவிட்டன. புராதனச் சின்னங்களும், மதிப்பு வாய்ந்த ஆலயங்களும் மண்மேடாக மாறிவிட்டன. எங்கு பார்த்தாலும் பூமியில் ஏற்பட்டுள்ள பெரிய வெடிப்புக்களும், இடிந்த கட்டடங்களின் குவியல்களும் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகின்றன. நேபாள மக்கள் தமக்கு ஏற்பட்ட அவலத்துக்குப் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர். ஆண்டுதோறும் இடம்பெறும் பெரும்தொகையான மிருகபலியை ஒருசாரார் நில நடுக்கத்துக்கான காரணமாகக் குறிப்பிடுகின்றனர். வேறொரு சாரார் அரசியல் வாதிகளின் நெறிபிறழ்ந்த நடவடிக்கைகளை இயற்கை பொறுத்துக் கொள்ள முடியாத காரணத் தாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகக் கூறுகின்றனர். ஆனால் விஞ்ஞானிகளோ பூமித் தகடுகளின் அசைவின் காரணமாகவே நில நடுக்கம் ஏற்பட்டதாகத் தமது விஞ்ஞானபூர்வமான வாதத்தை முன்வைக்கின்றனர்.

இது விஞ்ஞான யுகம் என்பதால் விஞ்ஞானத்துக்கே பலர் முன்னுரிமை வழங்குகின்றனர். அதை ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றனர். என்னதான் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டாலும் இயற்கையை வென்றுவிடுவதற்கு மனிதர்களால் முடியவே முடியாது. சுனாமி, இடிமின்னல்,சூறாவளி, நிலநடுக்கம், பெருவெள்ளம், வறட்சி ஆகியவற்றைத் தடுப்பதற்கு மனிதர்களால் முடிவதில்லை. இயற்கைக்கு அவர்கள் அடிபணிந்து நிற்கின்றனர். மனிதர்களின் இயற்கைக்கு மாறான செயற்பாடுகள்கூட அனர்த்தங்களுக்கு வழிவகுத்து விடுகின்றன. அணைகளை அமைத்து நீரை ஒரேயிடத்தில் தேக்கி வைப்பதனாலும் பூமியின் சமநிலை பாதிக்கப்படுகின்றது. நிலத்துக்கு அடியில் மேற்கொள்ளப்படும் அணுகுண்டு வெடிப்புப் பரிசோதனைகளும் ஆபத்தை உண்டுபண்ண வல்லன. இதைவிடப் பல்வேறு வகையிலும் இயற்கையை மாசுபடுத்தும் செயற்பாடுகளில் மனிதர்கள் ஈடுபடுகின்றனர்.

> மதிப்பு வாய்ந்த ஆலயங்களும் மண்மேடாக மாறிவிட்டன. எங்கு பார்த்தாலும் பூமியில் ஏற் பட்டுள்ள பெரிய வெடிப்புக்களும், இடிந்த கட்டடங்களின் குவியல்களும் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகின்றன. நேபாள மக்கள் தமக்கு ஏற்பட்ட அவலத் துக்குப் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர். ஆண்டு தோறும் இடம்பெறும் பெரும்தொகையான மிருக பலியை ஒருசாரார் நில நடுக்கத்துக்கான காரண மாகக் குறிப்பிடுகின்றனர்.



நாம் தெய்வத்தை நம்புகிறோமோ இல்லையோ எமக்கும் மேலாக ஒரு மாபெரும் சக்தி உள்ளதென்பதை நம்பத்தான் வேண்டும். எம்மையெல்லாம் ஆட்டிப் படைப் பதும் அந்த சக்திதான். அதைத்தான் இயற்கை என்று குறிப்பிடுகின்றோம். இயற்கையை விரோதித்துக்கொண்டு மனிதர்களால் நிம்மதியாக வாழவே முடியாது. நேபாள நாட்டின் துயரத்துக்கும் இதனையே காரணமாகக் கொள்ள முடியும்.

---

# மட்டு போதனா வைத்தியசாலையில் ஆபத்துதவிப் பிரிவுக்கான கட்டடம் அமைப்பதற்கு ரெலிக்கொம் உதவி



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர மற்றும் விபத்துக்கான செயற்றிட்டத்தின் அதிசிறப்பு அனுசரணையாளரான ஸ்ரீலங்கா ரெலிகொம் (ஸ்ரீலரெ) இச்செயற்றிட்டத்தின் அடுத்த கட்டத்திற்கான தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. அண்மையில் இக்கம்பனியில் நடந்த சிறப்பு நிகழ்வொன்றில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் கூட்டாண்மை பிரிவின் பிரதான அதிகாரி எஸ்.கே லால் ரஞ்சித், ஒரு மாதிரி காசோலையை தேசிய விபத்துச் சேவை ஆதரவு நிலையத்தின் தலைவர் டொக்டர் டேவிட் யங் இடம் கையளித்தார்.

இச்செயற்றிட்டமானது, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையைப் புதுப்பித்து, அதில் ஒரு முழுமையான அவசர உதவி மற்றும் விபத்து பிரிவினைஅமைப்பதன் மூலம், அப்பிராந்தியத்திலுள்ளபெரும்பாலான மக்க ளுக்குச் சேவை செய்யும் நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. இச்செயற்றிட்டம் மூலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையானது ஒரு நவீன அவசர உதவி வரவேற்பு பகுதி. விபத்து மதிப்பீட்டு வசதி, முழுமையான உபகரணங்களைக் கொண்ட 3 சத்திர சிகிச்சைக் கூடங்கள், நோய் மதிப்பிடும் அறைகள், சிகிச்சை பெறும் அறைகள், பெண், ஆண் நோயாளர்களுக்கான 100 படுக்கைகளைக்கொண்ட சிகிச்சைப்பிரிவு வசதிகள், தேவையான ஊழியர்கள், களஞ்சிய வசதிகள் ஆகியனவற்றைக் கொண்டதாக முழுமாற்றம் செய்யப்படவுள்ளது. ஸ்ரீலங்கா ரெலிக்கொமுடன் தேசிய விபத்துச்சேவை ஆதரவு நிலையம் இணைந்து இந்த செயற்றிட்டத்திற்கான அதிசிறப்பு அனுசரணைக்கான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இச்செயற்றிட்டத்திற்கான ஒரு பகுதி நிதியை ஸ்ரீலங்கா ரெலிக்கொம் மற்றும் பிற கூட்டாண்மை நிறுவனங்களும், மிகுதியை இலங்கை அரசாங்கமும் வழங்கியுள்ளன.

இந்த பி.ஈ.ஏ.பி செயற்றிட்டத்தின் ஆரம்பம் பற்றிக்கருத்துரைத்த திரு லால் ரஞ்சித், இந்த சிறப்பு நோக்கத்துக்காகப் பங்களிக்கும் வாய்ப்பினைப் பெற்றதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

மட்டக்களப்புப் பகுதியில் இந்த மாதிரியான வசதிகளைக்கொண்டதொரு வைத்திய சாலை மிகவும் அவசியமான தொன்றாகும்.

இதற் கான அடிக் கல்லை நடுவதில் நாம் ஆர்வத்துடன் இருக்கின்றோம்.

எந்த வகையிலும் சமூகத்திற்கு உதவு வது எமது பொறுப்பாகும். இம் முயற்சியில் பிற கூட்டாண்மை நிறுவனங்களும் இணைந்து கொள்ள வேண்டுமென அழைக்கிறோம் என்றார்.

இந்த நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றதிகாரி திரு நிஹால் டி ரன் கருத்துரைக்கையில், இலங்கையின் தேசிய விபத்துச் சேவைக்கு ஆதரவளிக்கும் நிலையமானது, செயற்றிட்டத்தின் அதிசிறப்பு அனுசரணையாளரான ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திடமிருந்து இந்த இரண்டாவது பகுதி நிதி உதவியைப் பெறுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. இந்தப் பங்களிப்பானது, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வளவிலே மூன்று சத்திரசிகிச்சைக் கூடங்கள், அவசரகால மற்றும் விபத்து வசதிகளைக்கொண்ட மூன்று மாடிக்கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்ற எமது குறிக்கோளை அடைவதை நாம் நெருங்குவதற்கு உதவியிருக்கிறது. 2015 மே முடிவுக்குள் இந்தக்கட்டடத்தைக் கட்டுவதற்கான அடிக்கல்லை நடுவதற்கான எல்லா முயற்சிகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம். அதைத்தொடர்ந்து, வைத்தியசாலைக்கான நவீன மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கான நிதியைத் திரட்டுவதில் கவனம் செலுத்துவோம். அத்துடன், அவசர மற்றும் விபத்துதவிக்கான வசதிகளை நிர்வாகப்படுத்துவதில் சுகாதார அமைச்சுக்கு உதவுவதற்கான பயிற்சிகளையும் ஒழுங்கு செய்யவுள்ளோம்– என்றார். (த)

2015 மே 07 வியாழக்கிழமை உதயன்

## போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும்

என் அபிமான உதயனுக்கு அன்னைதாஸனின் அகங் குளிர்ந்த, மனம் நிறைந்த வணக்கங்களும், பாராட்டுக்களும்.

என் உதயன், எனை வளர்க்கும் உதயன் என் கண்முன்னால் விமர்சிக்கப்படுவதையும் இந்த ஈனமிகு சண்டாளர்களால் எமது எதிர்காலச் சந்ததி குறிப்பாக ஏழை விவசாயிகள் சுரண்டப்படுவதையும் என்னால் சகிக்க முடியவில்லை.

பலர் உங்கள் துணிச்சலையும், எந்தன் காட்டமான வரிகளையும் தொட்டுக்காட்டி தொலைபேசி மூலமும், தெருக்களிலும் மறித்து நேரிலும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். யாரும் போற்றுவார் என்றோ தூற்றுவார் என்றோ என் மேடையையும், என் எழுத்தை யும், என் கவிதைகளையும் நான் பயன்படுத்துவதில்லை, இவை வருங் காலச் சந்ததியை விழிக்க வைத்து உணர்வூட்டி ஒழுக வைக்கும் வரிகள், பாராட்டுக்கள், பாடல்கள், பேச்சுக்கள் அவ்வளவே. இங்குள்ளவர்களைப்போலமேடைக்காவோவும் பெரியோர்கள் என்று நினைப்போரையும் திருப் திப்படுத்துவதற்கானவையோ அல்ல. இதையிட்டு கிடைக்கும் பாராட்டுக்கள் அனைத்தும் என் உதயனுக்கே அன்றி எனக்கல்ல. தூற்றல்கள் இருந்தால் அவற்றை நான் ஏற்கிறேன்.

எமது வருங்கால இளைஞர்களை, பிஞ்சுகளைக் கெடுக்கும் கஞ்சா, போதைவஸ்து கடத்தியவர்களை சுட்டிக்காட்டுகிறாய். அவர்களை என்ன செய்கிறார்கள். அவர்களுக்குரிய நீதி என்ன.... என்பதை அறிவிக்கின்றாயில்லை. இந்தச் சமூகவிரோதிகளைச் சரியாகத் தண்டிக்காவிட்டால், எமது சந்ததி பாழ்பட்டே போகும். கல்விக்குப் பேர்போன யாழ் மண்ணை அதன் மகிமையை, அதன் பெருமையைச் சீரழிக்கவே நடைபெறுகின்றது திட்டமிட்ட நாடகம், எனவே சம்பந்தப்பட்டோரே, தயவு செய்து எமது மண்ணின் மாண்புக்காக இதனைத் தொடாதீர்கள், செய்யாதீர்கள் என பல ஆக்கங்கள் தொடராக உன்னிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். விவசாயிகள் படும்பாடு அப்பப்பா.....? விவசாயத்துக்குரியவர்களே விழியுங்கள். மேடைகளைப் பிறகு பார்ப்போம். நிறைவாக சாதனையை நோக்கி நகரும் உதயன் என்னும் இளைஞன் உரத்துடன் வீறு நடைபோட அன்னையை வேண்டி அமைகின்றேன். வாழ்க வளர்க.

*கவிமணி*
*அன்னைதாஸன், ஊரெழு.*

## வாசகர் திருமுகம்



## அநியாயச் சாவுகளைத் தடுப்போம்

யாழ். குடாநாட்டில் அநியாயமாக உயிர்கள் பறிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றமை வேதனையை ஏற்படுத்துகின்றது.

மின்கம்பி அறுந்து வீழ்ந்ததால் தந்தையும், மகனும் சாவு, பக்தர்களுக்கு இலவசமாக தேநீரை வழங்கியவர் மின்சாரம் தாக்கியதால் அவலச் சாவு....... இவ்வாறாக சாவுகளின் எண்ணிக்கை தினமும் அதிகரித்தவாறே செல்கின்றன.

போர் இடம்பெற்றபோது நிகழ்ந்த அவலச் சாவுகளுக்கு ஈடாகப் போர் ஓய்ந்த பின்னரும் இடம்பெறுவதை விதியின் சோதனை என்றுதான் குறிப்பிட வேண்டும். வாகன விபத்துக்களால் தினமும் ஆகக் குறைந்தது ஒருவராவது சாவைத் தழுவிக் கொண்டிருக்கிறார்கள். விபத்துக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தவாறே செல்கின்றது. வீதிகளில் நடந்து செல் வதற்குக் கூட அஞ்சும் நிலையில் மக்கள் உள்ளனர். பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்ளும் சாரதிகளே இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.


இதைவிட வன்முறைக் கலாசாரம் வேரூன்றி வருவதாலும், அவலச் சாவுகள் இடம் பெறுகின்றன. போதைப் பொருள்கள், மதுபாவனை, வெற்றிலையைப் பயன்படுத்துதல் ஆகியனவும் அதிகரித்துள்ளதால் இவற்றின் காரண மாகவும் பலர் உயிர்களை இடை நடுவில் பறி கொடுக்கின்றனர்.

தற்போது வயது வேறுபாடு இல்லாமல் வெற்றிலை போடும் வழக்கம் அதிகரித்துள்ளது. வெற்றிலை வியாபாரிகள் சுவையூட்டும் வாசனைப் பொருள்கள் அடங்கிய வெற்றிலையை விற்பனை செய்வதால் இளைஞர்கள் அதனால் கவரப்பட்டு வெற்றிலைப் பிரியர்களாக மாறி விடுகின்றனர். இந்த வெற்றிலையில் உள்ள வேதிப் பொருள்கள் சில புற்று நோயை ஏற்படுத்திவிடுவதாக மருத்துவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாம் ஏற்கனவே எம்மில் பலரை இழந்து விட்டோம். எஞ்சியிருப்பவர்களையாவது சாவின் பிடியிலிருந்து காப்பாற்றிக் கொள்வதே இன்றுள்ள முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது.

*மு.சிவநேசன், காரைநகர்*

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# மஹிந்தவை ஆதரித்த சல்மான்கானும் பாவம்

இந்திய நடிகர் சல்மான்கானுக்கு மும்பை நீதிமன்ற நீதிபதி தேஷ் பண்டே 5 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித்துள்ளார். இலங்கையிலும் - இந்தியாவிலும் அடுத்தடுத்து பிரபலங்களின் கைதுகளும், சிறை வைப்புக்களும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இந்தக் கைதுகளுக்கு இடையில் ஏதாவது தொடர்புகள் இருக் கின்றனவா என்று கூடச் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

ஆனால் சல்மானின் கைதுக்கும், இலங்கையில் நடக்கும் கைதுகளுக்கும் ஓர் ஆபூர்வ - ஆச்சரியமான ஒற்றுமை இருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு நெருங்கியவர்கள் - அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களே தொடர்ந்து கைது செய்யப்படுகின்றனர். இலங்கையில் பஸில் ராஜபக்ஷ, ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோவும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றால், இந்தியாவில் சல்மான்கானும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திச் சென்று ஒருவரை மோதிப் படுகொலை செய்தமை மற்றும் 4 பேருக்குக் காயங்களை ஏற்படுத்தியமை தொடர்பில் நடிகர் சல்மான்கான் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. 13 வருடங்களாக இந்த வழக்கு மீதான விசாரணை இடம்பெற்று வந்தது. மும்பை நீதிமன்றத்தில் இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

சல்மான்கான் எதுவித சந்தேகமுமின்றி குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். இதனால் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிப்பதாக நீதிபதி தீர்பளித்துள்ளார். நீதி, என்றோ ஒருநாள் நிலைநாட்டப்படும் என்பதற்கு இதுவ்ம் ஓர் உதாரணமாகிப் போயுள்ளது.

இலங்கையிலும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக, மஹிந்த ஆட்சியிலிருந்த காலத்தில், ஊழல் மோசடிகள் செய்தவர்கள் இப்போதுதான் ஒவ்வொருவராகச் சிக்கத் தொடங்கியுள்ளனர்.

10 வருடங்களின் பின்னரே, அவர்களது குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்களும், விசாரணைகளும், கைதுகளும் இங்கு இடம் பெறுகின்றன. இந்தியாவில் 13 வருடங்களின் பின்னர் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் இலங்கையில் 10 வருடங்களின் பின்னரேதான் விசாரணை தொடங்குகின்றது. அவையெல்லாவற்றையும் விட்டு விடுவோம்.

இப்போது மஹிந்தவுக்கு வேண்டியவர்களுக்கு ஏழரைச் சனியன் தேடி வந்து குடிகொண்டிருக்கின்றான். இதனால்தான் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷதோல்வியடைந்தபின்னர், அவருக்கு வேண்டிய - நெருக்கமானவர்கள் அடுத்தடுத்து கைதாகின் றார்கள்.

முதலில் ஐ.தே.க.விலிருந்து கட்சி தாவி வந்து மஹிந்தவுக்கு முட்டுக் கட்டை கொடுத்த திஸ்ஸ அத்தநாயக்காக கைது செய்யப்பட்டார்.

இதன் பின்னர், மஹிந்தவின் சகோதரரும், முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ, இறுதியாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டால் பரவாயில்லை. ஜனாதிபதித் தேர்தலில், மஹிந்தவுக்காகப் பரப்புரை செய்வதற்கு அழைத்து வரப்பட்டவர் நடிகர் சல்மான்கான். பரப்புரைக்காக ஒரே ஒரு நாள் மாத்திரம் இலங்கைக்கு வந்து சென்றார். அதற்காக அவர் கோடிகள் வாங்கிக் கொண்டார்.

ஆனால் மஹிந்தவுக்கு வந்து வெற்றிலை கொடுத்ததால்தான் என்னவோ, 13 வருடங்கள் இழுத் தடிக்கப்பட்ட வழக்கும், சட்டென்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, அவருக்கு சிறைத் தண்டனையை வாங்கிக் கொடுத்துவிட்டது.

சில வேளைகளில் மஹிந்த ராஜபக்ஷ, சல்மான் எனது தேர்தல் பரப்புரைக்கு வந்து சென்றதால்தான் தண்டிக்கப்பட்டுள்ளார். மைத்திரி அரசு, இந்திய மத்திய அரசுடன் கூட்டுச் சேர்ந்து என்னைப் பழி வாங்குகின்றது. அவர்கள் என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் பழிவாங்கத்தான் எனக்கு நெருக்கமானவர்களைக் கைது செய்கின்றார்கள் என்று சொல்லக் கூடும்.

மஹிந்த என்னதான் புலம்பினாலும், நீதி என்றோ ஒரு நாள் நிலை நாட்டப் படும் என் பதை மஹிந்தவும் அவருக்கு நெருக்கமானவர்களும் புரிந்து கொண்டால்

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மனித உரிமைகள் துட்டுக்கு எத்தனை; இலங்கை அரசுகளின் கணிப்பு அதுவே....!

♦ அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்த விவரங்களையும், அவர்கள் எங்கெங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற விவரத்தையும், வெளிப்படுத்துமாறு இலங்கை அரசிடம் கோருங்கள் -- கேளுங்கள்.

♦ திருகோணமலையில் அமைந்துள்ள அரசின் பென்னம்பெரிய தடுப்பு முகாம் குறித்த விவரத்தையும், அரசிடம் கேட்டறியுங்கள்.

♦ போர்க்குற்றங்கள் குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு விசேட இடங்களை நிர்ணயித்து, அவற்றின் அமைவிடங்களை அறிவிக்குமாறு அரசுக்குக் கூறுங்கள்.

♦ பாதிப்புற்றவர்களின் சாட்சியங்களை வெறுமனே கோவைகளில் சேர்த்து வைத்துக் கொள்ளாமல், விசாரணை மேற்கொள்ளுமாறு அரசை வற்புறுத்துங்கள்.

♦ சமூகத் தலைவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் சிவில் சமூகத்தினரின் ஆலோசனைகளை, அடிப்பட்டையில் போட்டு விடாமல், அவற்றைப் பரிசீலனை செய்யுமாறு தெரிவியுங்கள்.

♦ நேர்மையானவர்கள் மற்றும் உண்மைத் தன்மை கொண்டவர்களைப் பாதுகாப்பதற்கு சட்டம் இயற்றுமாறு அரசிடம் கோருங்கள்.

மேற்கண்ட அறுவகைக் கோரிக்கைகளை, இலங்கைக்குக் கடந்த வாரம் வருகை தந்திருந்த, அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியிடம், முன்னணி மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு ஒன்று முன் வைத்திருந்தது. (எனினும் அந்த அமைப்புத் தனது பெயரை வெளிப்படுத்தவில்லை.)


அதனாலோ என்னவோ, அமெரிக்க அமைச்சர் கெரி, அதற்குப் பதில் அளிக்காது , தமது பயணத்தை முடித்துக்கொண்டு இலங்கையை -- கொழும்பை -- விட்டுச் சென்றுவிட்டார்.

எது எப்படியோ, இலங்கையில், ஆட்சி நடத்திய அரசுகள், அவற்றின் மேல்மட்டப் பிரதானிகள், மனித உரிமைகளைப் பேணுவதில் -- பாதுகாப்பதில் -- உகந்த, போதிய, செயற்பாடுகளையோ, காத்திரமான நடவடிக்கைகளையோ, தமது தவிர்க்கக் கூடாத -- தவிர்க்க முடியாத -- கடமை என்று கருதிச் செயற்பட்டதாகச் "சரித்திரமே" இல்லை!

எனினும், அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களையும், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள (இரகசிய) இடங்களையும் வெளியிட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அமெரிக்க இராஜாங்கச் செயலர் வலியுறுத்திச் சென்றதாகக் கூறப்படுகின்றது. அது குறித்துக் கொழும்பு அரசின் மேல்மட்டங்கள் உரிய, வேண்டிய, தேவையான, காட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா? அல்லது அமெரிக்க அமைச்சருக்கும் "உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே!" என்று போக்குக்காட்டி முந்தைய அரசுகளின் தடத்திலேயே கால் பதிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.......!

அந்த வகையில், பொதுவாக மனித உரிமைகள் விவகாரங்களில், இந்த நாட்டு அரசுகள் "தப்புத் தாளங்கள்" போடுவதில் பலே கில்லாடிகள் என்பது அனைத்துலக நாடுகளுக்குப் புலப்படாத, தென்படாத ஒன்றல்லவே....?

இலங்கையை நிர்வகித்த அரசுகள் அத்தனையும் மனித உரிமைகளா? அவை துட்டுக்கு எத்தனை? என்ற மேலாண்மைப் போக்கிலேயே செயற்பட்டு வந்துள்ளன. இந்த நாட்டின் அரசியல் வரலாறு அதற்குச் சாட்சி பகரும்.



# ஜோன்கெரியின் வருகையும் தமிழர்களின் எதிர்பார்ப்பும்

■ சேரலாதன்

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன்கெரி இலங்கைக்கு வருகை தந்து அரச உயர் மட்டத் தலைவர்களுடன்விரிவானபேச்சுக்களை நடத்தியுள்ளார். போர்க் குற்ற விசாரணைகள் தொடர் பாகத் தமது ஆழ்ந்த கவனத்தை யும் அவர் வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மைத்திரி தலைமையிலான அரசு தற்போதுதான் 100 நாள்கள் என்ற மைல்கல்லை எட்டியுள்ளது. அதற்குப் போதிய அவகாசம் வழங்கப்படவேண்டுமென்பதைஅமெரிக்கா உணர்ந்திருக்கும் என்பதால் கெரியும் தற்போதைக்குத் தளர்வான தொரு போக்கையே கடைப்பிடித்திருப்பார் என்பதை ஊகித்து அறிந்துகொள்ள முடிகின்றது.

இதேவேளை இலங்கைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் ஜோன் கெரி சந்தித்து உரையாடத் தவறவில்லை. இதன்போது, பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் மத்திய அரசின் தலையீடு இல்லாத அரசியல் தீர்வுத் திட்டத்தை தமிழர்கள் அடைவதற்கு அமெரிக்கா உதவவேண்டும் எனவும், 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இந்தியாவுடன் இணைந்து அமெரிக்கா மாற்றி அமைக்க வேண்டுமெனவும் கெரியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களின் இன்னல்களுக்கு விரைவில் ஒரு நல்ல முடிவு கிடைக்குமெனக் கூட்டமைப்பினரிடம் கெரி உறுதி மொழி வழங்கியதாகவும் பிறிதொரு தகவல் தெரிவிக்கின்றது.

வெளிநாட்டுத் தலைவர்கள் இங்கு வருகை தரும்போது தமிழர்களுக்குச் சில ஆறுதல் வார்த்தைகளைத் கூறிவிட்டுச் செல்வது வழக்கமான ஒன்றாகவே காணப்படுகின்றது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின் போதும் தமிழர்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். ஆனால் மோடியின் வருகை பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை. இறுதிப் போரின்போது இலங்கைத் தமிழர்கள் எதிர்கொண்ட பேரவலத்துக்கு அமெரிக்காவும், இந்தியாவும் பொறுப்புக்கூறவேண்டிய நிலையில் உள்ளன. புலிகளை அழிக்கிறோம் எனக் கூறிக்கொண்டு மஹிந்த தலைமையிலான இலங்கை அரசு மேற்கொண்ட இன அழிப்புக்கான நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவும், இந்தியாவும் ஏதோவொரு வகையில் துணை நின்றதை அந்த நாடுகள் மறுத்துரைக்க முடியாது. போரின் இறுதித் தருணங்களில் தமிழர்கள் அநியாயமாக அழிக்கப்படுவதையாவது இந்த இரண்டு நாடுகளும் தடுத்திருக்க முடியும். ஆனால் எதுவுமே அவை செய்யாது

> **மைத்திரி தலைமையிலான அரசு தற்போதுதான் 100 நாள்கள் என்ற மைல்கல்லை எட்டியுள்ளது. அதற்குப் போதிய அவகாசம் வழங்கப்பட வேண்டுமென்பதை அமெரிக்கா உணர்ந்திருக்கும் என்பதால் கெரியும் தற்போதைக்கு தளர்வானதொரு போக்கையே கடைப்பிடித்திருப்பார் என்பதை ஊகித்து அறிந்துகொள்ள முடிகின்றது.**

தவறிழைத்து விட்டன. அமெரிக்க அதிபர் ஒபாமா பெயரளவுக்காவது போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் இந்தியாவோ முழு மூச்சுடன் போரைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு இலங்கைக்கு அழுத்தத்தைப் பிரயோகித்தது. புலிகளைப் பழி வாங்குவதற்கான சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்த சோனியா குடும்பத்தின் விருப்பத்தை நிறைவேற்றுவதிலேயே விழிப்புடன் செயற்பட்ட அப்போதைய மன்மோகன்சிங் தலைமையிலான இந்திய அரசு, இலங்கைத் தமிழர்கள் தொடர்பாகச் சிறிதும் கவனத்தில் கொள்ளவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவுடன் நெருங்கிச் செல்வதையும், சீன நாட்டின் ஆதிக்கம் இலங்கையில் எல்லை மீறிச் செல்வதையும் விரும்பாத அமெரிக்கா, தனது பிடிக்குள் மஹிந்தவைச் சிக்க வைக்க எண்ணியது. இதன் காரணமாகவே ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இலங்கைக்கு எதிரான பிரேரணை. அமெரிக்காவின் சார்பில் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. போர்க் குற்றம் தொடர்பான ஐ.நா.மனித உரிமைகள் சபையின் அறிக்கை கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் தொடருமெனவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் அமெரிக்காவுக்குப் பிடிக்காத மஹிந்த ஜனாதிபதித் தேர்தலில் படுதோல் வியைச் சந்தித்தார். மைத்திரி ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்து கொண்டார். இதன் காரணமாக இலங்கை விடயத்தில் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிப்பதற்கு அமெரிக்கா தீர்மானித்தது. இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரி மைகள் போர்க் குற்றம் தொடர்பான அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை ஒத்தி வைக்கப்பட்டது.

ஜோன் கெரி இங்கு வருகை தருவதற்கு முன்னரே இலங்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த நிறைவேற்று அதிகாரங்களில் 65 வீதமானவை 19 ஆவது அரசமைப்புதிருத்தச்சட்டத்தின்மூலமாக இல்லாதொழிக்கப்பட்டது. இதுவும் அமெரிக்க அரசுக்கு மகிழ்ச்சியைக் கொடுத் திருக்கும்.

இந்த நிலையில் கூட்டமைப்புடனான கெரியின் சந்திப்பு தென்பகுதி இனவாதிகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கும். மேலும் கெரியின் சந்திப்பைத் திரித்துக் கூறவே அவர்கள் முற்படுவார்கள்.

நீண்ட போர் காரணமாக சின்னாபின்னமாக்கப்பட்டு சிதைந்து போய்க் கிடக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டிய தார்மீகக் கடமையை அமெரிக்கா புறமொதுக்கித் தள்ளி விட முடியாது. இலங்கை அரசுடன் இணைந்து புரிந்த குற்றங்களுக்கு உரிய பிராயச்சித்தத்தையும் அமெரிக்கா தேடிக் கொள்ள வேண்டும்.

அமெரிக்க இராஜாங்கச் செயலரைத் தொடர்ந்து ஜனாதிபதி ஒபாமாவும் இங்கு வருகை தரவுள்ளதாகத் தெரிகின்றது. தனது பதவிக் காலத்தின் இறுதிப் பகுதியில் நிற்கும் அவர் இலங்கைத் தமிழர்களையும் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதேதமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# பொதுத் தேர்தலை விரும்பாத ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு 22 நவம்பர் 2014 இல் வெளியாவதற்கு சில நாள்களுக்கு முன்னர் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக பொது வேட்பாளராககளமிறங்கவுள்ளவர் எனக் கருதப்பட்டவருடன், ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய பிரமுகர்கள் குழுவொன்று இரகசிய சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தது.

பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்த சிவில் சமூக அமைப்பொன்று பல பிரமுகர்கள் குறித்து ஆராய்ந்த பின்னர், ஆச்சரியமளிக்கும் விதத்தில் ஒருவரைத் தெரிவு செய்திருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஒரு அமைதியான அரசியல்வாதி, இலங்கையின் புராதன தலைநகரான பொலன்னறுவையின் கிராமமொன்றைச் சேர்ந்தவர். 40 வருட அரசியல் பின்னணியை கொண்டவரான அவர் ஒரு போதும் அரசியல் அதிர்வுகளை உண்டாக்கவில்லை, இந்தக் காரணத்துக்காக அவர் குறித்த தோற்றம் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமலிருந்தது.

அவர் தற்பெருமையற்ற ஒரு வேட்பாளர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தகுதியானவர்கள் எனக் கருதப்பட்ட ஏனைய வேட்பாளர்கள் போல பதவி ஆசையில்லாதவர், மைத்திரிபால சிறிசேனவே பொதுவேட்பாளர் என தீர்மானிக்கப்பட்டதும், அவருக்கு ஆதரவளிக்கலாமா, அது பயனளிக்குமா என்பது குறித்து ஆராய வேண்டிய நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு உருவானது.

ஐக்கிய தேசியக் கட்சியில்லாமல் பொதுவேட்பாளர் இல்லை. விசுவாசமுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசியல்வாதிக்கு எவ்வாறு ஆதரவளிக்கலாம் என கட்சி சிந்தித்தது.அதற்கான உறுதியான காரணங்கள் கட்சிக்கு தேவைப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியுடனான தனது முதலாவது சந்திப்பில் – அடுத்த 60 நாள்களில் இலங்கையின் ஜனாதிபதியாகப்போகும் மைத்திரிபால சிறிசேன – தனக்கே உரிய பாணியில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனது முடிவைத் தெரிவித்தார். அதன் மூலம் தனக்கு மரணம் கூட ஏற்படலாம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். நான் எனது உயிரையும் கொடுக்கத் தயாராகவுள்ளேன், அவர்கள் என்னைக் கொல்ல முயற்சித்தாலும், நான் விலகமாட்டேன் என அவர் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரநிதிகள் குழுவிடம் தெரிவித்தார்.

ஐந்து மாதங்களுக்கு முன்னர் இலங்கை வேறு மாதிரியான தேசமாக காணப்பட்டது. அப்போதைய ஜனாதிபதிக்கு எதிராக தேர்தலில் போட்டியிடுவது மரணத்தை அல்லது சிறைத்தண்டனையை கொண்டு வரக் கூடிய நிலை காணப்பட்டது. என்று தெரிவித்தால் அது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல. சரத்பொன்சேகாவின் அனுபவம் இதற்குச் சிறந்ததொரு உதாரணம். அரசியல்வாதிகள் எவரும் இலகுவில் மறக்க கூடிய பாடம் அல்ல அது.

தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் அவர் தனது உயிரை பணயம் வைக்கிறார் என்பது மைத்திரிபால சிறி ஷேவுக்குத் தெரிந்திருந்தது. மிக ஆபத்தான விளைவுகள் உருவாகலாம் எனத் தெரிந்திருந்தும் மஹிந்தவுக்கு எதிராகப் போட்டியிடுவதற்கு சிறிசேன இணங்கியதே அவரே பொருத்தமான வேட்பாளர் என ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்ளும் நிலையை உருவாக்கியது. அவர் மஹிந்தவை எதிர்ப்பது குறித்து உண்மையான ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றார் என கட்சி நம்பிக்கை கொண்டது.

அவர் தான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போட்டியிட தயார் என முதல்முதலில் தெரிவித்தவேளை, நாங்கள் அவருக்கு ஆதரவை வழங்கலாம் என்பதை உணர்ந்தோம். நாங்கள் தேர்தலில் வெற்றிபெறுவோம் என நம்பிக்கை கொண்டிருந்தோம், ஆனால், தேர்தலில் தோற்றால் மஹிந்த இலகுவாக விலகிச் செல்வாரா என்பது குறித்த சந்தேகமிருந்தது. இதனால் நாங்கள் வேட்பாளராக நிறுத்தும் எவருக்கும் அவர் எதிர்கொள்ளும் அபாயம் குறித்து தெரிந்திருக்கவேண்டியிருந்தது" என சிறிசேனவை முதலில் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சிக் குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தார்.



## கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுகளே காரணம்

நாட்டுக்கான தனது சமீபத்தைய உரையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் போட்டியிடுவது எனத்தான் எடுத்த முடிவு, தனது பிள்ளைகளுடன் கடலில் குதிப்பதற்கு சமமானது எனத் தெரிவித்திருந்தார். அது தவறான கூற்றல்ல. கடந்த 100 நாள்களில் இந்த ஜனாதிபதி தான் உருவாக்க விரும்பும் தேசம் பற்றி தெரிவிப்பதை நாங்கள் பல தடவைகள் செவிமடுத்துள்ளோம் – அவரது உரைகள் கனிவும், கலக்கமின்மையும் கொண்டவையாகக் காணப்படுகின்றன. முன்னைய ஜனாதிபதியின் ஆரவாரம் புதியவரது உரையிலும் செயலிலும் இல்லை.

### உறுதியான செயற்பாடு

மாதுளுவாவே சோபித தேரர் 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படும் வரை முன்னெடுக்கத் தீர்மானித்திருந்த உண்ணா விரதப் போராட்டத்தை கைவிடுமாறு ஆச்சரியமளிக்கும் விதத்தில் சிறிசேன கேட்டுக்கொண்டார்.

நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதற்கான இயக்கத்தின் ஸ்தாபகரான மாதுளுவாவே சோபித தேரர், '19' திருத்தத்துக்கு ஆதரவாக வெற்றிகரமான ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தார். நாடாளுமன்றத்துக்கு வெளியே கொதிக்கும் வெயிலில் 100 ற்கும் மேற்பட்ட சிவில் சமூக பிரதிநிதிகளும், அரசியல் கட்சி உறுப்பினர்களும் 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுமாறு அழுத்தத்தை கொடுத்த வண்ணமிருந்தனர்.

19 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக திரண்ட பெரிய அந்தமக்கள், சபைக்கு உள்ளேயிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தங்களை கொடுப்பவர்களாக விளங்கினர். அவ்வேளை நாடாளுமன்றத்துக்குள் 19 திருத்தத்தை நிறைவேற்றுவதற்காக கடும்போராட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

அவ்வேளை நிலவிய நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாதுளுவாவே சோபித தேரருக்கு 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படும் என்ற உறுதி மொழியை வழங்கினார். இதன் மூலம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தேரர் ஆரம்பித்த மிகவும் பயனுள்ள நடவடிக்கை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வரப்படும் என அவர் தெரிவித்தார். ஜனவரியில் சிறிசேன ஜனாதிபதியாவதற்கும் இதுவே காரணமாக அமைந்தது.

அந்தவாரத்தில் திங்கட்கிழமை கட்சித் தலைவர்களின் கூட்டங்கள் இடம் பெற்றவேளை இரு பிரதான கட்சிகள் மத்தியிலும் 19 ஆவது திருத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டியவை குறித்து இணக்கப்பாடு ஏற்படாத நிலையே காணப்பட்டது. திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் 19 ஆவது திருத்தத்தை பாதுகாப்பதற்கு பெரும்பாடுபட்ட ஜனாதிபதி சிறிசேன, நெருக்கடியான விடயங்கள் குறித்து தீர்வைக் காண்பதற்காக ஆறு பேர் கொண்ட குழுவை நியமித்திருந்தார்.

19 ஆவது திருத்தம் குறித்த அறிவுள்ள, அதற்கு ஆதரவளிக்கும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை – அஜித் பெரேரா, சுமந்திரன், ஹக்கீம் ஆகியோரைத் தெரிவு செய்த ஜனாதிபதி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை தனது உறுப்பினர்களை நியமிக்குமாறு கேட்டுக் கொண்டார். சட்டமா அதிபரும் கூட குழுவில் நியமிக்கப்பட்டார். ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்த மாற்றமும் நீதிமன்ற தீர்ப்புக்கு அமைவாக அமைவதை உறுதிசெய்வதே அவரது பணி.

நாடாளுமன்ற விவாதங்களில் அதிகளவு பங்கெடுத்து குரல் எழுப்பிய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் மற்றும் வாசுதேவ நாணயக்கார இருவரையும், சுதந்திரக்கட்சி சார்பில் பேச்சுக்களுக்கு ஜனாதிபதி நியமித்தார். எனினும் இருவரும் அதிலிருந்து விலகிக் கொண்டனர். அதன் பின்னர் கட்சி தனது பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா, ராஜீவ விஜயசிங்க மற்றும் பைசர் முஸ்தபாவை ஆகியோரை நியமித்தது.

3 மணி முதல் 6.30 வரை கூடிய குழுவினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த யோசனைகளில் எட்டில் ஆறு தொடர்பாக இணக்கப்பாட்டை எட்டினர். எனினும் இரண்டு விடயங்கள் தொடர்பாக சுதந்தி ரக் கட்சி முரண்டுபிடித்ததை தொடர்ந்து முட்டுக்கட்டை ஏற்பட்டது.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அரசமைப்பு பேரவைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நியமிக்க வேண்டும் என எதிர்க்கட்சி வாதாடியது.

அமைச்சர்களை நியமிக்கும்போது ஜனாதிபதி பிரதமரின் ஆலோசனையை பெறவேண்டும் என்பது குறித்தும் அவர்கள் மாற்றங்களைக் கோரினர்.

### முட்டுக்கட்டை

எனினும், ஜனாதிபதியின் பிரதிநிதிகள் இந்த இரு விடயங்களும் 19 ஆவது திருத்தத்துக்கு மிகமுக்கியமானவை என வாதிட்டனர். அதனால் அவற்றை விட்டுக்கொடுக்க முடியாது எனவும் தெரிவித்தனர். குறிப்பிட்ட திருத்தம் நிறைவேற்று அதிகாரங்களை குறைப்பதையும், சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதையும் அடிப்படையாகக் கொண்டது என சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

### முன்னேற்றங்களும், பின்னடைவுகளும்

செவ்வாய்க்கிழமை மதியமளவில் 19 ஆவது திருத்தம் நிறைவேறுவது கேள்விக் குறியாக காணப்பட்டது, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்வைக்கின்ற இரு திருத்தங்களும் 19 ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்தும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிடிவாதமாகக் காணப்பட்டார்.

மாலை ஆறு மணியளவில் இணக்கப்பாடு ஏற்படாது எனத் தோன்றியதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக்கட்சி பல்வேறு தந்திரோபாயங்கள் குறித்து சிந்திக்கத் தொடங்கியது. 19 ஆவது திருத்தத்தின் மீதான முதலாவது வாக்கெடுப்பு இடம் பெறவிருந்த வேளை, அரசு பொது உடன்பாடு ஏற்படாது என்ற காரணத்தினால் வாக்கெடுப்பைப் பிற்போடுவது குறித்தும் சிந்தித்தது.

இந்தத் தந்திரோபாயம் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தை கலைக்கவேண்டுமென அழுத்தம் கொடுப்பதற்கு வழிவகுத்திருக்கும். நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை கிடைக்கும் பட்சத்தில் அரசமைப்பு பேரவையை உருவாக்கி புதிய அரசமைப்பை உருவாக்குவதே தனது நிலைப்பாடு என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்து வருகின்றது.

தற்போதைய அரசியல் சூழலில் நாடாளுமன்றத்தைக் கலைப்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கே சாதகமாக உள்ளது. அந்தக் கட்சிக்கே புதிய அரசு அமைப்பதற்கான நாடாளுமன்ற பெரும்பான்மை கிடைக்கலாம். நாடாளுமன்றத்தைக் கலைப்பது என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு அச்சமூட்டக்கூடிய ஒரு விடயம். கட்சிக்குள் காணப்படும் பிளவுகளே அதற்கு முக்கிய காரணம்.

19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீவிர பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வார், 19 ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மேற்கொண்ட முயற்சிகள் குறித்து தீவிர சீற்றம் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி மக்களது விருப்பத்தை பிரதிபலிக்கும் புதிய நாடாளுமன்றம் அவசியம் எனத் தெரிவித்துவருகின்றது.

19 ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்தியதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைக் கடுமையாகச் சாடியுள்ள பிரதியமைச்சர் எரான்விக்கிரமரட்ண, நாடாளுமன்றம் மக்களின் ஆணைக்கு ஏற்ப செயற்பட்டிருந்தால் நிலைமை வேறு மாதிரியாக அமைந்திருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். தனது காலத்தை கடந்து நீடித்துக்கொண்டிருக்கும் நாடாளுமன் றத்தினால் ஏற்படக் கூடிய விளைவுகள் மோசமானவை என அவர் குறிப்பிட்டுள்ளார். உடனடியாக நாடாளுமன்றத்தை கலைக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது ஜனாதிபதிக்கு நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தற்போது தேர்தலை விரும்பவில்லை, கட்சிக்குள் காணப்படும் பிளவுகள் காரணமாக தான் தோற்பது நிச்சயம் என அதற்குத் தெரிந்துள்ளது. இருபது வருட காலமாக வெற்றி பெற்றுக்கொண்டிருக்கும் கட்சிக்கு தோல்வியை ஏற்படுத்திக்கொடுத்த தலைவர் என்ற அவப்பெயர் தனக்கு ஏற்படுவதை சிறிசேன விரும்ப மாட்டார்.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 40 | 60 | 40 | 60 | 50 |
| கத்தரி | 100 | 120 | 100 | 100 | 100 | 100 | 80 |
| கரட் | 120 | 120 | 120 | 120 | 120 | 160 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 50 | 50 | 60 | 60 |
| பயிற்றை | 80 | 80 | 100 | 40 | 110 | 40 | 100 |
| பாகல் | 100 | 100 | 100 | 100 | 120 | 80 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 90 | 80 | 60 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 90 | 120 | 120 | 100 | 120 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 70 | 80 | 80 | 110 | 80 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 | 30 | 40 |
| தக்காளி | 80 | 100 | 100 | 80 | 100 | 100 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 40 | 60 | 40 | 60 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 30 | 40 | 35 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 40 | 30 | 40 | 20 |
| பச்சை மிளகாய் | 40 | 40 | 40 | 50 | 60 | 60 | 80 |
| புடோல் | 70 | 50 | 60 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 40 | 50 | 50 | 50 | 40 | 80 | 80 |
| வெண்டி | 100 | 60 | 80 | 80 | 100 | 60 | 60 |
| போஞ்சி | 150 | 150 | 150 | 160 | 150 | 160 | 140 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 | 160 | 160 | 200 | 120 |
| தேங்காய் | 60 | 60 | 60 | 50 | 60 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 | 110 | 100 | 110 | 120 |
| தேசிக்காய் | 200 | 180 | 170 | 250 | 200 | 200 | 120 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 20 |
| கறிமிளகாய் | 80 | 60 | 50 | 80 | 100 | 120 | 80 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 120 | 120 | 140 | 160 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 600 | 700 | 700 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 150 | 400 |
| கணவாய் | 550 | 600 | 500 | 600 | 500 | 450 |
| பாரை | 600 | 400 | 500 | 500 | 500 | 400 |
| சுறா | 600 | 500 | 500 | 600 | – | 450 |
| சீலா | 300 | 400 | 400 | 500 | – | – |
| விளை | 600 | 400 | 400 | 450 | 500 | 370 |
| முரல் | 300 | 300 | 350 | 350 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 250 | 350 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 550 | 600 | 350 | 400 | – | – |
| ஓரா | 400 | 300 | 350 | 450 | – | 300 |
| திரளி | 200 | 250 | 250 | 300 | 200 | – |
| நகரை | 200 | 200 | – | 300 | – | 300 |
| சூடை | 150 | 150 | 400 | 120 | 200 | 120 |
| ஒட்டி | 300 | 150 | 250 | 300 | 200 | 250 |
| திருக்கை | 150 | 300 | 300 | 250 | 150 | 140 |
| பாலை | 400 | 300 | 280 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | – | 350 | – | – |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 200 | 220 | 250 | 250 | 250 |

## மனிதனிலுள்ள புலனுறுப்புக்களை இயக்குகின்ற சக்தி யாது?

மனிதனிலுள்ள புலனுறுப்புக்களை இயக்குகின்ற சக்தி தெய்வ சக்தியாகும்.

எமது உடம்பிலிருக்கும் இரத்த அணுக்கள் தெய்வீக சக்தியைக் கொண்டுள்ளன. அவை ஒரு "டோச்" கருவியிலுள்ள "பற்றறி" போன்றவை. இரத்த அணுக்களில் தெய்வீக சக்தியானது விலகிவிட்டால், அவை புலன்களை இயங்க வைக்க இயலாது.

தெய்வீகசக்தி இல்லாவிடத்து, உடம்பு செயலற்ற நிலைக்கு வருவது மன்றி அது உருக் குலைந்து அழுகி விடும்.



சாயி சிந்தனை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### எல்லா உயிரும் கடவுளே

நாம் கடவுளுக்கு வேண்டியவர்கள். அவர், நம் உயிருடன் இரண்டறக் கலந்திருக்கிறார். எல்லா உயிர்களையும் கடவுளாக கருதும் தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

தியாக மனப்பான்மை மனிதனை தெய்வீக நிலைக்கு அழைத்துச் செல்லும். ஆன்மிகத்திற்கு ஜாதிப் பாகு பாடு கிடையாது. ஜாதி என்பது வெறும் சமுதாய ஏற்பாடு தான்.

தன்னைத் திருத்திக் கொள்பவனுக்கே, சமுதாயத்தைத் திருத்தும் தகுதி உண்டு. எப்போதும் தன்னம்பிக் கையுடன் செயற் படுங்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 5 | | 4 | | | |
| 2 | | | 7 | | | | | 9 |
| 9 | 5 | 8 | | | 3 | 7 | | |
| 4 | | | | 3 | 1 | 6 | | 5 |
| | | 6 | | | | 3 | | |
| 8 | | 5 | 9 | 7 | | | | 2 |
| | | 1 | 6 | | | 8 | 7 | 3 |
| 3 | | | | | 2 | | | 6 |
| | | | 3 | | 7 | | 5 | |

நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 9 | 5 | 6 | 8 | 2 | 7 | 3 |
| 7 | 6 | 3 | 9 | 4 | 2 | 5 | 1 | 8 |
| 2 | 5 | 8 | 1 | 3 | 7 | 9 | 4 | 6 |
| 8 | 9 | 1 | 7 | 5 | 4 | 3 | 6 | 2 |
| 4 | 3 | 7 | 6 | 2 | 9 | 1 | 8 | 5 |
| 5 | 2 | 6 | 8 | 1 | 3 | 7 | 9 | 4 |
| 9 | 7 | 4 | 3 | 8 | 5 | 6 | 2 | 1 |
| 6 | 8 | 5 | 2 | 9 | 1 | 4 | 3 | 7 |
| 3 | 1 | 2 | 4 | 7 | 6 | 8 | 5 | 9 |

## பித்தப் பிரச்சினைகளை தீர்க்கும் ரோஜா

ரோஜா ஒரு மணமலர் மட்டுமல்ல. மிகச்சிறந்த மருத்துவ மூலப்பொருளும் ஆகும். ரோஜா இதழ்களைக்கொண்டு சர்பத் தயார் செய்து வைத்துக்கொண்டால் ருசிக்கு ருசியாகவும் இருக்கும் மருந்துக்காகவும் பயன்படும்.. நாள் தோறும் ரோஜா மலர் இதழ்களைக் கொண்டு செய்த சர்பத் அருந்தி வந்தால் முலச்சூடு தணியும். நீர்கட்டு, மலக்கட்டு விலகும்.

உடற்சூடு தணிந்து உடல் இதமான குளிர்ச் சியைப் பெறும். ரோஜா மலர் மொட்டை துவை யல் செய்து சாப்பிட்டால் சீதபோதி அகலும். காதில் கட்டி ஏற்பட்டு கடுமையான வலியுடன் சீழ் வந்தால் மின்மினிப் பூச்சியொன்றைப் பிடித்து ரோஜா இத்ழ்களுடன் சேர்த்து அரைத்து இலே சாக சுடவைத்து காதில் இரண்டிரண்டு சொட் டுக்கள் வீதம் விட்டு வந்தால் விரைவில் கட்டி உடைந்து சரியாகிவிடும்.

எந்தப் பிரச்சினையால் சீழ் வந்தாலும் நின்று விடும். காதில் என்ன காரணத்தால் வலி குத்தல் இருந்தாலும் அபினியைச்சுட்டு சாம்பலாகச் செய்து அந்தச்சாம்பலை இரண்டு அரிசி அளவில் எடுத்து ரோஜா பூவினால் தயாரிக்கப்பட்ட



தைலத்துடன் கலந்து இலேசாகச் சூடு செய்து இரண்டிரண்டு சொட்டுகள் வீதம் காதில் விட்டு வர வேண்டும்.

பித்த நீர் அதிகமாகும் காரணத்தால் தோன்றும் மயக்கம், வாய்க்கசப்பு, நெஞ்செரிச்சல் போன்ற கோளாறுகளைத் தீர்க்க ரோஜாப் பூவைக் கஷாயம் செய்து பசுவின் பாலுடன் சேர்த்து தேவையான அளவு சர்க்கரை சேர்த்துப் பருகினால் குணம் தெரியும். ரோஜா பூவினால் தயார் செய்யப்பட்ட குல்கந்து மருந்து கடை களில் கிடைக்கும். அதை வாங்கி வைத்து காலையிலும், மாலையிலும், சாப்பிட்டு வந்தால் இரத்த பேதி, பித்தக்கோளாறுகள் வெள்ளை முதலிய பிணிகள் விலகிவிடும்.

ரோஜாப்பூ கஷாயத்துடன் காட்டுச்சீரகத்தை சேர்த்து அரைத்து மெல்லிய துணியால் நனைத்து முகரச் செய்தால் மூக்கடைப்பு, ஜலதோஷத் தினால், ஏற்படக்கூடிய பல்வேறு வகைக் கோளாறு கள் அகலும். சிலருக்கு காரணமின்றி அடிக்கடி தும்மல் தோன்றும். இதற்கு மேற்கண்ட முறையில் நல்ல குணம் பெறலாம்.

## நாளை

**சித்திரை-25**
**வெள்ளிக்கிழமை**
**08.05.2015**

திதி: சதுர்த்தி மு.ப. 08.36
நட்சத்திரம்: மூலம் பி.ப.12.28
சுபநேரம்: 05.55-07.25 வரை
இராகுகாலம்: 10.25-11.55 வரை
அக்கினி நாளாரம்பம்

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# ஒரு பெண்ணுக்கு உங்களை பிடிச்சிருக்கா...?

இன்றைய காலத்தில் ஆண் பெண் நண்பர்களாக நீண்ட நாள்கள் இருக்க முடிவதில்லை. அவ்வாறு நண்பர்களாக பழகும் போது, அவர்களுக்குள்ளேயே ஒருவித வித்தியாசமான உணர்வுகள் வந்துவிடுகின்றன. ஆனால் அவற்றை ஆண்கள் வெளிப்படையாக தெரிவித்துவிடுகின்றனர். ஆனால் பெண்கள் சொல்லமாட்டார்கள். ஆகவே அவர்களது மனதில் உங்களை பிடித்திருக்கிறது என்பதை எளிதாக கண்டறிய ஒருசில அறிகுறிகள் இருக்கின்றன. அந்த அறிகுறிகளை வைத்து பெண்களுக்கு உங்களைப் பிடித்திருக்கிறதா, பிடிக்கவில்லையா என்பதைக் கண்டறியலாம். அது என்னவென்று படித்து, உங்கள் மனதில் இருக்கும் பெண்ணுக்கு உங்களைப் பிடித்திருக்கிறதா என்பதை தெரிந்து கொள்ளுங்கள்...

**பெண்களுக்குப் பிடித்தால் எப்படி நடப்பார்கள் தெரியுமா?**

பெண்கள் உங்கள் கண்களை அதிகம் பார்த்துப் பேசினால் அவர்கள் உங்கள் மீது அதிக ஆர்வத்துடன் உள்ளனர் என்பதை அறியலாம். அதிலும் தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருந்தால், கண்டிப்பாக உங்களைப் பிடித்திருக்கிறது என்று அர்த்தம்.

பென்களுக்கு உங்களைப் பிடித்தால், அவர்களே உங்களை அடிககடி தொடுவார்கள். உதாரணமாக, அடிப்பது, அடிக்கடி தொட்டுப் பேசுவது, க்கை குலுக்குவது, கைகளைப் பிடித்து நடப்பது போன்றவற்றை செய்வார்கள். ஆம், உண்மை தான். ஏனெனில் அவர்கள் உங்கள் மீது விருப்பம் இருப்பதால் தான் அவர்கள் உங்களைத் தொட ஆரம்பிக்கிறார்கள். பின்னர் நீங்கள் தொட்டாலும், எதுவும் சொல்லாமல், முகத்தை சுளிக்காமல், தள்ளி விடாமல் இருந்தால், நீங்கள் அதிர்ஷ்டசாலி தான்.

உங்கள் மீது விருப்பம் இருந்தால், பெண்கள் அதிக நேரம் உங்களுடன் பேசுவார்கள். மேலும் எவ்வளவு தான் நண்பர்களுடன் கூடி பேசிக் கொண்டிருந்தாலும், அவர்கள் உங்களுடன் பேசுவார்கள் அல்லது தகவல் அனுப்புவார்கள். முக்கியமாக எந்த நேரத்திலும் உங்களுக்கு போன் செய்து பேசுவார்கள்.

உங்களைப் பிடித்தால், என்ன தான் நீங்கள் பேசினாலும் பெண்கள் சிரித்துக் கொண்டே இருப்பார்கள். அது எவ்வளவு தான் படு பருமனாக இருந்தாலும், அவர்கள் விழுந்து விழுந்து சிரித்தால், நிச்சயம் அது காதல் தான். மேலும் உங்கள் பேச்சை அவர்கள் ரசிக்கிறார்கள் என்றும் அர்த்தம்.

எங்கேனும் அவர்களுடன் வெளியே தனியாக போக திட்டம் போட்டு, அவர்களிடம் கேட்டு, அவர்களுக்கு வேலை இருப்பது உங்களுக்கு தெரிந்தும், உங்களுடன் வருவதற்கு ஒப்புக் கொண்டால், அந்த நேரத்தில் நீங்கள் அந்த திட்டத்தை முறியடிக்காமல், செல்லுங்கள். ஏனெனில் அவர்கள் உங்களுடன் வெளியே வந்து, அப்போதும் உங்களிடம் காதலை சொல்லும் வாய்ப்புகளும் உண்டு. இந்தச் சந்தர்ப்பத்தை வீணாக்க வேண்டாம்.

உங்களிடம் பேசும் போது, பெண்கள் தங்கள் முடிகளை கைகளால் சுருட்டிக் கொண்டிருப்பதை, நீங்கள் கண்டால், நிச்சயம் அவர்களுக்கு உங்கள் மீது ஒரு கண் உள்ளது என்பதை அறியலாம். இது ஒரு சிறிய சமிக்ஞை தான்.

நீங்கள் வேறு ஒரு பெண்ணிடம் பேசுவதைப் பார்த்து, கோபப்பட்டால், அது கூட, உங்கள் மீது இருக்கும் ஒரு வகையான காதல் தான். ஆனால் இதை அவர்களிடம் கேட்டால், அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில் உண்மையில் அவர்கள் உங்களை வேறு யாருக்கும் விட்டுக் கொடுப்பதை விரும்பவில்லை. இந்த நேரத்தில் அவர்களது காதல் வெளிப்படுகிறது.

# மே மாத ராசி பலன்கள்

## கடகம்

(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)

ஒரு காரியத்தை செய்யும் முன்பு அது சரியா, தவறா என்று பல முறை மனதுக்குள் கேள்வி எழுப்பிய பின்னர் ஒரு முடிவு எடுக்கும் கடகராசியினரே இந்த கால கட்டத்தில் ராசிநாதன் சந்திரன் சஞ்சாரத்தால் எல்லா வகையிலும் நல்ல பலன் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். ஆனாலும் எதிலும் சற்றுக் கூடுதல் கவனமர்க இருப்பது நல்லது. வீண் பிரச்சினைகளில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.



குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்ற நபர் மீண்டும் வந்து போவார்கள். அதனால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கை துணைக்காக செலவு செய்ய நேரிடும். கோபத்தைக் குறைத்து இனிமையாகப் பேசுவதன் மூலம் குடும்பத்தில் அனுமதி உண்டாகும். வெளியூர் பயணம் செல்ல வேண்டி இருக்கலாம்.

தொழில் வியாபாரம் தொடர்பான மனக்கவலை தோன்றி மறையும். ஆனால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். எதிலும் நிதானமாகச் செயற்படுவதும் மற்றவர்களை அனுசரித்து போவதும் நல்லது.

### உத்தியோகத்தர்கள்

உத்தியோகத்தர்கள் அலுவலகத்தில் உள்ள எதிர்ப்புக்களைச் சாமர்த்தியமாக சமாளிப்பார்கள். திட்டமிட்ட வேலைகளைச் சிறிது காலதாமதத்துக்குப் பிறகு நல்லபடியாக முடித்து விடுவார்கள். சக ஊழியர்களிடமும் எந்த உதவியையும் எதிர்பார்க்க முடியாது. பதவி உயர்வு கிடைக்கும். அலுவலகத்தில் வீட்டுக் கடன் கிடைக்கும். புதிய அலுவலகப் பயிற்சிகளும் கிடைக்கும்.

### கலைஞர்கள்

கலைத்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பர். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். புதிய படைப்புகளைத் தயாரிப்பதில் கவனம் செலுத்துவீர்கள். வருமானம் கூடுமானவரை நன்றாகவே இருக்கும்.

### பெண்கள்

பெண்மணிகளின் அந்தஸ்து உயரும். உறவினரிடத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். ஆடை ஆபரணங்களை வாங்குவீர்கள். வீடு, வாகனம் போன்றவைகளை வாங்கும் யோகமும் உண்டாகும். உடன் பிறந்தோரிடமிருந்து எதிர்பார்த்த ஆதரவையும் உதவி களையும் பெறுவீர்கள்.

### மாணவர்கள்

மாணவமணிகள் படிப்பில் வளர்ச்சியைக் காண்பார்கள். அதேசமயம் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் அனுசரித்துச் சென்று உங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். மேலும் பாடத்தில் ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் ஆசிரியரிடமோ அல்லது பெற்றோரிடமோ கேட்டு படிப்பது நல்லது. பாடங்களை மனப்பாடம் செய்ய, அதற்கான பயிற்சிகளைச் செய்யுங்கள். அதோடு உடற் பயிற்சி செய்து மனப்புழுக்கத்தில் இருந்து விடுபடுங்கள்.

### புனர்பூசம் 4

இந்த மாதம் குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவும், கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் உண்டாகும். மனக் குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும். தொலைதூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். கடினமான காரியங்களையும் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

### பூசம்

இந்த மாதம் மன தைரியம் அதிகரிக்கும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி திருப்தி நிலவும். பணவரவு எதிர்பார்த்தபடி வந்து சேரும். பயணங்கள் செல்ல நேரிடலாம். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாள்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும்.

### ஆயில்யம்

இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள்.

# பெண்களுக்குப் பிடித்த





கண்களைப் பார்த்துப் பேசும் ஆண்களையே அதிகம் விரும்புவதாக பெரும்பாலான பெண்கள் தெரிவித்துள்ளனர். நீங்க, வாங்க, போங்க என்று மரியாதையாகப் பேசும் ஆண்களை அதிகமான பெண்கள் லைக் செய்கின்றனர். அப்பாவியான தோற்றம் நல்லது. அதே சமயம் சிரித்த முகமாக இருக்கவேண்டும். அப்பாவி என்பதற்காக லூசுத்தனமான காரியங்கள் செய்யக்கூடாது. எந்த காரியத்துக்கும் இவன் சரிப்பட்டு வருவான் என்று கூறும் அளவுக்கு புத்திசாலியாக இருக்கவேண்டும் என்று பெண்கள் கூறியுள்ளனர். நல்ல தொழில், நல்ல படிப்பு, கைநிறைய ஊதியம் வரும் வேலை கொண்ட ஆண்களை நாற்பது சதவிகித பெண்கள் விரும்புகின்றனராம். அதுதான் பாதுகாப்பானது என்றும் பெண்கள் கூறியுள்ளனர். கண்களைப் நேராகப் பார்த்து பேசும் ஆண் களைத்தான் பெண்கள் பெரிதும் நம்புகின்றனர். அதுதான் சரியான பேச்சும் கூட என்பது பெண்களின் கருத்துப் படிப்பு, வேலையில கெட்டிக்காரத்தனமா இருக்கணும், படிப்பையோ, வேலையையோ விட்டுட்டு நம்ம கூட வெட்டியா பேசிட்டு இருக்கானே என்று நினைக்க வைக்கக் கூடாது. பேச்சில் இனிமையும், சுவாரஸ்யமும் கொண்ட ஆண்களை அனேகம் பெண்கள் ரசிக்கின்றனராம். அவர் பேசினா கேட்டுக்கிட்டே இருக்கலாம் என்று கூறவேண்டும்.

# வர்ணம் தீட்டலாம் வாங்க...







# நம்பினால் நம்புங்கள்!

நிலவில் முதலில் 'ஒன் பாத்ரூம்' சென்ற பெருமை ஆல்ட்ரினுக்கே கிடைத்தது!

கிளியின் அறிவு 5 வயது குழந்தைக்கு ஒப்பானது!

5 மணி நேரத்தில் 150 கப் தேநீர் குடித்தால் மரணம் ஏற்படும் அபாயம் உண்டு.

காகங்கள் தங்களை தொந்தரவு செய்யும் மனித முகங்களை நினைவு வைத்துக் கொள்ளும்!

கலிபோர்னியா மாகாணத்திலுள்ள ரியால்டோவில் பொலிஸ் அதிகாரிகளைக் கண்காணிக்கும் கமராக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேன்டிஸ் பூச்சியினால் அதன் தலையை அனைத்துப் பக்கங்களிலும் திருப்ப முடியும்

உலக மக்கள் தொகையில் 10 வீதம் பேர் இடக்கைப் பழக்கம் உடையவர்கள்.

காண்டாமிருகத்தின் பால் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

நியூசிலாந்திலுள்ள ஜிஸ்போர்ன் ஏர்போர்ட் ஓடு தளத்திலேயே ஒரு ரயில் பாதையும் இயங்குகிறது!

## வேஷம் போட்ட கழுதை



ஓர் ஊரில் பெரிய காடு இருந்தது. பக்கத்துக் கிராமத்திலிருந்து அந்தக் காட்டுக்குள் ஒரு கழுதை வழி மாறி வந்தது. காட்டுக்குள் ஒருவர் மட்டுமே நடக்கக் கூடிய ஒரு மண் சாலை வழியாக நடந்து நடந்து அது களைத்துப் போனது. தண்ணீர் குடிக்கலாம் என ஓர் ஓடைப் பக்கம் சென்றது. அந்த ஓடைக்குப் பக்கத்தில் சில வேட்டைக்காரர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் தாங்கள் வேட்டையாடிய சிங்கம், புலி, மான் போன்ற சில மிருகங்களின் தோலை எல்லாம் அங்கிருந்த பாறைகள் மேல் காய வைத்திருந்தார்கள். இதைப் பார்த்ததும் கழுதைக்கு ஓர் ஆசை வந்தது. உடனே ஒரு சிங்கத்தினுடைய தோலை எடுத்துத் தனது உடம்பின் மேல் போர்த்திக் கொண்டது. பார்க்கச் சிங்கம் போலவே அது இருந்ததால் மற்ற மிருகங்கள் எல்லாம் அதைப் பார்த்துப் பயந்து ஒதுங்கிப் போனது. மிருகங்கள் எல்லாம் தன்னைப் பார்த்துப் பயந்து மரியாதையாக வழிகொடுத்து ஒதுங்கிப் போனதைப் பார்த்து கழுதைக்கு, கர்வம் தலைக்கேறியது. மனிதர்களையும் பயமுறுத்தலாம் என்று நினைத்து கிராமத்துக்குள் போனது. சிங்கம் போல் கர்ஜிக்க நினைத்து ங்கெ ங்கெ என்று கத்தியது. அந்தக் குரல் அது கழுதை தான் என்று காட்டிக் கொடுத்து விட்டது. அதற்குப் பின்னர் கழுதையை யாருமே மதிக்கவேயில்லை. யாரும் அதைப் பார்த்துப் பயப்படவும் இல்லை. நாம் நாமாக இருக்கும் போதுதான் மதிப்படைகிறோம். அடுத்தவர் போல வேடம்போட்டாலோ அல்லது அவரைப் போல நடந்து கொள்வதாலோ அவமானம்தான் மிஞ்சும்.

## உலகின் மிகப் பெரிய சிலந்தி வலை



உலகிலேயே மிகப் பெரிய சிலந்தி வலையை விஞ்ஞானிகள் மடகாஸ்கர் தீவில் கண்டுபிடித்துள்ளனர். மடகாஸ்கரில் உள்ள ஒரு ஆற்றின் மேல் பரந்து விரிந்து காணப்படுகிறது இந்த சிலந்தி வலை. இதுவரை அறியப்படாத ஒரு வகை பொருளால் இந்த வலை பின்னப்பட்டுள்ளது. மிகவும் வலுவாகவும் உறுதியாகவும் காணப்படுகிறது. டார்வினின் ஸ்பார்க் ஸ்பைடர் என்ற புதிய வகை சிலந்தி இந்த உயிரியல் பொருளை வெளிப்படுத்துவதாகவும் தெரிய வந்துள்ளது.

ஒரே சிலந்தியால் பின்னப்பட்ட உலகின் மிகப் பெரிய வலை என்ற பெயரையும் இது பெற்றுள்ளது. இந்த வலையில் சிக்கும் சிறிய வகை ஈக்கள் மற்றும் பூச்சிகளை மட்டுமே இந்த சிலந்தி உண்கிறதாம். தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிலந்தி வலை 82 அடி,(25மீற்றர்)அகலத்துடன் காணப்படுகிறது.

## வாழ்க்கையில் தொடர் வெற்றி பெற



எந்த ஒரு மனிதனும் வாழ்க்கையில்வெற்றி பெற பலவழிகளில் போராடுகிறான்.

அந்தப்போராட்டத்தை அர்த்தமுள்ளதாக்க கீழ்க்கண்ட மூன்று வரிகளை கடைபிடித்தால் உங்கள் வெற்றி இன்னும் சுலபமா கும்.

1. உங்களைச் சுற்றியுள்ளவர்களை விட அதிகமாக தெரிந்து கொள்ள வேண்டியவைகளை தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் நேரம் வரும்போது அவர்களை விட நீங்கள் 'புத்திசாலி' என்று காட்டிக் கொள்வதற்கு மிகவும் தேவைப்படும்.





2. மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக வேலை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அது உடல்வேலைகளை காட்டிலும் மூளைக்கு வேலை அதிகம் கொடுங்கள். முக்கியமாக மற்றவர்களின் வேலைப் பளுவை குறைப்பதற்கான எளிய வழியை கண்டுபிடிக்க உழையுங்கள்.

3. மற்றவர்களின் எதிர்பார்ப்பைவிட குறைவாக எதிர்பாருங்கள். நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக எதிர்பார்க்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக எதிர்பார்ப்பதைவிட பன்மடங்கு உங்களுக்கு கிடைக்கும்.

## நீங்கள் ஏணியா ? அல்லது மலையா ?

ஏணியை வேண்டியளவுக்கு உயர்த்திக் கொள்ளலாம். அதில் யார் வேண்டுமானாலும் எளிதில் ஏறி பயணம் செய்யலாம். எளிமையானதும் கூட. ஏணிகளின் படிகளே ஒரு வழிகாட்டியாக விளங்கும். அதன் அமைப்பு ஒரே சீராகவும் முறையாகவும் இருக்கும். ஆனால் உயர்ந்த மலை அப்படியில்லை. அதில் ஏறுவதற்கு சிறந்த பயிற்சி வேண்டும். கற்களும் முட்களும் இருப்பதால் ஏறுவது மிகவும் கடினம். சரியானபடி பாதை இல்லாமலும் இருக்கும். அதனால் மேற்கொண்டு வளரவும் முடியாது. அதுபோல தன்னுடைய திறமை, அறிவு, முயற்சியினால் தன்னம்பிக்கை உடையோர்களின் தகுதியுள்ள பதவி உயர்வு ஒரு ஏணியைப் போலவாகும். அவர் அடைந்த பதவியில் வழிகாட்டுதல் இருக்கும். அவரால் பலரை ஊக்கப் படுத்தி தன நிலையினையோ அல்லது அதற்கு மேலோ ஏற்றிவிடமுடியும். தகுதியை வளர்த்துக் கொள்ளும் போது அவரது உயரம் ஏணி போல் உயர்த்திக் கொள்ளலாம். அவர்களின் வெற்றிப் பாதை சீராகவும் முறையாகவும் எளிமையாகவும் இருக்கும். தகுதியில்லாமல், திறமையில்லாமல் ஒருவன் உயரத்தில் இருப்பது மலையின் மேல் இருப்பதற்குச் சமம். அதனால் மற்றவர்களுக்கு ஒரு பிரயோசனமும் இல்லை. பாதை சரியாக தெரியாததால் மற்றவர்களால் அவ்வளவு எளிதாக பின்பற்ற இயலாது. ஏற்கனவே தகுதி இல்லாததால் அவர்களால் மேற்கொண்டு உயரமுடிவதில்லை.

# வல்வையில் இந்திரா விழா


வல்வையில் இடம்பெற்ற இந்திரா விழாவில் சுமார் 60அடி உயர மான புகைக்கூடு நீண்டகால இடை வெளிக்கு பின்னர் கடந்த திங்கட் கிழமை வானில் விடப்பட்டது.
வல்வெட்டித்துறையில் வருடம் தோறும் இடம்பெற்று வரும் இந் திரா விழா இம் முறையும் மிகச் சிறப்பாக நடந்தேறியது.
சுமார் 3கிலோ மீற்றர் தூரத்திற்கு வீதிகளில் மின்குமிழ் அலங்காரங் களுடன் சோடனைகள், வானு யர்ந்த தெய்வங்களின் படங்கள், ஒரே நேரத்தில் 10மேடைகளில் கலை நிகழ்வுகள் ,வானை நோக்கி விடப்பட்ட ஏராளமான புகைக் கூடுகள் எனகளைகட்டியது வல்வெட்டி துறை நகரப் பகுதி. இங்கு எல்லா பிரதேசங்களிலும் இருந்து மக்கள் கூட்டம் அலை மோதியது. (த–ரி)

# மைத்திரி மஹிந்த சந்திப்பு வரலாற்றில் சிறந்த கேலி

## அசாத் சாலி கூறுகிறார்

கொழும்பு, மே 7
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுக்கும்முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந் திப்பானது வரலாற்றில் மிக சிறந்த கேலி என தேசிய ஐக்கிய முன்ன ணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்,
இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதி பதிகள் ஓய்வுபெற்ற பின்னர் எந்தப் பிரச்சினையுமின்றி வாழ்ந்தனர் என்பதை அனைவரும் அறிவர்.
தோல்வியடைந்த ஜனாதிபதி தனது பதவிக்காலத்தில் கொள்ளையிட்ட பணத்தைச் செலவிட்டு விகாரைக ளுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு மீண்டும் அதிகாரத்திற்கு வர முயற்சித்து வருகிறார்.
முன்னாள் ஜனாதிபதியுடன் அவரது அரசில் இருந்த கொள்ளையர்களும் ஒன்றுக்கூடி வருகின்றனர். திருடர் களைப் பாதுகாப்பதற்காகப் பௌத்த மதத் தலைவர்கள் தலையிடுவது கவலைக்குரிய விடயம்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுக்கும் முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்புக்கு பௌத்த பிக்குமாரும் தொடர்புபட்டுள்ள தாக தகவல்கள் கிடைத்துள்ளன –என்றார். (த)

# இலவச சுகாதாரத்துக்கு 5 வீதம் ஒதுக்கத் திட்டம்

கொழும்பு, மே 7
இலவச சுகாதார சேவைக்கு என வரவு–செலவுத் திட்டத்தில் 5 வீதத்தை ஒதுக்க எண்ணியுள்ள தாக ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்துள்ளார்.
மஹரகம பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகை யிலேயே ஜனாதிபதி இதனைக் தெரிவித்தார்.
அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:–
சுதந்திரமான ஜனநாயக நாடொன் றில் தொழிற்சங்கப் போராட்டங்கள் இடம்பெற வேண்டும். தொழிற்சங்க உரிமைகளுக்காகப் போராட வேண் டும். ஊர்வலம், சத்தியாக்கிரகம் என்பன ஜனநாயக சமூ கம் ஒன்றின் அறிகுறி களாகும். அது மக்க ளின் ஜனநாயகத்திற் கான குரலாகும். எனவே, எமது அரசு ஜனநாய கத்திற்கான அடிப்படை விடயங்கள் அனைத்தை யும் உறுதிப்படுத்தும் வகையில் செயற்படும். அரச தலைவர் என்ற வகையில் அல்லது அரசு என்ற வகை யில் எந்தக்கொள் கையை நடைமுறைப்படுத்தினாலும் பிரச்சி னையில்லை என அண்மை யில் இலங்கைக்கு பயணம் மேற் கொண்டிருந்த அமெரிக்க இரா ஜாங்கச் செயலாளர் என்னிடம் கூறினார் –என்றார்.
சர்வதேச குடும்பநல சுகாதார தினத்தை நினைவுகூரும் வகையில் மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்த வைப வம் நடைபெற்றது. சிறந்த முறையில் சேவையாற்றிய குடும்ப நல சுகா தார உத்தியோத்தர்கள் அதன் போது கௌரவிக்கப்பட்டனர். (த–4)

# உணவகங்களில் திடீர்ச் சோதனை

யாழ்ப்பாணம், மே 7
உலக உணவு மாதத்தை முன்னிட்டு யாழ். மாநகரப் பகுதியில் உள்ள உணவகங்கள், வர்த்தக நிலையங் கள் மீது சுகாதாரப் பகுதியினர் நேற்றுத் திடீர்ச் சோதனை நடவடிக் கையில் ஈடுபட்டனர்.
யாழ்நகர் பொதுச் சுகாதார பரிசோ தகர் பிரிவில் இடம்பெற்ற இந்தத் திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது மூன்று உணவகங்கள் மற் றும் இரண்டு வர்த்தக நிலையங்கள் போதிய சுகாதார வசதியின்மை யால் சிக்கிக் கொண்டன.
இவற்றுக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக் கல் செய்யப்பட்டது.
இதில் ஒரு உணவகம் 'சீல்' வைத்து மூடப்பட்டது.
உணவகங்களில் போதிய சுகாதார வசதியைப் பின்பற்றாமையாலும், அங்கு பணியாற்றுகின்ற பணியா ளர்கள் சுகாதாரப் பகுதியினரின் நடைமுறையைப் பின்பற்றாமை யிலுமே இவை சட்ட நடவடிக் கைக்கு உட்படுத்தப்பட்டன.
உலக உணவு மாதத்தை முன்னிட்டு சுகாதாரப் பகுதியினரால் நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்த திடீர்ச் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற் கொள்ளப்படும்.
எனவே உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் தமது சுகாதார நடை முறைகளை இறுக்கமாகப் பேணு மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த–17)

# நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும்

## பிரதி வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை

பதவிக்காலம் முடிந்துபோன நாடா ளுமன்றமே தற்போதுள்ள தாகவும் கடந்த 23 ஆம் திகதியுடன் நாடா ளுமன்றத்தின் பதவிக்காலம் முடிந்து விட்டதாகவும் பிரதி வெளி விவகார அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரை யாற்றிய அவர், நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிந்து விட்டால், அதனை கலைத்துவிட்டு விரைவாக தேர்தலை நடத்தவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பதவிக்காலம் முடிந்துபோன நாடா ளுமன்றம் ஒன்று தொடர்ந்தும் இருப்பது மக்களின் ஆணைக்கு தகுதியானதல்ல. அத்துடன் அது செயற்பாட்டு ரீதியானதுமல்ல. இத னால், ஜனாதிபதி துரிதமாக பொருத் தமான நடவடிக்கையை எடுப்பார் என எதிர்பார்க்கின்றோம்.
கடந்த ஜனவரி 8 ஆம் திகதி நல் லாட்சி ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்துகொண்டது போல், மிக விரைவாக நல்லாட்சி நாடாளுமன் றத்தையும் தெரிவு செய்தாகவேண் டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு என்பதால், இது குறித்து உடனடியா கத் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் –என்றார். (த)

# மஹிந்தவின் பாதுகாப்பு பிரதானியும் சிக்கலில்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின்பாதுகாப்புப் பிரிவு பிரதானி கேணல் மஹேந் திர பெர்ணான்டோவி டம் இராணுவ விசேட விசாரணைப் பிரிவு விசாரணைகளை மேற் கொண்டுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றிய அங்குனுகொலபெலஸ்ஸ கூட்டத்தில் இராணுவ கோப்ரல் ஒருவர் துப் பாக்கியுடன் சென்ற சம் பவம் தொடர்பில் விசா ரணைகள் முன்னெடுக் கப் பட்டுள்ளன.
ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் கூட் டத்துக்குத் துப்பாக்கி யுடன் சென்ற இராணுவ கோப்ரல் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் பாது காப்பு பிரிவு உறுப்பினர் என வும், அவர் நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பாது காப்புக்காக அங்கு சென் றதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த)

# மஹிந்தவின் பக்கம் பாயும் பொன்சேகாவின் சகாக்கள்

கொழும்பு, மே 7
ஊவா மாகாண சபையில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட பிரதான ஏற்பாட்டாளர்கள் எழுவர் முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு ஆதரவு வழங்க தீர்மானித் துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
அதற்கமைய குருநாகலில் மஹிந் தவை பிரதம வேட்பாளராக நிய மிக்க கோரி நடத்தப்படவுள்ள பேர ணிக்கு குறித்த எழுவரும் ஆதரவு வழங்கவுள்ளதாகக் குறிப்பிடப்படு கின்றது.
பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா வின் அதிரடி நடவடிக்கை காரணங் களினாலேயே தான் உட்பட அனை வரும் இந்தத் தீர்மானத்தை மேற் கொண்டுள்ளதாக வியலுவ பிர தான ஏற்பாட்டாளர் விஜித குமார தெரிவித்துள்ளார்.
இதன்படி பண்டாரவளை தலைமை ஏற்பாட்டாளர் சந்திரசிறி முகாந்திரம், வெலிமடை ஏற்பாட்டாளர் நுவான் அக்கலங்க தனபால, ஹப்புத்தளை மற்றும் பண்டாரவளை பிரதான ஏற்பாட்டாளர் எஸ்.எஸ்.பீ.லயனல், முன்னாள் மாகாண சபை உறுப்பி னர் ஹேரத், ஊவா பரணகம இணை அமைப்பாளர் அனுர திலக, வியலுவ பிரதான ஏற்பாட்டாளர் விஜித குமார, இணை அமைப்பா ளர் இந்திக்க குமார உள்ளிட்டோரே முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளனர். (த)

**பேக்கரி வேலை ஆள்கள் தேவை**
நன்கு அனுபவம் உள்ள பேக்கரி பாஸ் தேவை.
தொடர்புகளுக்கு: 021 561 5051

**வீடு தேவை**
உடுவில், இணுவில் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
(59629)(3.9) தொடர்பு: 077 645 8141

**பணிப்பெண் தேவை**
இரண்டு பேர்கொண்ட வீட்டில் தங்கி நின்று பணியாற்றக் கூடிய 25 வயதுக் குட்பட்ட பணிப்பெண் உடன் தேவை. சம்பந்தப்பட்டவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 021 226 0277

**சீரடி பாபாவுக்கு சிறப்பு பூஜை**

சுன்னாகம் வீதி, புத்தூரில் அமைந்துள்ள சீரடி பாபா ஆலயத்தில் இன்று 07.05.2015 12 மணிக்கு சிறப்பு பூஜையும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும். பாபாவின் பக்தர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
(59527)(4.3.7)

**கடை வாடகைக்கு**
720, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ஸ்ரேசன் சந்தியில் சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு விடப்படும்.
(உணவகத்துக்கு உகந்தது)
தொடர்புகளுக்கு: 075 0489403

**வேலை வாய்ப்பு**
★ வரவேற்பாளர்
★ கொம்பியூட்டர் ரைப்பிங்
★ புத்தகம் கட்டுநர்
★ போட்டோ பிரதியாக்கம்
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
வடக்கின் முன்னோடி அச்சுப்பதிப்பகம்
தொ.பே : 0771974875

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா?
உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்
077 9086737 Computer Repair
GUNAA BEST PC 120,Hospital Road Jaffna. (Telecom Site)


**இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை ஆலயத் திருவிழாவும் மாபெரும் விளையாட்டுப் போட்டியும்.**
எதிர்வரும் (13.05.2015) அன்று புதன்கிழமை இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை யின் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து இர ணைப்பாலை செ‌ன். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டுப்போட்டியும்
**போட்டிகள்**
01. மரதன் ஓட்டம் ஆண்கள்
02. துவிச்சக்கர வண்டி ஓட்டம் ஆண்கள் சகலரும் கலந்துகொள்ளலாம்
மாலை மைதான விளையாட்டுக்களும் இரவு இசை நிகழ்வும் நடைபெறும்.
தொடர்புகளுக்கு: S.குணசீலன் (தலைவர்) 0771643508
M. ஜெராட் (பொருளாளர்) 077 7400771
விமல் (செயலாளர்) 077 0793008
சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம், இரணைப்பாலை.

# ஆஸி. அமைச்சர் டட்டன் கிழக்கு ஆளுநருடன் பேச்சு



மட்டக்களப்பு, மே 7
ஆஸ்திரேலியா குடிவரவு, குடியகல்வு மற்றும் எல்லை பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் டட்டன் கிழக்கு மாகாண ஆளுநரை நேற்று அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.
நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் ரொபின் மூடியும் பங்கு கொண்டிருந்தார்.
இரு தரப்பு உறவுகள் பற்றியும் இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்பவர்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.(த)

# அரசியல் சாசனப் பேரவை மிகவிரைவில் நிறுவுங்கள்

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மே 7
அரசியல் சாசனப் பேரவை வெகு விரைவில் நிறுவப்பட வேண்டும் என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
19 ஆவது திருத்தச் சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப் படுவதனை உறுதி செய்ய வேண்டுமென தெரி வித்து ள்ள சட்டத்தரணிகள் சங்கம், 17 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்ததைப் போன்று 19ஆவது திருத்தச் சட்டமும் நடைமுறைப்படுத்தப் படாமல் இருக்கக் கூடாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.
தற்போதைய அரசினால் 19ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை வரவேற்கத் தக்க விடயம் எனவும், இதற்காக ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களையும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
19ஆவது திருத்தச் சட்டம் குறித்து இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் முழுமையான அளவில் இணங்காத போதிலும், ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு, நீதிமன்றின் சுயாதீனத் தன்மையை நிலைநாட்ட முக்கிய நகர்வாக 19 ஆவது திருத்தச் சட்டத்தைக் கருத முடியும் என சுட்டிக் காட்டியுள்ளது.
அரசியல் சாசனப் பேரவையின் பெரும்பான்மை யானவர்கள் அரசியல் சார்பற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாடு என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.
19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதை போன்றே அதனை நடைமுறைப்படுத்தவும் அனைத்து தரப்பினரும் அக்கறை காட்ட வேண்டும் என சங்கம் வலியுறுத்தியுள்ளது.
(த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# அமைச்சரவை ஆலோசனைப்படி நிதி மோசடி விசாரணைப் பிரிவா?

## சட்ட நடவடிக்கைக்குத் தயாராகிறது ஐ.ம.சு.முன்னணி?

கொழும்பு, மே 7
பொலிஸாரின் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு நாம் எதிர்ப்பில்லை. எனினும், இப்பிரிவானது அமைச்சரவை உபகுழுவின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுவது முறையல்ல எனச் சுட்டிக்காட்டிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் நேற்றுத் தெரிவித்தது.
அத்துடன், நிதி மோசடி விசாரணைப் பிரிவை அரசியல் குழு இயக்குவதானது மிகப் பெரிய அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும் என்றும் அது சுட்டிக்காட்டியது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.
இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே ஐ.ம.சு.முன்னணியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சரான மஹிந்த யாப்பா அபேவர்தனவும் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.
"பொலிஸாரின் நிதி மோசடி விசாரணைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளதற்கு நாம் எதிர்ப்பு இல்லை. மேற்படி பிரிவானது அமைச்சரவை உபகுழுவின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுவதற்கு வழிவகுக்கும் வகையில் அமைந்துள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கே எதிர்ப்பை வெளியிடுகிறோம்.
அமைச்சரவை உபகுழுவின் தலைவராக செயற்படுபவர் பிரதமர். அவர் ஓர் அரசியல்வாதியாவார். இதனால், திட்டமிட்ட அடிப்படையிலும் பழிவாங்கல் நோக்கிலும் நடவடிக்கைகள் இடம்பெறலாம். எனவே, நல்லாட்சியொன்றில் இவ்வாறான செயற்பாடு ஏற்புடையதாக அமையாது. பொலிஸாரின் விடயத்தில் அரசியல் குழு வொன்று தலையிடுவதை அனுமதிக்க




முடியாது. எனவே, இதற்கு எதிராக விரைவில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளோம். எந்த நீதிமன்றில் என இன்னும் முடிவெடுக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்குரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன" என்று குறிப்பிட்டார் சுசில் பிரேமஜயந்த.
"அமைச்சரவையின் உப குழுவின் யோசனையின்படி, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு செயற்பட வேண்டும் என்பது மிகப்பெரிய அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும்" என்று இதன்போது குறிப்பிட்டார் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன.

# பதில் மேலதிக அரச அதிபராக முரளிதரன் நேற்று நியமனம்

யாழ்ப்பாணம், மே 07
யாழ்.மாவட்ட பதில் மேலதிக அரச அதிபராக, சண்டிலிப்பாய் பிரதேச செயலராக கடமையாற்றிய எஸ்.முரளிதரன் நியமிக்கப்பட்டுள்ளார். உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இந்த நியமனக் கடிதம் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு நேற்று மதியம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
அத்துடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராக, உடுவில் உதவிப் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.
உள்நாட்டலுவல்கள் அமைச்சினால், யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலாளர்களுக்கான இடமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் மருதங்கேணிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய என்.திருலிங்கநாதன் இடமாற்றம் செய்யப்பட்டு, புதிய பிரதேச செயலாளராக கனகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.
அதனைத் தொடர்ந்து தற்போது அடுத்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டச் செயலகத்தில் இதுவரை காலமும் வெற்றிடமாக இருந்த, பதில் மேலதிக அரச அதிபர் (காணி) என்ற பதவிக்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன் நியமிக்கப்பட்டுள்ளார். உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றங்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தாலும், எதிர்வரும் திங்கள் கிழமையே புதிய பதவி நிலையங்களில் பதவியேற்பு இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செம்மனச்செல்வி தில்லைநடராஜா



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செம்மனச்செல்வி தில்லைநடராஜா அவர்கள் (06.05.2015) புதன் கிழமை அன்று சிவபதமடைந்து விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற தில்லைநடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத் துரை- தெய்வானை தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-திலகவதி தம்பதியரின் அன்பு மருமகளும், சரஸ்வதி, புஸ்பவதி, தில்லைச்செல்வன் (ஆசிரியர்-யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானசம்பந்தன் (ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்- இலங்கை வங்கி), இரவிச்சந்திரன், வதனி(ஆசிரியர்- யா.வட்டு இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பஞ்சகரன், கஜன்-கிருபாகரி(U.K), சுரேசன்-சுபாகரி(டுபாய்), சைலா, திவ்யா, தினுஜன், பிரியந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிருஷா, ஹாசினி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.05.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலிதெற்கு பூணாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (59531) (4.3.7)
T.P: 077 620 8581

### திருமதி கமலாம்பிகை குலசேகரம்பிள்ளை




தோற்றம் 09.01.1936 மறைவு 04.05.2015

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.4, கரப்பன்காடு வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை குலசேகரம்பிள்ளை கடந்த (04.05.2015) ஞாயிற்றுக் கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை குலசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை -அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), சிவசக்திவேல் (கொழும்பு), விவேகானந்தன் (லண்டன்), சிவகுமார் (வவுனியா), தமிழ்ச் செல்வன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைவாணி, திருமலர், விஜிதா, தமயந்தி, கமிலா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவகாமிப்பிள்ளை, நாகபிள்ளை, மற்றும் கணேசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, விருத்தாசலம், பொன்னுத்துரை, சண்முகநாதன், கனகம்மா மற்றும் நீலாவதி, மீனலோஜினி, ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆதித்தன், துவாரகா, துவாரகன், விலாஜினி, விலோசன், அனோஜன், அஞ்சுகா, அர்ச்சனா, யதுசன், சாருஜன், தட்சகன், சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2015) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2.30 மணியளவில் பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னேஸ்வரா நகைப்பூங்கா, வவுனியா.
தொடர்பு: 077 3500265,
0777 222185,
077 8454655
தகவல்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வடிவேலு அன்னலிங்கம் (சொக்கப்பா)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, மன்னார் வீதி, பூவரசங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு அன்னலிங்கம் கடந்த 05.05.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், சறோயினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான லிங்கேஸ், புவனேஸ்வரன் மற்றும் நந்தினிதேவி (பொது வைத்தியசாலை-வவுனியா), கேதீஸ்வரன் (ஆசிரியர் செட்டிக்குளம் மகாவித்தியாலயம்), கிருபாகரன் (லண்டன்), குகவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், அருந்தவராசா (ராசாக்குட்டி), சிவகுமார் (பாபு-மாவட்டச் செயலகம்- வவுனியா), ஞானமலர், விக்கினேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2015) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 077 7629 298 மன்னார் வீதி,
பூவரசங்குளம், வவுனியா.

# பெங்களூர் 226, பஞ்சாப் 88


## பரிதாபமாக வெளியேறியது பஞ்சாப்



கெயிலின் அட்டகாசமான சதமும், வில்லியர்ஸின் இறுதிக்கட்ட அதிரடியும், ஸ்ராக் மற்றும் அரவிந்தின் மின்னல் வேக பந்துவீச்சும் கை கொடுக்க 138 ஓட்டங்களால் பஞ்சாப்பை பந்தாடியது பெங்களூர்.

பெங்களூர் எதிர் பஞ்சாப் அணிகளுக்கிடையிலான ஆட்டம். புள்ளிப் பட்டியலில் 9 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ள அணி பெங்களூர். நான்கு புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் கடைசியில் உள்ளது பஞ்சாப். இந்த ஆட்டத்தில் வென்றுவிட்டால் 11 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தை பெங்களூர் கொல்கத்தாவுடன் பகிர்ந்துகொள்ளும். பஞ்சாப் தோல்வியுற்றால் ஏனைய ஆட்டங்களில் வென்றாலும் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாது. எனவே பஞ்சாப்பின் முடிவைத்தீர்மானிக்கும் ஆட்டமாக இந்த ஆட்டமே அமைந்த காரணத்தினால். நிச்சயம் வெற்றிபெற்றாக வேண்டும் என்ற கட்டாயத்தில் பஞ்சாப் வீரர்கள்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் பெங்களூரை துடுப்பெடுத்தாடப் பணித்து தனது தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டியது. பஞ்சாப்பின் விதியை என்னவென்று சொல்லுவது. களத்தில் கெயிலுடன் ஹோக்லி. முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே அதிரடி ஆரம்பமானது. ஜோன்சனின் பந்துகளை கெயில் ஒரு பொருட்டாக மதிக்கவேயில்லை. சர்வசாதாரணமாக அடித்துத்துவைத்தார். கெயிலின் தாண்டவத்துக்கு வாய்ப்புக்



களை வழங்கிக்கொண்டிருந்தார் ஹோக்லி. ஒவ்வொரு சிக்சரும் பவிலியனின் மேல்தளத்தைச் சென்று தொட்டுவிட்டு வந்தது. பந்தைப் போடுவதும் தலையை நிமிர்ந்து பந்தை வழியனுப்பி வைப்பதுமே பந்துவீச்சாளர்களின் பிரதான கட்மையாக மாறிவிட்டது. இவ்வளவிற்கும் பொதுவில் தொடர்ந்தும் சிரித்துக்கொண்டேயிருந்தார் பெய்லி. பஞ்சாப்பின் ரசிகர்கள் மைதானத்தில் உள்ளனரா இல்லையா என்றுகூட தெரியாத அளவுக்கு அடங்கிப்போய் இருந்தனர் பஞ்சாப் ரசிகர்கள். ஒன்பதாவது பந்துப்பரிமாற்றத்தில் பெங்களூர் நூறு ஓட்டங்களை எட்டியது. அடுத்ததாக கெயில் சதத்தைப் பதிவு செய்வாரா என்பதில் ரசிகர்கள் ஆர்வம் காட்டத்தொடங்கினர். சில பந்துப் பரிமாற்றங்களிலேயே அதுவும் சாத்தியமாகி– சதத்தைச் சந்தித்து புதிய நடனம் ஒன்றை அறிமுகப்படுத்தினார் கெயில். பெங்களூரின் ஓட்ட எண்ணிக்கை 119 ஆக இருந்த பொழுது ஹோக்லி பவிலியன் திரும்ப சற்று ஆட்டம் போட்டனர் பஞ்சாப்பை சார்ந்தவர்கள். அப்பொழுதுதான் அவர்களின் கஷ்டகாலம் இரட்டிப்பாகின்றது என்பதனை அவர்கள் அறிந்திருக்கவில்லை. களத்தில் வில்லியர்ஸ். அதிரடிக்கு பெயர்போன வில்லியர்ஸ், கெயில் என்னும் இரண்டு துருவங்கள் ஒரே அணிக்காக ஒன்றாகக் களத்தில் நிற்பது நேற்றுத்தான் முதல் தடவை. கெயிலும் வில்லியர்ஸிம் கூட்டுச்சேர்ந்தால் விளைவு என்னவாக இலுக்கும் என்பது உலக மக்களுக்கு நேற்றுப்புரிந்திருக்கும். தமக்குள் போட்டி போட்டு சிக்சர்களை விண்ணுக்கு ஏவினார்கள். இருவரினதும் சராசரி இருநூற்று ஐம்பதுக்கும் மேல் நிலைகொண்டது. ஒருவாறாக கெயிலின் இன்னிங்ஸ் 117 ஓட்டங்களுடன் நிறைவுக்கு வந்தது. களத்தில் குட்டிச் சச்சின் என்று வர்ணிக்கப்படும் பதினேழு வயதுப் பையன் சர்ப ராஸ். இறுதிக்கட்ட அதிரடிகளும் கைகூட முடிவில் பெங்களூர் 226–3.

ஸ்ராக், சகல், அரவிந் போன்ற பந்துவீச்சாளர்களை எதிர் கொண்டு 120 பந்துகளில் 227 ஓட்டங்களை எட்டவேண்டும். நிச்சயம் இயலாத காரியம். ஆனாலும் கௌரவ ஓட்டங்களை என்றாலும்பஞ்சாப்எட்டவேண்டும். களத்தில் முரளி விஜய்யுடன் வோகாரா. முதலாவது பந்துப்பரி மாற்றத்திலேயே பவிலியன் திரும்பினார் வோகாரா. இரண்டாவது பந்துப்பரி மாற்றத்தில் போல்ட்டா னார் முரளி விஜய். பஞ்சாப்பின் தொடக்க வீரர்கள் இருவரும் அணி 20 ஓட்டங்களை எட்டுவதற்குள் இல்லாமல் போயினர். வந்த வேகத்திலேயே சிக்சர் ஒன்றை விளாசினார் சகா. எதிர்பார்க்கப்பட்ட மக்ஸ்வெல் ஒரு ஓட்டத்துடன் போல்ட்டானார். மில்லர் 7 ஓட்டங்களுடன் போல்ட்டானார். மக்ஸ்வெல், மில்லர் இருவரையும் பவிலியனுக்கு அனுப்பிய அரவிந் சகாவையும் அனுப்பத் தவறவில்லை. ஏழாவது பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் பஞ்சாப் 39–5. இலக்குகள்சரிவது நிறுத்தப்படவில்லை. வேகத்தில் ஸ்ராக்கும் அரவிந்தும் வித்தை காட்டினார்கள். பஞ்சாப் வீரர்களின் மட்டைக்குள் அகப்படாது இலக்குகளை பதம் பார்த்தன இருவரது பந்துகளும். குறிப்பாக ஸ்ராக்கின் பந்துவீச்சை எதிர்கொள்வதில் பயந்தொதுங்கி நின்றனர் பஞ்சாப் வீரர்கள். பெய்லி போல்ட், ஜோன்சன் போல்ட், அனுரித் சிங் போல்ட், கரன்வீர் சிங் போல்ட் முடிவில் பஞ்சாப் 88 ஓட்டங்களில் போல்ட். (ரி)

# வார்த்தையால் பேசமாட்டேன் என் துடுப்பு மட்டையே பேசும்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்கு எதிராக டெல்லி அணி நேற்றுமுன்தினம் மோதிய லீக் ஆட்டத்தில் யுவராஜ் அரைச்சதம் விளாசி அசத்தினார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த யுவராஜ் என்னை விமர்சிப்பவர்களுக்கு இனிமேல் வார்த்தைகளால் பதிலளிக்கமாட்டேன் எனது துடுப்பு மட்டையின் மூலமே பதிலளிப்பேன் என்று கூறியுள்ளார்.

தனது அரைச் சதம் தொடர்பாக யுவராஜ் தெரிவித்ததாவது:–

என் பணி கிரிக்கெட் ஆடுவதே, விமர்சகர்களின் பணி எழுதுவது. நான் தொலைக்காட்சியில் வருவதையோ, செய்தித் தாள்களில் எழுதப்படுவதையோ கண்டு கொள்வதில்லை. என் வாழ்வில் இப்போதைக்கு அதற்கு நேரமில்லை. எனவே நான் எனது பணியில் தீவிரமாக இருக்கிறேன். இன்னும் ஒருதடவை தேசியஅணிக்குள் எனது பிரவேசம் நிச்சயம் இடம்பெறும். என்னால் இன்னமும் ஐந்து ஆண்டுகள் காலம் விளையாட முடியும் என்பதை நடப்பு ஐ.பி.எல். தொடரின் எஞ்சிய ஆட்டங்களில் வெளிப்படுத்துவேன்.

இப்போது 'செய் அல்லது செத்துமடி' என்ற சூழ்நிலை எங்கள் அணிக்கு ஏற்பட்டுள்ளது. இன்னும் 4 ஆட்டங்கள் உள்ளன, இதில் அனைத்திலும் வென்றாகவேண்டும். இது கடினம் என்றாலும் சாத்தியமாகாதது அல்ல. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தொடர்ச்சியாக 6 அல்லது 7 ஆட்டங்களில் வென்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்று கிண்ணத்தையும் கைப்பற்றியது. அவ்வாறான ஒரு முயற்சியில் தீவிரம் காட்டப்போகிறேன்–என்றார். (த–ரி)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 23.04.1934
மறைவு: 07.05.2013

அமரர்
**தாவீதுப்பிள்ளை அல்போன்ஸ்**
(முன்னாள் ஊழியர் பரந்தன் இரசாயனபொருள்கள் கூட்டுத்தாபனம்)

அன்போடு அரவணைத்து
ஆசையாய் முத்தமிட்டு
இதமாக பல கதைகள் சொல்லி
[illegible] பாச மழை பொழிந்து
உங்கள் நலன் பாராது
ஊக்கமாய் எமை வளர்த்த – அப்பப்பாவே
எம்மைவிட்டு பிரிந்து ஈராண்டு ஆனாலும்
எம்மனதில் உம் நினைவு
என்றுமே மாறாது.

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

**பேரப்பிள்ளைகள்.**

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

உதிர்வு: 02.02.1978 | உதிர்வு: 13.05.2009



அமரர்
**இராமலிங்கம் பிரபாகரன்**
(திட்டமிடல் உதவியாளர் கண்டாவளை)

ஆண்டுகள் பல கழிந்தாலும்
எம் உள்ளத்தில் என்றும்
நீங்காது நிலைத்திருப்பாய்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகள்,
பெற்றோர், சகோதரர்கள்.

வரதவிநாயகர் கோவில் வீதி,
தம்பனை சேந்தை,
பருத்தித்துறை.
(56496)(10)

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் நந்தாவில் நீங்காமூலை காளி ஆச்சிக் கோயில் ஸ்தாபகரும் சம்பியன் லேன் கொக்குவிலைச் சேர்ந்தவருமான **தம்பிஐயா நாகரத்தினம் தம்பதியரின் மகனும், மருமகளும்** மற்றும் பரமேஸ்வரன், இராஜேஸ்வரன், சகாதேவன், மகாதேவா ஆகியோரின் சகோதரனும் மைத்துனியுமாகிய

**தம்பிஐயா விக்கினேஸ்வரன்**
**விக்கினேஸ்வரன் ரட்ணேஸ்வரி**

ஆகியோர் லண்டனில் சிவபதமடைந்த செய்திகேட்டு துயரடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாக சபை,**
**நீங்கா மூலை காளி ஆச்சி தேவஸ்தானம்.**
**நந்தாவில் வீதி, சம்பியன் லேன், கொக்குவில்.**

## கண்ணீர் அஞ்சலி



பொலிகண்டி மருதாம்புலம்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
மூலஸ்தான திருப்பணியை
மன நிறைவோடு அழகுற நிறைவேற்றித் தந்த

**அப்பாத்துரை சண்முகநாதன்**
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட வங்கி முகாமையாளர் இலங்கை வங்கி)

கடந்த 23.04.2015 வியாழக்கிழமை அதிகாலை பத்திரகாளி அம்பாளுடைய திருப்பாதங்களையடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

**சிவப்பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக்குருக்கள் குடும்பத்தினர்,**
பிரதமகுரு ஸ்ரீபத்திரகாளியம்மன் தேவஸ்தானம்
மருதாம்புலம் – பொலிகண்டி.
(59533)(10.3)

# தேசிய பாதுகாப்புக்கு அதியுச்ச நடவடிக்கை

## ஜனாதிபதி மைத்திரிபால கூறுகிறார்

கொழும்பு, மே 7

நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்குப் புதிய அரசு என்ற வகையில் எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் உச்ச அளவில் எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான முக்கியமான பல நடவடிக்கைகளை கடந்த மூன்று மாதங்களில் அரசு எடுத்துள்ளது எனத் தெரிவித்த ஜனாதிபதி, தேசிய பாதுகாப்புத் தொடர்பாக தனது பொறுப்பையும் அனைவரும் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டுமென்றும் தெரிவித்தார்.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தெற்கு வளாகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய ஆய்வின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கண்டுபிடிப்புகளுடன் படையினரின் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. அது பற்றிய உரிய பயிற்சி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்குக் கடந்த காலங்களில் நாம் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களின்போதும் இந்நாட்டுக்கு அரச தலைவர்கள் வருகை தந்திருந்த போதும் விருப்பம் தெரிவித்தார் கள்–என்றார்.

மூன்று தசாப்தங்களாக நாட்டு மக்களை இன்னல்களுக்கு உள்ளடக்கிய கொடூரமான பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை நிறைவு செய்த படையினர் இன்று மானிட சமுதாயத்துக்கு ஆற்றுகின்ற விரிவான சேவையையும் ஜனாதிபதி இதன்போது பாராட்டினார் என்று அரச ஊடகம் செய்திவெளியிட்டுள்ளது. (த–4)

# பிரச்சினைகளை வெளிக்கொணர 3 வருடத் திட்டம்

## மக்கள் அமைப்புக்களிடம் இருந்து ஒத்துழைப்பு கோருகிறது இணையம்

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணத்திலுள்ள பிரச்சினைகள் வெளிக்கொண்டு வரப்படுவது போதாதுள்ளதோடு வெளிக்கொணரப்படும் நடவடிக்கையும் அருகி வருவதனை அவதானிக்க முடிகிறது. அத்தகைய பிரச்சினைகளை வெளிக்கொணர 3 வருடத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது. அதில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் ஜெ.தற்பரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு ஒன்று இணைய அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்.மாவட்டத்தில் நகர் சார்ந்த இடங்கள் மட்டுமன்றிக் கிராமப் புறங்கள், தீவகம், மருதங்கேணி உள்ளிட்ட கஷ்டப் பிரதசங்களிலும் பல பிரச்சினைகள் உள்ளன. அத்தகைய பிரச்சினைகள் வெளியே எடுத்துக் கூறப்படாதுள்ளன. அவற்றை வெளிக்கொண்டுவர வேண்டியுள்ளது. எனவே யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களினதும் கிராம மட்ட அமைப்புக்கள், நிறுவனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய சங்கங்கள் மீனவ சங்கங்கள் உள்ளிட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து கலந்துரையாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலக்கம் 40, கோயில் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. அதில் குறித்த அமைப்புக்கள் மாத்திரமன்றி தனிநபர்கள், கல்விமான்கள், சமூக நலன்விரும்பிகள் உள்ளிட்டவர்கள் அந்தக் குழுவில் இணைந்து கொண்டு தத்தமது பகுதிப் பிரச்சினைகளை எடுத்துக் கூறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அரசியல், அரசு, தொண்டு நிறுவனங்களின் பணிப்புரை எதுவுமின்றி இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.குறித்த 3 தரப்பினரிடமிருந்தும் உதவிகள் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்படும். பல பிரதேசங்களின் பிரதிநிதிகள் இதில் பங்குபற்றித் தமது பகுதிப் பிரச்சினைகளை முன்வைக்க முடியும்.

இதன் நோக்கங்களாக, பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அமைப்புக்களின் ஒருமித்த இணக்கப்பாட்டுடன் வெளிக்கொண்டுவரல், ஜனநாயக நடைமுறைகளில் நேர்மறையான தாக்கமான மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடல், நற்சிந்தனையுடன் அரசியல் கலப்பற்ற தனித்துவமான. மக்களின் பாதுகாவலனாக மக்களின் குரலாக இயங்குதல் என்று தற்பரன் தெரிவித்துள்ளார். (த–4)

# திடீரெனத் தீப்பற்றி எரிந்த மோ. சைக்கிள்



தென்மராட்சி மே 7

வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது. அயலவர்கள் உடனடியாகத் தீயை அணைத்தால் ஓரளவு சேதத்தடன் மோட்டார் சைக்கிள் தப்பிக் கொண்டது. அதில் பயணித்த இருவர் மயிரிழையில் ஆபத்தின்றித் தப்பினர்.

இந்தச் சம்பவம் நேற்று மு.ப. 11 மணியளவில் சாவகச்சேரி டச்சு வீதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரெனத் தீப்பற்றி இயந்திரப் பகுதி எரிந்தது.இதனை அவதானித்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் பாய்ந்து கொண்டனர். அப்பகுதியில் நின்றவர்கள் உடனடியாகச் செயற்பட்டுத் தீயை அணைத்தனர். (த–9)

# விபத்துகளால் செவ்வாய் மட்டும் தென்மராட்சியில் 10 பேர் காயம்

தென்மராட்சி, மே 7

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி 10 பேர் காயமடைந்தனர் இவர்களில் 7 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்து வமனைக்குப் கொண்டு செல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை கைதடி நுணாவில் ஏ–9 வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இருவர் , மட்டுவில் பகுதியில் மோட்டார் சைக்கிளால் மோதுண்ட வயோதிபர், மாலை சாவகச்சேரி பெரிய அரசடிச் சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் பாடசாலை மாணவன் , இரவு வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியில் நின்ற மாட்டுடன் மோதியதில் அதில் பயணித்த பெண் உட்பட மூவர், மீசாலை வடக்கு இராமாவில் ஏ–9 வீதியில் ஓட்டோ மோட்டார் சைக் கிள் விபத்தில் ஒருவர், அதே பகுதி யில் வாகனத்தினால் மோதுண்ட பெண், மட்டுவில் பகுதியில் வாகனத் துடன் மோதிய பெண் எனப் பத்துப் பேர் விபத்துக்களில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்து வமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்க ளில் 7 பேர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் (வயது–30), தாளையடி உடுத்துறை வடக்கைச் சேர்ந்த மருத்துவர் அஜீத் (வயது –26), தாவளை இயற்றாலையைச் சேர்ந்த இரத்தினராசா சிவராசா (வயது 31), மீசாலை கிழக்கைச் சேர்ந்த ஞானேந்திரன் கோபிகன் (வயது–9), மீசாலை வடக்கைச் சேர்ந்த சிவபாலன் கஜீபன் (வயது 20), பிரதீபன் குணந்தா (வயது 32), இணுவிலைச் சேர்ந்த ஆர்.எம். எஸ்.பீ. மதுசங்கர் (வயுது 23), நுணாவில் மேற்கைச் சேர்ந்த சுவாமிநாதன் பத்மநாதன் (வயது 67), மட்டுவில் வடக்கைச் சேர்ந்த அமிர்தன் மஞ்சுளாதேவி (வயது 42) உட்பட பத்துப் பேர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். (த–9)

# பல்கலையில் கையொப்பங்கள் முறைகேடு எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 7

குறிப்பிட்ட ஒரு விடயத்துக்காக 2013 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க அங்கத்தவர்கள் பலரது கையொப்பங்களை யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தவறாகப் பயன்படுத்தியுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஆனால் அந்தக் குற்றச்சாட்டை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் முற்றாக மறுத்துள்ளது.

தமது கையொப்பங்கள் புகைப்படப் பிரதி எடுக்கப்பட்டு அதனோடு தொடர்பில்லாத பல உள்நோக்கம் கருதிய விடயங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் கையொப்பமிட்ட எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் ஆதாரபூர்வமாக அறிந்து அதிர்ச்சிக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளதோடு அதனை எமது சங்கத்தின் உடனடி நடவடிக்கைக்காக தெரியப்படுத்தியுள்ளார்கள்.

இவ்வாறாகப் புத்திஜீவிகள் உறுப்பினர்களாகவும் நிர்வாக உறுப்பினர்களாகவும் பதவி வகிக்கும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் மேற்படி செயற்பாடு ஒரு குற்றவியல் செயற்பாட்டுக்கு ஒத்ததாகும். இதனை ஒரு புத்திஜீவிகள் சங்கம் மேற்கொண்டமையானது, மிகவும் அருவருக்கத்தக்கதும் கடும் கண்டனத்திற்குமுரியதுமாகும். இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தங்களை முதலில் தூய்மைப்படுத்த முயலவேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆனால் அந்தக் குற்றச்சாட்டை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் முற்றாக மறுத்துள்ளது.

அது தொடர்பில் சங்கத்தைச் சேர்ந்த கலாநிதி அறிவழகன் தெரிவிக்கையில்,

குறித்த ஆசிரியர்களிடமிருந்து கையொப்பங்கள் பெறப்பட்டதானது 2013 ஆம் ஆண்டு நடந்த ஒரு தீர்மானத்துக்கானதே. ஆனால் தமது சங்கம் கடந்த வாரம் துணைவேந்தர் மீதான விசாரணை உள்ளிட்ட 5 விடயங்களை வலியுறுத்தியுள்ளது. அந்த 5 விடயங்களில் மிகுதி 4 விடயங்களும் முன்னைய காலத்தில் கூறப்பட்டவையே. அவை மேலதிக தகவல்களுக்காக மாத்திரமே இணைக்கப்பட்டுள்ளதே தவிர எந்தவிதத்திலும் தமது சங்கம் புதிதாக அவர்களது கையொப்பங்களைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என்று தெரிவித்தார்.

இதுபற்றிய தெளிவூட்டும்துண்டுப்பிரசுரங்கள் பல்கலைப் பேரவை உறுப்பினர்களுக்கு நேற்று வழங் கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. (த–4)

# குற்றம் சுமத்தப்பட்ட அஸ்கர் அதே பதவியுடன் மன்னாருக்கு

## வடபிராந்திய பஸ் ஊழியர்கள் கடும்விசனம்

யாழ்ப்பாணம், மே 7

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளராக இருந்து விலக்கப்பட்டதாகக் கூறப்பட்ட அஸ்கர் அதே பதவியுடன் இன்று தொடக்கம் மன்னார் டிப்போவில் கையொப்பம் இட்டுப் பணியைத் தொடரவுள்ளார் என்று டிப்போ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அவர் பல குற்றச் செயல்கள், மோசடிகளில் ஈடுபட்டார் என்று டிப்போ தரப்பினரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதோடு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது தவிர இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மத்திய அலுவலகத்திலுள்ள புலனாய்வுப் பிரிவினரும் வடக்குக்கு வந்து விசாரணை மேற்கொண்டிருந்தனர். ஆனால் அவர்களது செயற்பாடும் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்று டிப்போ தரப்பினரால் குற்றம் சுமத்தப்படுகின்றது.

அது மாத்திரமன்றி அஸ்கர் வடபிராந்திய அலுவலகத்திலிருந்து நீக்கப்பட்டுக் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் வடபிராந்திய அலுவலகத்துக்குரிய வாகனம், கைத்தொலைபேசி இலக்கம், பொறுப்புக்கள் என்பன இன்றுவரை டிப்போ அதிகாரிகளிடம் மீள ஒப்படைக்கப்படவில்லை என்றும் கூறுகின்றனர். அதனால் பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் டிப்போ தரப்பினர்தெரிவித்தனர்.

இவை அத்தனைக்கும் அவருக்கு நெருங்கிய அமைச்சர் ஒருவரே பின்புலமாக இருந்து வருகிறார் என்றும் டிப்போ தரப்பினர் குற்றம் சுமத்துகின்றனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையை இரண்டாகப் பிரிக்க முன்னர் நடவடிக்கை எடுத்தபோது சபை ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அதனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருந்த நிலையில் தற்போது பல குற்றம் சுமத்தப்பட்ட அஸ்கரை அதே பதவியுடன் மன்னார் டிப்போவில் கையொப்பமிட இன்றிலிருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக டிப்போ தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர். அரசு இந்தப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ஊழியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த–4)

## வீதியை மீள் புனரமைக்க கோரிக்கை

மானிப்பாய், மே 7

கரவெட்டி பிரதேச சபைக்குச் சொந்தமான கம்பர் மலை(பாரதி சனசமூக நிலையம் ஊடாகச் செல்லும்) வேலகாட்டுசந்தி வரையிலான வீதி படுமோசமாக அழிவடைந்துள்ளது.குறித்தவீதியை மீள்புனரமைப்புச் செய்து தருமாறு இதுவரை 10 இற்கும் மேற்பட்ட கடிதங்கள், மனுக்கள் வழங்கப்பட்டும் தலைவர், செயலாளர் பாராமுகமாக உள்ள தாக அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மேற்படி கம்பர் மலை; பாரதி சனசமூக நிலைய வீதி ஊடான வேலதாட்டு சந்தி வரையிலான வீதியே இவ்வாறு மீள்புனரமைப்பு இன்றி உள்ளது.

கரவெட்டிப் பிரதேச சபையானது மக்களின் முன்னுரிமை தெரிவுக்கு இதுவரை மதிப்பளிக்கவில்லை.

பொது அமைப்பின் பிரதிநிதிகள் சார்பில் நேரில்சென்று கதைத்தபோது 2015 வரவு – செலவுத்திட்ட நிதி அல்லது புறநெகும அபிவிருத்தி நிதியில் மீள்புனரமைப்பு செய்து தருவதாக தெரிவிக்கப்பட்டது.எனினும்இதுவரைஎமது கோரிக்கை நிறைவேற்றப்பட வில்லை.

எனவே குறித்த வீதி ஜுன் மாதத்துக்கு முன்னர் இடம் பெறவேண்டும். இல்லா விடில் பொதுஅமைப்புக்களின்பிரதிநிதிகள் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மக்களை திரட்டிபிரதேச சபை முன்பாக மக்கள் சக்தி போராட்டத்தை முன்னெடுப்போம் என்றும் தெரிவித்துள்ளனர். (வ–50

# நியமனத்தில் புறக்கணிப்பு

## அம்பாறை மாவட்ட தமிழ்ப் பட்டதாரிகள் கிழக்கு மாகாண சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

அம்பாறை, மே 7

கிழக்கு மாகாண சபையில் பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் நியமனங்களில் அம்பாறை மாவட்ட தமிழ்ப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று தெரிவித்து குறித்த பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று கிழக்கு மாகாண சபை கட்டட தொகுதிக்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட வேலையில்லா தமிழ் பட்டதாரிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்துள்ளனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்ற தமிழ் பட்டதாரிகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று ஆர்ப்பாட்டகாரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.




அது மாத்திரமல்லாது கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு இதுவரை நியமனங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில்தமக்குஉரியநியமனங்கள் வழங்கப்படாத பட்சத்தில் காலவரையறையற்ற உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவும் தயங்கமாட் டோம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் எச்சரிக்கை விடுத்துள்ள னர். (வ)



*மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள முருகன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவில் முருகன் தேரில் வெளிவீதியுலா வரும் காட்சியைக் காணலாம். (வ-86)*

## இளைஞர்சேவை மன்றங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

வலி.வடக்கு, மே 7

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை மற்றும் காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவுகளில்உள்ளஇளைஞர்சேவைகள் மன்றங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட சம்மேளனத் தலைவர் எஸ்.லக்ஷன் தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமைநடைபெற்றது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் சங்கானை பிரதேச செயலாளர்களான எஸ்.முரளிதரன் அ.சோதிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

161கழகங்களுக்கு உதைபந்துகள், கரப்பந்துகள், வலைப்பந்துகள், மென்பந்து, கிரிக்கெட் உபகரணங்களும் மற்றும் கரம்போட் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. (வ–86)



## வயாவிளான் யாகப்பர் ஆலய கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கொழும்புத்துறை, மே 7

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பலாலி தெற்கு வயாவிளான் புனித யாகப்பர் ஆலய பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் 25 வருடங்களின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமைகூரையின்றிக்காணப்பட்ட ஆலயத்தினுள் நடைபெற் றது.

பங்குத் தந்தை அருட்திரு அன்ரனி பாலா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கிராமத்தின் இன்றையநிலை எதிர்காலத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் சேதம் அடைந்திருக்கும் ஆலயப்புனரமைப்பு போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அந்தப் பகுதி கிராம அலுவலரும் பிரசன்னமாயிருந்த கூட்டத்தில், ஆலய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது.

பங்குத் தந்தையைத் தலைவராகக் கொண்ட நிர்வாக சபைக்குச் செயலாளராக அ.ரவீந்திரனும்உபசெயலாளராகபொ.ஆனந்தராஜும், பொருளாளராக யோ. ஜெயரட்ணம் சதீஸும் மற்றும் 13 பேர் அடங்கிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (வ–135)



## கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 7

யாழ்.பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.சென் பற்றிக்ஸ் வீதியில் உள்ள அகவொளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ–14)

## 50 பானைகள் வைத்து நடைபெற்ற பொங்கல்

தென்மராட்சி, மே. 7

கைதடிநவபுரம்நவசக்திசனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வுகள் நடைபெற்றன.

அதன் ஓர் அங்கமாக 50 பானைகள் வைத்துப் பொங்கல் நிகழ்வு அண்மையில்நிலைய முன்றிலில் வீதியோரத்தில் இடம்பெற்றது.

நிலையத்தின் சீருடை அணிந்த அந்தப்பகுதி பெண்கள் பொங்கலில்கலந்துகொண்டனர்.

நிலையத் தலைவர் சி.கயோதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நிலையத்தின் ஆரம்ப காலத் தலைவர் நா.மாணிக்கம். கலந்து கொண்டார். (வ–9)



# நண்பர்களின் போர் நாளை ஆரம்பம்





யாழ்ப்பாணம், மே 7
நண்பர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கும் இடையிலான இரண்டு நாட்களைக்கொண்ட டெஸ்ட் ஆட்டம் நாளையும் நாளை மறுதினமும் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.
இரண்டு பாடசாலைகளுக்கும் இடையே கடந்த 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் நண்பர்களின் போரில் 2013ஆம் ஆண்டு யாழ் ஸ்ரான்லிக் கல்லூரியும் 2014ஆம் ஆண்டு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியும் வெற்றியீட்டின. முல்லைத்தீவு மாவட்டத்தில் வித்தியானந்தா அணி முதல்தர அணியாகவும் தோல்வியை சந்திக்காத அணியாகவும் நடப்பாண்டில் திகழ்வதுடன் இலங்கை தேசிய .வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பிலான பயிற்சி முகாம்களில் கலந்துகொண்ட வீரர்களையும் முரளிக் கிண்ண நல்லிணக்க தொடரில் பங்குபற்றிய வீரர்களையும் உள்ளடக்கிய அணியாக விளங்குகின்றது
இதேவேளை, யாழ்.ஸ்ரான்லி அணியானது யாழ். பாடசாலைகளுக்கு இடையேயான பல ஆட்டங்களில் வெற்றியீட்டிய அணியாகத் திகழ்கின்றது. இந்த நிலையில் இரண்டு அணிகளும் பலமான அணிகளாக விளங்குவதால் போட்டியானது விறுவிறுப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 1:1 என்ற அடிப்படையில் சமநிலையில் உள்ள நண்பர்களின் போரில் முன்னிலை பெறப்போவது யார்? ஆட்டம் நாளை ஆரம்பம். (த-ரி-102)

# வவுனியா தெற்கு கபடியில் அபாரம்



வவுனியா, மே 7
வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடி தொடரின் இறுதியாட்டத்தில் இரு பிரிலும் வவுனியா தெற்கு பிரதேச செயலக அணி வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.
கடந்த வாரம் வவுனியா நகரசபை மைதானத்தில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா தெற்கு பிரதேச செயலக அணியை எதிர்த்து செட்டிகுளம் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் வவுனியா தெற்கு பிரதேசசெயலக அணி 40:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.



பெண்களுக்கான இறுதி யாட்டத்தில் வவுனியா தெற்கு பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா பிர தேச செயலகஅணிமோதிக்கொண்டது. இதில் வவுனியா தெற்கு பிரதேச செயலக அணி 27:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.(த-ரி-23)

## யங்கம்பன்ஸ்-நவஜீவன்ஸ் இறுதியில் பலப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 7
கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங் களில் யங்கம்பன்ஸ் விளையாட் டுக்கழக அணியும் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத்தகுதி பெற்றன.
கடந்தவாரம் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இந்த ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.(த-ரி-23)

## தீவக உதைபந்தாட்டத்தில் சாதித்தது மெலிஞ்சிமுனை

தீவக உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நயினாதீவு ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் நடத்திய 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று சம்பியன் ஆனது.
கடந்த வாரம் நயினாதீவு ஞானவைரவர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றது. (த-ரி-23)

# உடுவில் மகளிர் திரில் வெற்றி வலயச் சம்பியனாகவும் வலம்



வலி.வடக்கு, மே 7
வலிகாமம் கல்வி வலயப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின்னர் உடுவில் மகளிர் கல்லூரி திரில் வெற்றி பெற்று வலயச் சம்பியனானது.
மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரியும் இராமநாதன் கல்லூரியும் மோதிக் கொண்டன. இறுதியாட்டத்துக்குரிய விறுவிறுப்பு ஆட்டத்தில் இருக்கத் தவறவில்லை. புள்ளிப் பட்டியலில் மாறி மாறி இரு அணிகளும் ஆதிக்கம் செலுத்திய நிலையில் எந்த அணி வெற்றியை சொந்தமாக்கப் போகின்றது என்பதை எதிர்வு கூற முடியாத நிலைமை காணப்பட்டது. ஆனாலும் இறுதி நிமிடத்தில் உடுவில் மகளிர் கல்லூரி பெற்ற புள்ளியினால் 27:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரி இராமநாதன் கல்லூரியை வெற்றி பெற்று வலிகாமம் கல்வி வலய சம்பியனானது. (த-ரி-86)

## சென்.ஜோன்ஸை புரட்டியெடுத்த மகாஜனா



வலி.வடக்கு, மே 7
தெல்லிப்பளை மகாஜனக் கல் லூரி வீரன் நிசானுயன் கைப்பற்றிய ஐந்து இலக்குகள் மற்றும் ஆட்டமிழக்காது பெற்ற 13 ஓட்டங்களினாலும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியை வீழ்த்தியது மகாஜன.
யாழ் மாவட்டப் பாடசாலை அணிகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெறும் ஒருநாள் துடுப்பாட்டத்தொடரின் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும் மகாஜனக் கல்லூரியும் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் மோதிக்கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 24 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 132 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக சலோமியன் 35 ஓட்டங்களையும், டேனுசன் 23 ஓட்டங்களையும், அபிநாஸ் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மகாஜனக்கல்லூரி சார்பாக நிசானுயன் 05 இலக்குகளையும், பகீதரன், ஜோன்சன், றிசாந், நிரோசன், வேணுஜன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.
133 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 26.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஆறு இலக்குகளை இழந்து வெற்றியைப் பதிவு செய்தது. அதிகபட்சமாக பகீரதன் 25 ஓட்டங்களையும் கிரிசாந் 14 ஓட்டங்களையும் ஜோன்சன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் கஜதீபன், தனுசன் தலா 02 இலக்குகளை கைப்பற்றினார்கள்.(த-ரி-86)

## கிண்ணங்களை தனதாக்கியது வவுனியா பிரதேச செயலகம்

வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்குஇடையிலானஆண்,பெண் இருபாலாருக்குமான உதை பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத் தில் இரு பிரிவுகளிலும் வவுனியா பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
கடந்த வாரம் வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் வவுனியா பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா தெற்கு பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் வவுனியா பிர தேச செயலக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா பிரதேச செயலகஅணியை எதிர்த்து வவுனியா வடக்கு பிரதேசசெயலகஅணிமோதிக் கொண்டது. இதில் வவுனியா பிரதேச செயலக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(த-ரி-23)

## மாகாண மட்டப் போட்டிகள் நாளை மறுதினம் ஆரம்பம்

வலி.வடக்கு, மே 7
வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் நடைபெறவுள்ள அரைமரதன் ஓட்டப் போட்டியுடன் ஆரம்பமாகவுள்ளன.
நாளை மறுதினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள அரை மரதன் ஓட்டப் போட்டியைத் தொடர்ந்து அடுத்தடுத்த கட்டங்களாகப் பெரு விளையாட்டுப் போட்டிகள் முறையே முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று ஜூன் மாதம் இறுதிப் பகுதியில் நிறைவடையும். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.
கடந்த காலங்களில் முதல் மூன்று இடங்களுக்குள் வருபவர்களுக்கு மட்டுமே சான்றிதழ்கள் வழங்குவது என்று மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் நடப்பாண்டில் முதல் தடவையாக தனிநபர் போட்டிகளில் முதல் ஆறு இடங்களுக்குள் வருபவர்களுக்கும் குழுநிலைப் போட்டிகளில் முதல் நான்கு இடங்களுக்குள் வருபவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக விளையாட்டுப் போட்டிகளுக்குப் பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
மாகாண விளையாட்டுப்போட்டி சம்பந்தமாக நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட வட மாகாண கல்வி அமைச்சரே இதனை வலியுறுத்தியதாகவும், இதன் அடிப்படையிலேயே இம்முறை அதிக எண்ணிக்கையானவர்கள் மாகாண மட்டத்தில் சான்றிதழ்களை பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி-86)




## கராச்சியில் வேண்டாம்

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. அப்போது டெஸ்ட் ஆட்டமொன்றில் பங்கேற்க பஸ்ஸில் சென்ற போது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதன் பின்னர் இன்றுவரை பாதுகாப்புக் காரணங்களுக்காக எந்த அணியும் பாகிஸ்தான் சென்று விளையாட வில்லை. ஆனால் பாகிஸ்தானில் விளையாடச் சம்மதித்த சிம்பாப்வே கராச்சியில் விளையாட மறுப்புத் தெரிவித்துள்ளது.

இரண்டு 'ரி–20' ஆட்டங்கள், 3 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடர்களில் பங்கேற்க, சிம்பாப்வே அணி இந்த மாதம் பாகிஸ்தான் செல்கிறது. மே 19 இல் பாகிஸ்தான் செல்லும் சிம்பாப்வே அணி, 22ஆம் திகதி, 24ஆம் திகதிகளில் 'ரி–20' ஆட்டங்களிலும் 26ஆம், 29ஆம், 31ஆம் திகதிகளில் ஒருநாள் ஆட்டங்களிலும் விளையாடுகின்றது. கராச்சியில் சென்று விளையாடுவதற்குச் சிப்பாப்வே மறுத்து விட்டதால் அனைத்து ஆட்டங்களும் லாகூர் மைதானத்தில்தான் நடக்கிறது. இலங்கை அணியின் மீது தீவிரவாதத் தாக்குதல் கராச்சியில் வைத்தே நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)




# பாகிஸ்தான் அணி பலமான ஆரம்பம்



பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் யுனிஸ்கான், அசார் அலி ஆகியோரின் சதமும் இணைப்பாட்டமும் கைகொடுக்க முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் 323–3 என்ற வலுவான நிலையில்உள்ளது.

பங்களாதேஷ் – எதிர் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் தொடர் நேற்று பங்களாதேஷின் மிர்பூரில் ஆரம்பமானது.

ஏற்கனவே நடந்து முடிந்த முதலாவது டெஸ்டை பாகிஸ்தானுடன் போராடி பங்களாதேஷ் சமப்படுத்தி வரலாற்றுச் சாதனை படைத்த நிலையில் இரண்டாவது டெஸ்ட்டில் வெல்வதன் மூலம் கிண்ணத்தைக் கைப்பற்றலாம் என்ற நிலைப்பாட்டில் இரு அணிகளும் களமிறங்கின. அதிலும் ஒருநாள், 'ரி–20' தொடர்களை பங்களாதேஷிடம் பறிகொடுத்த காரணத்தினால் டெஸ்ட் தொடரை யாவது குறைந்த பட்சம் கைப்பற்றி ஆறுதல் அடைய வேண்டும் என்பதில் பாகிஸ்தான் தீவிரமாக உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ்–பாகிஸ்தானை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணிக்க, களமிறங்கினர் அஸ்லாமுடன் ஹபீஸ். முதல் டெஸ்ட்டில் இரட்டைச் சதம் விளாசிய ஹபீஸ் இரண்டாவது டெஸ்ட்டில் பத்து ஓட்டங்களைத் தாண்டவில்லை. அஸ்லாம் பதின்மத்தில் அடங்கிப் போக பாகிஸ்தானின் தொடக்க வீரர்கள் இருவரும் 58 ஓட்டங்களிலேயே பவிலியனுக்குச் சென்று விட்டனர். அணித் தலைவர் அசார் அலியுடன் இணைந்தார் அனுபவ வீரர் யுனிஸ்கான். ஆரம் பத்தில் நிதானித்த இணைப்பாட்டம் பின்னர் நிலைக்கவும் செய்தது. மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டியது பாகிஸ்தான். படிப்படியாக இணைப்பாட்டம் நூறை எட்டி ஆளுக்கொரு அரைச் சதமும் கடந்தாயிற்று. இலக்கு மட்டும் விழுந்தபாடில்லை. வழக்கம் போல யுனிஸ்கானின் இன்னிங்ஸில் சிக்சரும் இருக்கத் தவறவில்லை. படிப்படியாக ஓட்டங்களைச் சேர்த்து ஆளுக்கொரு சதமும் கடந்து விட்டார்கள். இணைப்பாட்டம் 250 ஓட்டங்களை எட்டியபொழுது ஒருவாறாக 148 ஓட்டங்களுடன் யுனிஸ்கானின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. பாகிஸ்தான் 258–3. யுனிஸ்கான் விடைபெற களத்தில் பாகிஸ்தானின் தடுப்புச்சுவர் என்று வர்ணிக்கப்படும் மிஸ்பா வழக்கத்துக்கு மாறாக வந்த வேகத்திலேயே சிக்சருடன் ஆரம்பித்தார். மொத்தத்தில் முதலாம் நாள்ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் 323–3.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக சகிட் இரண்டு இலக்குகளையும் இஸ்லாம் ஒரு இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (த–ரி)




## இந்தியா-பாகிஸ்தான் மீண்டும் சாத்தியமா?

இந்தியாவுடனான கிரிக்கெட் தொடரை மீண்டும் நடத்தும் முயற்சியாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியர்கான் இந்த வாரம் இந்தியா சென்று கொல்கத்தாவில் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால் மியாவைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தியா–பாகிஸ்தான் தொடரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடத்துவது தொடர்பாக ஆலோசனை செய்யப்படுகிறது.

இது தொடர்பாக சகாரியர்கான் தெரிவித்ததாவது:–

பாகிஸ்தானுடனான தொடரை மேற்கொள்ள இந்திய கிரிக்கெட் சபையும் தயாராக இருக்கிறது. ஆனால் இது தொடர்பாக முடிவுகள் அனைத்தும் இந்திய அரசிடமே உள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் டிசெம்பர் மாதம் இந்தியாவுடன் 3 டெஸ்ட், 5 ஒருநாள், மற்றும் இரண்டு 'ரி–20' என்ற நீண்ட தொடரை விளையாட ஆர்வமாக உள்ளோம். இதற்காக டால்மியா மற்றும் இந்திய அரசின் முக்கிய தலைவர்களைச் சந்திப்பேன்– என்றார். 2008ஆம் ஆண்டின் மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் உறவும் இல்லாமல் போனமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## யூசுப் பதானால் கொல்கத்தா எழுச்சி




கடந்த சில வருடங்களாகக் கொல்கத்தா சார்பாக விளையாடிவரும் யூசுப்பதான் நடப்பு ஐ.பி.எல். தொடரில் பெரிதாகப் பிரகாசிக்கவில்லை. ஆனாலும் யூசுப்பதான் தமது அணியின் மிகப் பெறுமதியான வீரர் என்று புகழாரம் சூட்டியுள்ளார் கொல்கத்தாவில் இளம் வீரர் பாண்டே.

யூசுப் பதான் தொடர்பாக பாண்டே தெரிவித்ததாவது:–

யூசுப் நடப்பு ஐ.பி.எல். தொடரில் பெரிதாகப் பிரகாசிக்கவில்லை என்ற விமர்சனங்கள் எல்லாம் வீணானவை. அவர் ஒரு சிறந்த சகலதுறை வீரர். அத்துடன் அனுபவ வீரரும் கூட. கொல் கத்தாவின் பெறுமதியான வீரர்களில் [illegible]னும் ஒருவர். ஒரு வீரரால் தொடர்ச்சி[illegible]க வெற்றிக்கு பங்களிப்புச் செய்ய முடியாது. இது அனைத்து வீரர்களுக்கும் பொதுவானது யூசுப் இதற்கு விதிவிலக்கல்ல. கொல்கத்தாவின் கடைசி நேர மிக முக்கிய ஆட்டங்களில் யூசுப்பதானால் கொல்கத்தா எழுச்சி பெறும்–என்றார்.

ஹைதராபாத்துக்கு எதிரான ஆட்டத்தில் ஒரு பந்துப் பரிமாற்றத்தை மட்டுமே வீசிய யூசுப் 19 ஓட்டங்களை அள்ளிக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## ஆஸ்திரேலியாவைப் புறக்கணித்து இங்கிலாந்தை விரும்பும் கிலெஸ்பி



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ஓய்வுபெற்ற முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜேசன் கிலெஸ்பி. தற்போழுது இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட் அணியான யார்க்ஷயர் அணியின் பயிற்சியாளராகக் கடைமையாற்றி வருகிறார். இந்த நிலையில் ஆஸ்திரேலிய கழக அணியொன்று கிலெஸ்பியை பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்ய அணுகியுள்ளது. ஆனால் கிலெஸ்பி அந்த வாய்ப்பை நிராகரித்துள்ளார்.

கிலெஸ்பி ஆஸ்திரேலியராக இருந்தபோதிலும் ஆஸ்திரேலியாவுக்கு கொடுக்காத முக்கியத்துவத்தை இங்கிலாந்துக்கு கொடுத்த காரணத்தினால் இந்த நடவடிக்கையால் கவரப்பட்ட இங்கிலாந்துக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கிலெஸ்பியை இங்கிலாந்தின் பயிற்சியாளராக்கப் பரிசீலித்து வருகிறது. இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத் தொடரில் காலிறுதிக்கு முன்னேறாமல் லீக் சுற்றுக்களுடன் ஆட்டத்தை முடித்துக் கொண்ட காரணத்தினாலும், மேற்கிந்தியத்தீவுகளுடனான இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் தோல்வியடைந்த காரணத்தினாலும் தற்பொழுது இருக்கும் இங்கிலாந்தின் பயிற்சியார் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்ற நிலையிலேயே புதிய பயிற்சியாளராக கிலெஸ்பியின் பெயர் பரிசீலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## மும்பை முன்னேறும் - ரோகித்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லியை திரில்லாக வீழ்த்தி தொடர்ச்சியாக நான்காவது வெற்றியைப் பதிவுசெய்து மும்பை அணி நான்காவது இடத்துக்கு முன்னேறியது.

இந்த வெற்றியின் பின்னர் மும்பை அணித்தலைவர் ரோகித் சர்மா தெரிவிக்கையில் 'டெல்லியை வீழ்த்தியதில் துடுப்பாட்ட வரிசையே பெரும் பங்களிப்புச் செய்துள்ளது. அதிலும் குறிப்பாக இறுதிவரை நின்று போராடிய ராயிடுவின் இன்னிங்ஸும் இறுதியில் அதிரடியை கையிலெடுத்த பொலார்ட்டின் இன்னிங்ஸும் இல்லையென்றால் நிச்சயமாக டெல்லியை வீழ்த்தியிருக்க முடியாது. கடந்த தொடரைப்போலவே இந்தத் தொடரிலும் திரில் வெற்றிகள் மூலம் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவோம்' என்றார். (ரி)

# ஆஸியை ஆட்டிப்படைக்கவுள்ள சங்கா



இலங்கை அணியின் நட்சத்திர வீரரான குமார் சங்கக்கார, ஆஸ்திரேலிய உள்ளூர் அணியான ஹார்பட் ஹரிக்கன்ஸில் விளையாட 2 வருடங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இடம் பெறவுள்ள பிக் பாஷ் லீக் தொடரில் ஹார்பட் ஹரிக்கன்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் சங்கா தெரிவிக்கையில் 'பிக் பாஷ் தொடர் ஒரு உலகத்தரம் வாய்ந்த போட்டியாகும். இது ரசிகர்களுக்கு விருந்தளிக்க கூடியது. உலகத் தரம் வாய்ந்த சில முக்கிய வீரர்கள் இதில் இடம் பெறுகின்றனர். இலங்கை அணியுடன் நான் இங்கு வரும்போதெல்லாம் இந்த சூழ்நிலையை பெரிதும் விரும்புவேன். இங்கு அதிக நேரத்தை செலவிட விரும்புகிறேன்' என்று கூறியுள்ளார். (த–ரி)

# ஆஸி. வீரர்களுக்கு ஆப்பு



கடந்த ஐ.பி.எல். தொடரில் இறுதி ஆட்டம் வரை முன்னேறி இருந்த கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி நடப்பு தொடரில் மிகவும் மோசமான நிலையில் புள்ளிப்பட்டி யலில் கடைசியில் உள்ளது.

ஒன்பது ஆட்டங்களில் 7 தோல்வியால் அந்த அணி சுற்றுக்கான வாய்ப்பை பெறுவது மிகவும் கடினம். இன்னும் 5 ஆட்டம் எஞ்சியுள்ளது. பஞ்சாப் அணியில் உள்ள வெளிநாட்டு வீரர்கள் சிறப்பாக விளையாடாததே தோல்விக்குக் காரணமாகக் கருதப்படுகிறது. இதனால் வெளிநாட்டு வீரர்களைத் திருப்பி அனுப்ப கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி நிர்வாகம் ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. எல்லா வெளிநாட்டு வீரர்களையும் இல்லாமல் சிலரை அனுப்பலாம் என்றும் தெரிகின்றது. இது குறித்து இன்றோ அல்லது நாளையோ முடிவு செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

ஐ.பி.எல். வீரர்கள் ஒப்பந்த விதிப் படி 14 ஆட்டத்திலும் வெளிநாட்டு வீரர்கள் விளையாட வேண்டிய கட்டாயம் இல்லை. இதனால் அவர்களை திருப்பி அனுப்புவதன் மூலம் 20 சதவீதம் கட்டணத்தைக் கழித்து கொள்ளலாம். பஞ்சாப்பில் உள்ள 7 வெளிநாட்டு வீரர் களுக்குமான மொத்த செலவு இந்திய மதிப்பில் ரூபா 33.85 கோடியாகும். இந்த 7 பேரையும் தற்போது திருப்பி அனுப்புவதன் மூலம் இந் திய மதிப்பில் ரூபா 5 கோடியை மிச்சப் படுத்த முடியும். (த–ரி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

FIRST - FORM
பல்கலைக்கழக அனுமதிக்கான
விண்ணப்பம் சனிக்கிழமை (09.05.2015)
முதல் விநியோகம் செய்யப்படும்.
பூபாலசிங்கம் புத்தக சாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். 021 222 6693 | வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம். 021 222 1637



# ஸ்பெயின் ரென்னிஸ் முடிவுகள்

ஸ்பெயினில் நடக்கும் மாட்ரிட் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் விளையாட, டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி தகுதி பெற்றுள்ளார்.

இரண்டாவது சுற்றில் அமெரிக்காவின் கிறிஸ்டினா மிச்சேலுடன் நேற்றுமுன்தினம் மோதிய வோஸ்னியாக்கி 7–5, 6–0 என்ற நேர் செற்களில் வென்றார்.

மற்றொரு 2 ஆவது சுற்றில் முதல்தர வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் 6–4, 6–0 என்ற நேர் செற்களில் மிக எளிதாக வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். முன்னணி வீராங்கனைகளான மரியா ஷரபோவா, ஸ்வெட்லனா கஸ்னட்சோவா, அனஸ்டேசியா பாவ்லியுசென்கோவா, சமந்தா ஸ்டோசர், லூசி சபரோவா, ராபர்டா வின்சி, அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா, விக்டோரியா அசரென்கா, பெத்ரா குவித்தோவா ஆகியோரும் 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர். (த–ரி)

# ரொனால்டினோவின் உலக மகா நடிப்பு இது



மெக்சிக்கோ உதைபந்தாட்டத் தொடரில் எதிரணி வீரர் ஏதுவும் செய் யாமல் தவறி விழுந்து நடுவரால் மஞ்சள் அட்டை பெற்றுள்ளார் ரொனால்டினோ.

எதிரணி வீரர்களுக்கு மஞ்சள் அல்லது சிவப்பு அட்டையைக் கிடைக்கச் செய்ய, வீரர்கள் வேண்டு மென மைதானத்தில் விழுவது வழக்கமான ஒன்று. மெக்சிக்கோ லீக்கின் நேற்று முன்தின ஆட்டத்தில் குயி ரேயிட்டோ அணிக்காக விளையாடி வரும் ரொனால்டினோ, மொரிலோ அணிக்கெதிரான ஆட்டத்தின்போது, எதிரணி வீரர் ஏதும் செய்யாமல் இருக்கும்போதே மைதானத்தில் தவறி விழுந்தார். எதிரணிவீரர் தள்ளி விட்டதைப் போல் நடித்துள்ளார் இதனையடுத்து ரொனால்டினோவுக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. (த–ரி)

அதிபர் சேவை தரம் III வழிகாட்டி
விற்பனையாகின்றது
தொகுப்பு:- தவசேகர்
பூபாலசிங்கம், அன்னை, ஸ்ரீலங்கா, யாழ், துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, ஜோதி, கவிதா, சுஜன், இராமசந்திரா புத்தகசாலைகளில் பெற முடியும்.

சவுதி ராஜ்யத்துக்கு முதல் தடவையாகச் செல்லும் சாரதிகளுக்கு
இதோ ஓர் அரிய வாய்ப்பு

| | |
|---|---|
| Bus Driver-H/V Licence | - 1500+OT |
| Van Driver-L/V Licence | - 1300+OT |
| Electrician | - 1400+200+OT |
| Plumbers | - 1400+200+OT |
| Carpenters | - 1400+200+OT |

மேல்குறிப்பிட்ட வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன. தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். அத்துடன் வங்கிக் கடன் வசதி செய்துதரப்படும்.
எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் வெளிநாட்டவர்களால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படும்.
உடன் தொடர்புகொள்ள Lanka Voice
0777929475
E-mail:- lankavoicejobs@gmail.com
Arabiyan Gulf Enterprises
72/26, Sri Sangaraja M/w, Colombo-10 L.L.Np-969

EXPONET
Overseas Consultants
www.expogroup.lk
STUDY IN LATVIA
(SCHENGEN VISA)
வேலை வாய்ப்புக்களுடன்
நேரடி அனுமதிகள்
இலவசக் கருத்தரங்கு
கொழும்பில்
09/10-05-2015
VENUE:
EXPONET, Colombo Branch
9.30 am - 12.00 pm
மாணவர்களே!
அரிய சந்தர்ப்பம்
Visa பெற்ற மாணவர்களின் ஆவணங்களை பார்வையிட முடியும்.



▶ IATVIA அரச பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் Representative இனை சந்திப்பதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறமுடியும்
▶ May Intake இற்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ள விரையுங்கள்.
எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
▶ IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம் A/L 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்
▶ schengen Visa (Sehengen Union இல் உள்ள 26 நாடுகளுக்கும் சென்று பணிபுரிய முடியும்)
▶ ஒருவருடத்துக்கான கட்டணமாக Rs. 350,000/=
No: 379-1/2 Galle Road, Colombo-06
Tel : 011 7555511/14/18
Email : nimal@expogroup.lk
Hotline: 071 4150995
LEGAL REPERSENTATIVE FOR RTU (University)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.